**இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் குழுமம் - 2023**

**------------------------------------------------------------------------------------**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை மகாவலி அதிகாரசபை (''அதிகாரசபை'') மற்றும் அதன் நிறுவகிக்கும் கம்பனிகள் அடங்கிய குழுமத்தின் (''குழுமம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**குழுமம்**
**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, குழுமத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**இலங்கை மகாவலி அதிகாரசபை**
**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்று தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் ஒன்று வெளியிடுகின்றேன்.

குழுமத்தினுள் காணப்படும் வ/ப மகாவலி பண்ணை விலங்கு மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பராயம் ஒன்றை நான் வெளியிடுகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரஅதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு ஏற்படும் தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை மகாவலி அதிகாரசபை**

**1.5.1.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள மற்றும் தற்போது அதிகாரசபையினால் நிர்வகித்தல், செயற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் முன்னேற்றுதல் மேற்கொள்ளப்படுகின்ற 13 பிரதான அணைகளின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி என ரூபா 288.5 பில்லியன் தொகை 2023 ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 43 ஆம் பந்திக்கு இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட தொடர்புடைய உயர்தொழில் தகைமையுடைய சுயாதீன மதிப்பீட்டுத் உயர்தொழிலில் அங்கத்தவர் ஒருவர் அல்லது சபையொன்றினால் முறையான பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதிகாரசபைக்குச் சொந்தமான பிரதான அணைகள் உட்பட நிர்மாணிக்கப்பட்டவைகளின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மகாவலி பாரிய திட்டத்தின் கீழ் இனங்கண்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் அ.டொ. 514 மில்லியன் தொகைக்கான உமாஓயா பல்கரும அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2023 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மின் உற்பத்தி அலுவல்கள் 2024 மார்ச் 31 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அபிவிருத்தித் திட்டத்தை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்திட்டம் அ.டொ. 514 மில்லியன் தொகைக்கு திட்டமிடப்பட்டு எதிர்பாரக்கப்பட்டுள்ள மீதி வேலைப் பகுதிகளை பட்டியலிடப்பட்டு குறிப்பிட்ட தரப்பினரான மகாவலி அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சாரசபை 2024.05.31 திகதி கையொப்பமிட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண வேலைச் செலவுகள் இது வரை வழங்கியிருக்காத | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புஹுுலுபொல, டயரபா அணை நிர்மாணிப்புச் செலவுகளில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு இயலுமை காணப்படவில்லை. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் படி அந்த நியமத்தின் மூலம தேவைப்படுகின்ற அல்லது அங்கீகாரம் வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்படக்கூடாது எனினும், வளவ வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்திற்கு பெற வேண்டிய ரூபா 1,837,623 இற்கான காணி பயன்படுத்தல் கட்டணம் அந்தப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ள 05 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதிகள் என உட்படுத்தப்பட்டு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபைக்கு சொந்தமான 3001 நிதியக் கணக்கின் மீதியினுள் பல வருட காலமாக காணப்படுகின்ற கூட்டுத்தொகை 554,135,228 தொகைக்கான வரவு மீதிகள் மற்றும் கூட்டுத் தொகை 509,098,933 தொககைக்கான செலவு மீதிகளை உறுதிப்படுத்தி உரிய கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023.12.31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய காணி பயன்படுத்தல் கட்டண பதிவேட்டில், செலுத்த வேண்டிய மீதிகள் என சில பெயர்கள் பதியப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் வெவ்வேறாக காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 53 ஆம் பந்திக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படுகின்ற அனைத்து எண்ணிக்கை அளவான தகவல்களுக்காக கடந்த ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், ஒன்றித்த காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023.12.31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த ஒன்றித்த காசுப்பாய்ச்சல் கூற்றின் கடந்த மற்றும் நடைமுறை ஆண்டின் தகவல்கள் ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஒப்பீட்டு ரீதியான தகவல்களில் கணக்குக் காலப் பகுதி உட்படுத்தியிருக்கவில்லை. 2024 ஆண்டின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | அதிகாரசபையின் நிதி நிலைமைக் கூற்றில் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதிகள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 மற்றும் 54 பந்திகளுக்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்தப் பெறுமதிகளிடையே வித்தியாசங்கள் கீழ்வருமாறு ஆகும். | முன்னைய காலப் பகுதிகளுக்கான பிழைகளை சரி செய்து மீண்டும் வெளியிடும் கூற்றொன்று (ReStatement) தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முன்னைய ஆண்டுகளுக்குரிய பிழைகளை சரி செய்யும் போது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடும் போது தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | 2022 மீதி | 2022 மீண்டும் வெளியிடப்பட்ட மீதி |
|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்கள் | 111,447,032 | 111,472,690 |
| முதலீடுகள் | 235,989 | 235,925 |
| நடைமுறை வேலை | 8,738 | 39,113 |
| இருப்புகள் | 270,140 | 271,328 |
| வாணிப மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 4,576,005 | 4,803,174 |
| செலுத்த வேண்டிய மீதிகள் | 39,760,813 | 596,453 |
| திரண்ட நிதியம் | 70,823,574 | - |
| ஒதுக்கம் | (2,723,686) | 107,597,615 |
| இலாப நட்டக் கணக்கு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 7,869,744 | 7,820,774 |

நடைமுறை சாத்தியமாக முடிந்தளவு இனங்காணக்கூடிய விடயங்கள் இலங்கை பொத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி சரி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 71 மற்றும் 80 பந்திகளுக்கு இணங்க ரூபா 524,869,000 இற்கான செலுத்த வேண்டிய மீதிகள் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் என இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இனங்காணப்படாமல் மொத்த மீதியும் நடைமுறைப் பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகள், நடைமுறை அல்லது நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் என இனங்கண்டு 2024 நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் வெவ்வேறாக இனங்காண வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 71 மற்றும் 76 பந்திகளுக்கு இணங்க வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டிய ரூபா 5,089,330,000 இற்கான மீதி நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இனங்காணப்படாமல் ஒட்டுமொத்த மீதி நடைமுறைச் சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகள், நடைமுறை அல்லது நடைமுறை அல்லாத சொத்துக்கள் என இனங்கண்டு 2024 நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காண வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு இணங்க பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை என இனங்காணப்பட்டிருந்தவை இலகுவாக பணமாக மாற்றக்கூடிய குறுகிய கால மிகவும் உயர்ந்த திரவத் தன்மையுள்ள முதலீடுகளாக இருந்த போதிலும், எல் வலையத்தில் நடைமுறை | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சரி செய்வேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பணம் மற்றும் வைப்புக்கள் சரியான படிவத்தில் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் என காட்டப்பட வேண்டிய ரூபா 206,651 தொகைக்கான 03 மாத கால 02 நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் ரூபா 4,832,466 தொகைக்கான 01 வருடத்தில் முதிர்வடையும் 05 நிலையான வைப்புக்களின் பெறுமதி காசு மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், நடைமுறை அல்லாத சொத்துக்கள் என பீ வலையத்தில் ரூபா 40,224,961 தொகைக்கான 400 நாட்களுக்கான நிலையான வைப்புக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | அதிகாரசபையினால் 1984 – 1989 காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டப்பட்டிருந்த கிரயம் ரூபா 64,320,853 தொகைக்கான 02 காணித் துண்டுகளும், கொத்மலை கனிஷ்ட முகாமில் 54 வரிசை வீடுகளும், அதிகாரசபையின் வலய அலுவலகம், பிரிவுகள், உத்தியோகபூர்வ வீடுகள் மற்றும் சுற்றுலா பங்களா ஆகியன அமைந்துள்ள காணியை இனங்கண்டு அவற்றின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்து அந்த பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் ஆதனங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | அரலகம்வில பண்ணைக்காக 2022 மார்ச் 28 திகதி லேஸர் லெவலர் இயந்திரம் ஒன்று ரூபா 1,991,000 இற்கான தொகைக்கு கொள்வனவு செய்து அதனை பயன்படுத்துவதற்காக பொருத்துவதற்கு பொருத்தமான டிரக்டர் இயந்திரம் ஒன்று காணப்படாமையால் அந்த இயந்திரம் இதுவரை பயன்படுத்தாமல் காணப்பட்டது. அவ்வாறாயினும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பிரிவின் படி சொத்தொன்று பெறுமானத் தேய்வு கழித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டியதாவது அதனை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு ஆக்கப்பட்ட பின்னரே எனினும், 2023 ஆண்டில் இயந்திரத்திற்காக ரூபா 227,464 தொகை பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் பெறுமானத் தேய்வு கழிக்கும் கணக்கீட்டுக் கொள்கையாவது ஏதேனும நிலையான சொத்தொன்று கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு கழித்தலாகும். ஆதன்படி, ‘‘லேஸர் லெவலர் இயந்திரம்’’ கொள்வனவு செய்த நாள் முதல் பெறுமானத் தேய்வு கழிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் படி சொத்தொன்று பொறுத்தப்பட்டு பயன்படுத்துவதற்கு ஆரம்பித்த பின்னரே பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | அதிகாரசபைக்கு எதிரான 23 வழக்குகளுக்காக நிகழத்தக்க பொறுப்புக்கள் ரூபா 311,157,590 தொகை பிரதி பணிப்பாளர் (சட்டம்) இனால் இனங்கண்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதியை ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பந்தி 22 இன் படி தேவையானவாறு ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 இன் நியமத்தின் படி செயற்படுவதற்கு குறித்துக்கொண்டேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பொறுப்புக்களுக்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஔ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 33 ஆம் பந்திக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இனங்காணப்பட வேண்டிய எல் வலையத்தின் | ஏற்றுக்கொள்கின்றேன். நிலுவைக் காணி பயப்படுத்தல் கட்டணம் பெற வேண்டிய மீதிகள் என இனங்கண்டு | பெற வேண்டிய வருமாங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைக் காணி பயன்படுத்தல் கட்டணம் ரூபா 1,784,749 தொகையும், வளவ வலையத்தின் மண் செயற்திட்டம் செயற்படுத்திய 4 நபர்கள் / நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய காணி பயன்படுத்தல் கட்டணம் ரூபா 106,909,200 தொகையும், மணல் செயற்திட்டத்தை செயற்படுத்திய இரண்டு நபர்களிடம் அறவிடப்பட வேண்டிய பயன்படுத்தல் கட்டணம் ரூபா 3,214,200 தொகையும், விக்டோரியா வலையத்தின் உக்குவல, வாரியபொல வத்த இல் அமைந்துள்ள 02 ஏக்கர் காணியில் இருந்து 2001 ஒக்தோபர் 19 திகதி வரை உடைத்து அகற்றப்பட்டிருந்த சுண்ணாம்புக் கற்களுக்காக அறவிடப்பட வேண்டிய சேவைக் கட்டணம் மற்றும் நிலுவை குத்தகை தொகை ரூபா 2,051,060 தொகை மற்றும் சீ, எல், எச் மற்றும் வளவ வலையங்களின் கருங்கல் அகழ்வு தொடர்பாக 71 நபர்கள் / நிறுவனங்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவை காணி பயன்படுத்தல் கட்டணம் ரூபா 352,240,904 தொகையாக மொத்தம் ரூபா 466,200,113 இற்கான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மீதிகள் என இனங்கண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பனேன். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | அதிகாரசபை அதன் முதலீட்டு ஆதனங்கள் என இனங்கண்டிருந்த குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த காணிகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 இற்கு இணங்க நியாயமான பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட வேண்டிருந்த போதிலும், வளவ வலையத்தின் முதலீட்டு செயற்திடடங்களுக்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 104 காணிகளின் மொத்த பெறுமதி மதிப்பீட்டின் மீது 143.05 ஹெக்டயருக்கான 28 காணிகளின் பெறுமதி ரூபா 62,870,350 தொகை என கணக்கீடு செய்து 614.72 ஹெக்டயர்களுக்கான 23 காணிகளின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. அது தவிர வெளித்தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருநத விக்டோரியா வலைத்தின் திகன ஹொலிடே ரிஸோர்ட் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசத்தின் 4.23 ஹெக்டயர் முதலீட்டு ஆதனங்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டணம், இதுவரை செலுத்தப்படவில்லை. குத்தகையாளர்களுக்கு குத்தகை செலுத்தும் படி அறிவிக்கப்பட்டது. அதன்படி, முறையான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியொன்று இதுவரை தீர்மானிக்கப்பட்டிருக்காமையால் கணக்கீடு செய்யப்படாததுடன், இந்தக் காணித்துண்டுகளுக்காக முறையான பெறுமதி மதிப்பீடு பெற்ற பின்னர் குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிதயினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உழைத்தல் மற்றும் பல்வேறு செயற்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த காணிகள் முதலீட்டு ஆதன கணக்கீட்டு நியமத்தின் படி இனங்கண்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ங) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 57 ஆம் பந்திக்கு இணங்க பிந்திய ஊழியர் பங்களிப்பு நலன்கள் திட்டமிட்டு செயற்படுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 2024 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சரி செய்வேன். | நியமத்திற்கு இணங்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத் திட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்த வேண்டும். |
| (ச) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் 19 இன் வரைவிளக்கணத்தின் நலன்கள் திட்டம் என இனங்கண்டிருந்த ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு இயற்கணிப்புப் பொறிமுறை பயன்படுத்தி இனங்காணல் மற்றும் அதனை அளவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் அதற்கு இணங்கியிருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஊழியர் பணிக்கொடை ஏற்பாடுகள் இயற்கணிப்புப் பொறிமுறை பயன்படுத்தப்பட்டு இனங்காணல் மற்றும் அளவை செய்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஞ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 36 சேதம் விளைவித்தல் நியமத்தின் படி அதிகாரசபைக்கு சொந்தமான ஈ வலயத்தில் ரூபா 4,244,607 தொகை கிரயத்தையுடைய தீப்பற்றி சேதம் விளைவிக்கப்பட்ட 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் வளவ வலையத்தில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கட்டம் II காரணமாக சேதம் விளைவிக்கப்பட்ட நீர்ப்பாசனக் கால்வாய்கள், கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் பிரிப்புக் கால்வாய்களுக்குரிய சேதம் விளைவித்தல் நட்டத்தை இனங்கண்டு அறிவித்திருக்கவில்லை. | 2024 சேதம் விளைவித்தல் நட்டத்தை இனங்கண்டு சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். சேதம் விளைவிக்கப்பட்ட நீர்ப்பாசனக் கால்வாய்கள், கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் பிரிப்புக் கால்வாய்களுக்குரிய சேதத்திற்காக ரூபா 43,884,000 இற்கான தொகையொன்று China State Construction Engineering Co-operation நிறுவனத்தில் இருந்து 2021.03.10 திகதி அதிகார சபைக்கு கிடைத்திருந்தது. நட்டமொன்று ஏற்பட்டிருக்காததுடன், அந்தக் கணக்கீட்டு சீராக்கல்கள் 2024 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க சொத்துக்களின் சேதம் விளைவித்தல் நட்டத்தை இனங்கண்டு அறிவிக்க வேண்டும். |

#### 1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்கு அணைகள் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து ரூபா 671,503,748 தொகையும், மொரகஹகந்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 536,539,275 தொகையும், தட்பவெப்ப பக்க விளைவுகளை குறைக்கும் செயற்திட்டத்திலிருந்து | அதிகாரசபைக்கு செயற்திட்டங்களிலிருந்து முறையான ஆவணங்களுடன் கிடைத்திருந்த அனைத்துச் சொத்துக்களும் சரியான களஞ்சியக் கொள்கைகளின் படி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய செயற்திட்டங்களின் மூலம் அவ்வாறு சொத்துக்கள் | செயற்திட்டங்களில் இருந்து கிடைக்கக்கூடிய சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 325,457,540 தொகை என சொத்துக்கள் கிடைக்கப் பெற்று மீளாய்வாண்டளவில் முறையே ரூபா 589,325,677 தொகை, ரூபா 466,896,356 தொகை மற்றும் ரூபா 78,348,847 இற்கான சொத்துக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளதென கூறிய போதிலும், முறையான செய்முறை ஒன்றின் மீது கிடைக்கப் பெற்றிருந்த பண்டங்களுக்காக பண்ட பெறுவனவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள அனைத்துச் சொத்துக்களும் அதிகாரசபைக் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தபுத்தேகம இயந்திர வேலைத்தளத்தில் பொறுப்பில் காணப்படுகின்ற மொரகஹகந்த செயற்திட்டத்திலிருந்து கிடைத்திருந்து. 16 வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்தினால் இந்த 16 வாகனங்கள் (பார இயந்திரங்கள்) மகாவலி அதிகாரசபையின் B, D, E, H மற்றும் மொரகஹகந்த வலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த வாகனங்களை அதிகாரசபைக்கு உரித்தாக்கும் படி வரிசை அமைச்சுச் செயலாளரிடம் வேண்டப்பட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அந்த வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | செயற்திட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய சொத்துக்களை இனங்கண்டு பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | எல் வலையத்தில் ரூபா 4,832,466 தொகைக்கான நிலையான வைப்புக்களுக்காக 2023 ஆண்டிற்குரிய வட்டி ரூபா 1,000,911 தொகையினை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வட்டி வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | நீர்ப்பாசன அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேட்டின் படி அமைச்சுக்குச் சொந்தமான 241 வாகனங்கள் மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட போதிலும், அவற்றில் 23 வாகனங்கள் போக்குவரத்து பிரிவின் பதிவேட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்கீடு செய்திருக்கவில்லை. | அதிகாரசபை மற்றும் அமைச்சுக்கிடையே வாகனம் சாட்டுதல் அலுவல்கள் முறையான இணைபொன்றின் கீழ் மேற்கொள்வதற்கும் வாகனங்களை உரிய முறையில் உரிமையை பரிமாரிக்கொள்வதற்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபைக்கு கிடைத்துள்ள வாகனங்களின் உரிமையை உரிய முறையில் உறுதிப்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,089,330,000 தொகை ஆகும். அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள பெற வேண்டிய மீதிகள் ரூபா 434,649,000 | 2024 நிதிக்கூற்றுக்களுடன் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாகும். அதனை அறவீடு செய்தல் நிச்சமற்ற தன்மையொன்று காணப்பட்டதுடன், அதற்காக ஒதுக்கம் ஒன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி மகாவலி லய்வ்ஸ்டொக் மற்றும் அக்ரோ என்டபிரைஸஸ் (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 12,710,820 தொகை காணப்பட்டதுடன், அந்தக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு பெற வேண்டிய மீதி என ரூபா 5,820,430 தொகை காணப்பட்டது. அதன்படி, அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய மற்றும் மகாவலி லய்வ்ஸ்டொக் மற்றும் அக்ரோ என்டபிரைஸஸ் (தனியார்) கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியிடையே ரூபா 6,890,390 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 6,890,390 இற்கான வித்தியாசத்திற்கான காரணம் முன்னைய ஆண்டுகளின் போது எச் வலயத்திற்கான நிதிக்கூற்றுக்களில் மற்றும் எச் வலயத்தின் நிராவிய பண்ணையின் நிதிக்கூற்றுக்கள் இரண்டிலும் மகாவலி லய்வ்ஸ்டொக் மற்றும் அக்ரோ என்டபிரைஸஸ் (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய இரண்டு மீதிகளையும் கூட்டி ஒரு மீதியாக காட்டப்பட்டமையாகும். மேலும், கம்பனி மாத்திரம் தமது கணக்குகளில் இனங்கண்டிருந்த ''பொது இருப்பு'' பெறுமதியாகிய ரூபா 446,460 இற்கான மீதியும் மேற்கூறிய வித்தியாசத்திற்கான காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், கம்பனியினால் நிராவிய பண்ணைக்கு சாட்டப்பட்டிருந்த கட்டிடங்களின் தேறிய பெறுமதியாகிய ரூபா 7,336,850 இற்கான மீதி இவ்வாறு பண்ணையினால் செலுத்த வேண்டிய மீதியொன்றென இனங்காண்பதற்கான காரணத்தை பகுப்பாய்வு செய்தல் மற்றும் முதலீட்டுக் கணக்குகளை இணக்கஞ் செய்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன். | மீதிகளிடையே வித்தியாசங்களை இனங்கண்டு கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கீழ் கொத்மலை ஓயா சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான பெற வேண்டிய வருமானம் 2024 மே 29 திகதி அளவிலும் கிடைத்திருக்காததுடன், அவற்றை பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்காக காணிகள் பயன்படுத்தல் தொடர்பான கொடுப்பனவு பிரதேச செயலாளருக்கு செலுத்தப்படுகின்றதெனவும், அதனால், மகாவலி அதிகாரசபைக்கு மேலதிக கொடுப்பனவொன்று மேற்கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சிக்கலை தீர்த்துக்கொள்வதற்காக சட்டமா | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிபரின் ஆலோசனையை தற்போது பெற்றுள்ளதுடன், செயற்திட்டத்தின் அபிவிருத்தியுடன் அடுத்த கட்டத்திற்காக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | |

### 1.5.1.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வ/ப மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனியில் முதலீடு ரூபா 10,000,000 தொகையாக காணப்பட்டதுடன், அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பங்குச் சான்றிதழ்கள், கைமாறு தீர்மானிக்கப்பட்ட முறை மற்றும் அது தொடர்பான பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அந்தக் கமபனிக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த அதிகாரசபையின் தபுத்தேகமவில் அமைந்துள்ள 25 ஏக்கர்கள் கொண்ட நிராவிய பண்ணை 2019 ஆண்டு வரை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் குத்தகைக் காலத்தை நீடிப்பதற்கு அல்லது அந்த மீண்டும் உரித்தாக்கியிருக்கவில்லை.<br>அதிகாரசபைக்கு சொந்தமான 25 ஏக்கர்களைக் கொண்ட கலங்குட்டிய பண்ணையும் இந்தக் கம்பனிக்கு 2010 ஆண்டு குத்தகைக்கு கொடுத்திருந்த போதிலும், முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அந்தப் பண்ணையை குத்தகைக்கு கொடுத்துள்ள முறை, குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள காலம் மற்றும் நிலுவை குத்தகை தொகை ஆகிய ரூபா 28,352,000 தொகை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதுள்ளது. | இந்தக் கம்பனி பண்ணை விலங்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்ற கம்பனியொன்றென செயற்படுகின்றது. கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று எனது தலைமையின் கீழ் தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபை, குறிப்பிட்ட கம்பனியின் மற்றும் அதிகாரசபையின் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் 2024.10.14 திகதி கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அங்கு இந்த சிக்கல்களுக்காக இரண்டு தரப்பினரிடையே காணப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணங்களை பரிமாறி அவற்றை ஆய்வு செய்து மீண்டுமொரு கலந்துரையாடல் 2024 நவம்பர் முதலாம் வாரத்தில் நடாத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். அதன்படி, இந்தச் சிக்கலை தீர்த்துக்கொள்வதற்காக எதிர்பார்க்கின்றேன். மேலும், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பங்கு உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட கம்பனி 2021 ஆண்டிற்காக கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பித்திருந்த | முதலீடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி, நிராவிய மற்றும் கலங்குட்டிய பண்ணைகளுக்குரிய குத்தகை உடன்படிக்கைகளை நீடிப்பதற்கு அல்லது அவற்றை திருப்ப உரித்தாக்குவதற்கான உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருடாந்தக் கூற்றில் (Annual Return) மகாவலி அதிகாரசபைக்கு 100,000 பங்குகள் வழங்கப்பட்டுள்ளதென காட்டப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகாரசபையினால் 2023 திசெம்பர் 21 திகதி அளவில் குத்தகை அறவிடக்கூடிய காணிகள் 18766 ஹெக்டயர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 6,114.21 ஹெக்டயர் தொகை எனப்படும் ரூபா 2,810,494,000 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அது சதவீதமாக மொத்த குத்தகைக் காணிகளின் 32.6 சதவீதம் ஆகும். அதன்படி, காணிகளின் நியாயமான பெறுமதி கணக்குகளின் மூலம் சித்தரித்துக் காட்டப்படாததுடன், சரியான தன்மை மற்றும் அந்தக் காணிகளில் நிலவுகின்ற பெறுமதிகள் தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | முறையான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ஒன்று இதுவரை தீர்மானிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வு செய்யப்படாததுடன், இந்தக் காணித் துண்டுகளுக்காக முறையான பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொண்ட பின்னர் குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பல்வேறு செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் முதலீட்டு ஆதனங்கள் என கணக்கீட்டு நியமத்தின் படி இனங்கண்டு பெறுமதியினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.2 வ/ப பண்ணை விலங்கு மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி**

**1.5.2.1 சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருகோட்டே பண்ணையில் 1,113 ஏக்கர் 0 ரூட் 37.76 பர்சஸ் இற்கான காணி மற்றும் தம்மின்ன பண்ணையின் 100 ஏக்கர் காணி கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான கணக்கீட்டு நியமம் 17.04 பந்தியின் படி இந்தக் காணிகளின் பெறுமதி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் சொத்துக்கள் என காணிகள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. கம்பனிக்கு காணி உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டொன்றின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த அலுவலக உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீள்மதிப்பீட்டின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 640,000 இற்கான இலாபம் ஒன்று | மீள்மதிப்பீட்டு பெறுமதியும் (Additions) சேர்ப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அதனை வேறுபடுத்தி Additions மற்றும் Re valuations என சரி செய்யப்பட்டு பதிவேடு காணப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் பந்தி 17 இற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) | முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல் என ரூபா 814,905 தொகை வருவாய் ஒதுக்கத்திலிருந்து கழித்து ரூபா 1,274,358 தொகை கூட்டியிருந்த போதிலும், சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 10.23 இன் படி அதற்கான வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடைமுறை சீராக்கல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 28 இன் 18 இன் படி பணிக் கொடை கழிக்கும் போது இயற்கணிய பெறுமதி கணிக்கும் அடிப்படையாக கொண்டு பணிக்கொடை பொறுப்பு கணிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், கம்பனி அதற்கு இணங்கியிருக்கவில்லை. மேலும் சேவைக் காலம் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட 07 ஊழியர்களுக்காக சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 28 இன் படி ரூபா 228,662 தொகைக்கான பணிக்கொடைப் பொறுப்பு கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | நியமத்திற்கு இணங்க இயற்கணிய முறை கடைபிடிக்கப்பட்டு பணிக்கொடை பொறுப்புக்கள் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | வர்த்தக மரங்கள் என விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த தம்மின்ன பண்ணையின் 195 தேக்கு மரங்கள் மற்றும் கிராந்துருகோட்டே பண்ணையில் 211 தேக்கு மரங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் 10 ஆம் பந்தியின் படி பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய | கிராந்துருகோட்டே மற்றும் தம்மின்ன பண்ணைகளின் தேக்கு மரங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் நியமனம் செய்யப்பட்ட குழுவொன்றின் மூலம் இந்த மரங்களை பெறுமதி மதிப்பீடு செய்து அந்தப் பெறுமதி 2024 ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு | நியமத்திற்கு இணங்க இந்த மரங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து அந்தப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |

**1.5.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,154,681 தொகைக்கான இருப்பு வித்தியாசம் மற்றும் ரூபா 1,113,911 தொகைக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு சீராக்கியிருக்கவில்லை. ரூபா 383,670 தொகைக்கான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் அதிகரிப்பு காசு உட்பாய்ச்சல் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை ரூபா 1,916,226 இற்கான காசு வெளிப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது. முதலீட்டுத் தொழிற்பாடுகளின் ரூபா 155,172 இற்கான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தனதாக்கல் ஒன்று பணம் உட்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 903,614 இற்கான பணம் வெளிப்பாய்ச்சல் ஆகும். காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கல் மேற்கொள்ளத் தேவையில்லாத ரூபா 459,454 இற்கான முன்னைய ஆண்டுகளின் சீராக்கல்கள் தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் ஒன்று என காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட தம்புத்தேகமவில் அமைந்துள்ள நிராவிய பண்ணை, கந்தளாய் பண்ணை, பொலன்னறுவையில் அமைந்துள்ள சித்தபுர பண்ணை மற்றும் வெலிகந்தவில் அமைந்துள்ள முத்துவெல்ல பண்ணை 2005 – 2010 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் முறையான ஆவணங்கள் பரிமாரப்படாமல் மகாவலி அதிகாரசபைக்கு சாட்டப்பட்டிருந்தது. அந்தப் பண்ணைகளுக்கு சொந்தமான கிரயம் ரூபா 22,336,573 | கம்பனி நிருவாகத்திலிருந்து அகன்றிருந்த கந்தளாய் சித்தபுர முதுவெல்ல, துங்கம ஆகிய பண்ணைகளின் சொத்துக்கள் 2024 ஆண்டில் கம்பனியினால் பௌதீக மெய்மையாய்வதற்காக பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு மெய்மையாய்தல் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அந்தக் குழு மகாவலி அதிகாரசபையின் அங்கத்தவர் ஒருவரையும் உட்படுத்தி இந்தக் கருமத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களை மாத்திரம் கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கான கட்டிடங்கள் மற்றும் பொருத்துக்கள், 26 வாகனங்கள், 45 அலுவலக உபகரணங்கள், 63 இயந்திர உபகரணங்கள், 03 மின் பிறப்பாக்கிகள் மற்றும் 260 தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கம்பனியினால் பயன்படுத்தியிருக்காத போதிலும், கம்பனியின் கணக்குகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்தச் சொத்துக்களை மகாவலி அதிகாரசபை அல்லது கம்பனியினால் பௌதீக ரீதியாக கணிப்பீடு செய்திருக்கவில்லை. | அறிவிக்கின்றேன். | |
| (இ) | 2013 ஜனவரி முதல் 2023 திசெம்பர் வரையான 110 மாதம் காலத்திற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 25,840,605 இற்கான பங்களிப்புத் தொகையொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 04 திகதி அளவிலும் செலுத்தியிருக்காததுடன், அது தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 6,208,029 தொகைக்கான மிகை விதிப்பினையும் கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் கணக்கீடு செய்யப்படும். | அனைத்துப் பொறுப்புக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஜுலை முதல் 2023 திசெம்பர் வரை 42 மாத காலத்திற்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,345,988 இற்கான பங்களிப்புத் தொகை செலுத்தியிருக்காததுடன், அது தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 652,809 தொகைக்கான மிகை விதிப்பினையும், கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் கணக்கீடு செய்யப்படும். | பொறுப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி இலங்கை மகாவலி அதிகாரசபையிலிந்து கம்பனிக்கு பெற வேண்டிய மீதி ரூபா 5,820,430 தொகை எனினும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி அதிகாரசபையினால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 12,710,820 தொகையாக காணப்பட்டமையால் மீதிகளிடையே ரூபா 6,890,390 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மகாவலி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மீதியொன்றும் காணப்படவில்லை. பெற வேண்டிய மீதியில் வித்தியாசம் என காட்டப்பட்டுள்ள ரூபா 446,460 தொகை மீதி மகாவலி அதிகாரசபைக்கு நிராவிய பண்ணையை ஏற்றுக்கொண்ட 2010.09.30 திகதி அளவில் பண்ணைக்கு சொந்தமாக காணப்பட்ட உற்பத்தி மற்றும் மூலப்பொருள் இருப்பின் | இந்தப் பெற வேண்டிய பணம் அதிகாரசபையில் இருந்து பெற்றுக்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதி என உறுதிப்படுத்துகின்றேன். | |
| (ஊ) | மகாவலி பொருளாதார ஏஜன்ஸியின், கொத்மலை பால் அபிவிருத்தி நிதியத்தின், ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம், வெளிநாட்டு உதவிகள் மற்றும் மூலதன ஒதுக்கம் என காட்டப்பட்டிருந்த ரூபா 406,061,033 இற்கான மீதிகள் தொடர்பாக போதியளவு விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 2009 ஆண்டின் பண்ணை விலங்கு அபிவிருத்திப் பிரிவின் இறுதிக் கணக்குகளில் காணப்பட்ட இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட ஆவணங்கள் கம்பனியிடம் காணப்படவில்லை. இது தொடர்பாக பணிப்பாளர் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு மகாவலி அதிகாரசபைக்கு இது தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்வதற்காக முயற்சி எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு நேரடியாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | சேதமுற்ற பொருட்களை அகற்றுவதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 502,203 இற்கான நட்டம் இலாப நட்டக் கணக்கில் சீராக்கல் மேற்கொள்வதற்குப் பதிலாக மீள்மதிப்பீட்டு இலாபத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சேதமுற்ற பொருட்களை மீள்மதிப்பீட்டுக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொண்டு சரி செய்கின்றேன். | கணக்கீட்டு வழுக்கல் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நிராவிய பண்ணையில் 06 ஊழியர் தொடர்பாக ரூபா 1,729,889 இற்கான நிலுவை ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை மற்றும் ரூபா 864,945 இற்கான மிகை விதிப்புத் தொகை செலுத்தப்படாமல் புறக்கணித்திருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த நிலுவைத் தொகையின் பகுதியொன்றான ரூபா 402,513 இற்கான பங்களிப்புத் தொகை மற்றும் மிகை விதிப்புக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக தகவல்கள் கம்பனியினால் கால வரையறையினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ரூபா 2,030,402 இற்கான செலுத்த வேண்டிய மீதி குறைவடைந்ததுடன், அந்த மீதியை ரூபா 50,000 இற்கான தவணைகளில் செலுத்துவதற்காக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. | அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 05 வருடங்களை மிகைத்துள்ள செலுத்தப்பட்டிருக்காத பெறுமதி கூட்டிய வரி, புரழ்வு வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி தொடர்பாக செலுத்த வேண்டிய தண்டப் பணமாகிய ரூபா 1,797,312 தொகையினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நியதிச் சட்டப் பொறுப்புக்களை தீர்த்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | 2019 ஆண்டில் சொத்துக்கள் | 2019 ஆண்டில் மீள்மதிப்பீட்டு | மீள்மதிப்பீட்டு இலாபம் |

| | | |
|---|---|---|
| மீள்மதிப்பீடு செய்யும் போது உருவாகிய ரூபா 213,480 இற்கான மீள்மதிப்பீட்டு இலாபம் மூலதன ஒதுக்கத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் வருமான ஒதுக்கத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இலாபத்தின் தவறினை சரி செய்தல் 2024 ஆண்டில் கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1981 இன் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 72 | காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது அளவை செய்து வரைபுகள் தயாரித்தல் அல்லது பொருத்தமான காணியை தெரிவு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தக் கட்டளைக்கு புறம்பாக 2024 ஆண்டில் சீ வலையத்தில் கிராந்துருக்கோட்டே பிரதேச அலுவலகத்தில் நடைபெற்ற காணிக் கச்சேரியில் தெரிவு செய்யப்பட்ட 99 பேருக்கு காணிகள் காட்டப்படாமல் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | 2014 ஆண்டின் போது காணிகளின் அனுபப்பினை ஒப்படைக்காமல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு, அனுமதிப்பத்திரதாரர்களுக்கு பகிர்வதற்கு பொருத்தமான காணிகள் இனங்கண்டிருந்த போதிலும், 2022/11/11 திகதி முதல் ஜனாதிபதி செயலாளரினால் வழங்கியிருந்த எழுத்துமூல அறிவுறுத்தலின் படி காணிகளை விடுவிக்கும் அலுவல்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் இந்த விடயம் மேற்கொள்ள முடியாமல் போனது. | பொருத்தமான காணிகளை தெரிவு செய்து அளவை செய்து வரைபுகள் தயாரித்த பின்னர் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 9(1) | சட்டத்தின் III ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மாத்திரம் வருமான வரி செலுத்துவதில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதிகாரசபை அந்த அட்டவணையை அடங்கியிருக்காத போதிலும் வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 03/2015 மற்றும் 2015.06.17 திகதிய சுற்றறிக்கைக்கு பந்தி 106 இற்கு இணங்க மகாவலி அதிகாரசபை அரை அரச நிறுவனம் ஒன்றாகும். (Semi Government) அது சேவை வழங்கும் அரச கூட்டுத்தாபனம் | 2022/2023 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரி அறிக்கை வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒன்றாகும். (Service Organize) தேவையான நிதியங்கள் திறைசேரி ஏனைய திரண்ட நிதியத்தின் ஊடாக கிடைப்பதனால் அரச நிறுவனம் (கூட்டுத்தாபம்) என கணித்து இதுவரை Nil Return உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 371(இ) | கந்தகாடு மற்றும் கிராந்துருக்கோட்டேயில் மின்வேலி அமைப்பதற்கு மற்றும் எச் வலையத்தில் மீன் வளர்ப்பு நிலையம் மற்றும் குளங்கள் அமைப்பதற்கும் பணிப்பாளருக்கு (ஆராய்ச்சி மற்றும் சிறப்புச் செயற்திட்டங்கள்) வழங்கப்பட்டிருந்த ரூபா 24,239,319 இற்கான முற்பணத் தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதியில் உள்ளவாறு 03 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் தீர்க்கப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட கருமங்களும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டும் இருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். மகாவலி பீ வலையத்தில் கந்தைக்காடு பண்ணையைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த யானை வேலி மற்றும் மீன் இனப்பெருக்க நிலையம் ஒன்று மற்றும் சேற்றுக் குளம் நிர்மாணிப்பதற்காக செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையை தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் போதிய மட்டத்தின் காணப்படாமையால் அதனை முறைப்படுத்துவதற்காக உரிய பிரிவுகளை அறிவுருத்தப்பட்டுள்ளது. சீ வலையத்தை சேர்ந்த விவசாயப் பயிற்சி நிலையத்தை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த தொங்கும் மின்சார வேலியில் தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டிருந்தமையால் அதனை அதிகாரசபைக்கு ஏற்றுக்கொள்வதற்கு | முற்பணங்கள் செலுத்தப்பட்ட கருமம் பூர்த்தி செய்வதற்கு முன்னர் மீண்டும் முற்பணங்கள் வழங்குதல் மேற்கொள்ளக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாத மட்டத்தில் காணப்பட்டமையால் அது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக என்னால் விஷேட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதுடன், அந்தக் குழுவின் அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அதனை ஆய்வு செய்து தொடர் நடவடிக்கை எடுப்பேன். | |
| (ii) நி.பி. 373 | அனைத்து கட்டுநிதி மீதிகளும் திசெம்பர் 31 திகதியில் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 1,037,000 தொகைக்கான எரிபொருள் முற்பணம் ரூபா 169,000 தொகைக்கான சிறு காசு கட்டுநிதி ரூபா 15,736,000 தொகைக்கான கொள்வனவு முற்பணங்கள் மற்றும் ரூபா 15,736,000 தொகைக்கான பலவின முற்பணங்கள் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் ஊழியர்களின் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2023 மூலதன மானியம் (Grant) மற்றும் உள்நாட்டு நிதியச் செயற்திட்ட ஏற்பாடுகள் திசெம்பர் மாதத்தின் இறுதிக் கடமை நாளில கிடைத்திருந்த காரணத்தினால் அத்தியவசிய கடமைகளுக்காக கொள்வனவுகள் செய்தவதற்காக வருட இறுதி என்ற போதிலும், குறிப்பிட்ட கொள்வனவுகள் மேற்கொள்வதற்காக முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது. (உ.த) பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை பராமரித்துச் செல்லல்) மேற்கொள்வதற்காக அந்தக் காரணத்தினால் இந்த முற்பணத் தொகை வருட இறுதியிலும் அத் தினத்தில் தீர்ப்பதற்கு முடியாமல் போனது. | முற்பணங்கள் வழங்கப்பட்ட கருமத்தை பூர்த்தி செய்து தீப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணங்கள் வழக்கப்படக் கூடாது. |
| (iii) நி.பி. 1646 | 2020 பெப்ரவரி 04 திகதி விபத்தொன்றிற்கு உள்ளாகிய CAF – 1918 இலக்கம் கொண்ட வாகனத்தின் நாளாந்த ஒட்ட அட்டவணைகள் இந்த அறிக்கைத் திகதி வரை | ஏற்றுக்கொள்கின்றேன். விரைவாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | விரைவாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஈ) | 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ12 சுற்றறிக்கையின் பந்தி 9.4 மற்றும் 2021 நவம்பர் 17 திகதிப் 01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் நிறுவப்பட்ட செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | பந்தி 3.5 | வெளி நிறுவனங்களுக்கு 2020 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் விடுவிக்கப்பட்டிருந்த மகாவலிப் பாதுகாப்புச் சேனையின் 31 பேருக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளங்கள் (ரூபா 5,000 இற்கான விஷேட படி உட்பட) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிக வேலை மற்றும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவு முறையே ரூபா 34,537,879 தொகை, ரூபா 4,891,316 தொகை மற்றும் ரூபா 2,559,571 தொகை 2024 மே 20 திகதி அளவிலும் மீளளிப்பு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | 6 ஆவது ஓய்வுபெற்ற ஜனாதிபதி அவர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 05 உத்தியோகத்தர் தவிர ஏனைய நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது அதிகாரசபையின் கடமைகளுக்காக மீண்டும் சமூகமளித்துள்ளனர். விடுவிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தருக்காக பணம் மீளளிப்பு செய்தல் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்தினால் பதிலளித்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் படி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்காக செலவிடப்பட்ட தொகை மீளளிப்பு செய்தல் ஒன்று மேற்கொள்ளப்படமாட்டது. | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு செலுத்தியிருந்த ஊதியங்கள் திருப்பி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | பிரிவு 7.2 | அதிகாரசபையின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்காக ஆரம்ப செயலாற்றுகை சுட்டி மற்றும் செயற்பாட்டு | அதிகாரசபையின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்கான விடயப் பரப்பு தொடர்பான | ஆரம்ப செயலாற்றுகை சுட்டிக்காக திறைசேரி அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாற்றுகை சுட்டி நிறுவப்பட்டு அதற்காக திறைசேரியின் அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | செயலாற்றுகை சுட்டி மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை சுட்டி தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நீர்ப்பாசன அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (iii) | பிரிவு 7.6 | அதிகாரசபையின் செயலாற்றுகை தொடர்பாக தகவல்கள் வரிசை அமைச்சுக்கு மற்றும் திறைசேரிக்கு அறிவிப்பதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | அதிகாரசபையின் செயலாற்றுகை தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தர் விலகிச் சென்றிருந்தமையால் அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் பெயர் குறிப்பிடுவதற்கு முடியாமல் போனது. புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பின் போது தகைமையுடைய புதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | செயலாற்றுகை தகவல்கள் அறிவிப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்ய வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல் கோவையின் பந்தி 2.3 | அதிகாரசபையின் 2023 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டிற்காக வரிசை அமைச்சுச் செயலாளர் ஊடாக அரச தொழில் முயற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகம், தேசிய பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அதன்படி, நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரசபை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு நீர்ப்பாசன அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மகாவலி அதிகாரசபையின் மூலம் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், 2025 ஆண்டு முதல் இந்த சுற்றறிக்கையின் விதிப்புகளின் படி செயற்படுவேன் என அறிவிக்கின்றேன். | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரம் பெற்றுக்கொண்டு விதிக்கக் கூடியவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் | | | |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை<br>(i) பிரிவு 3.1 | அதிகாரசபையினால் தனது வாகனங்கள் தொடர்பாக வருடாந்த எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | இதற்குத் தேவையான அறிவுரைகள் உரிய வாகனப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எரிபொருளை வரையறுத்தல் மற்றும் விலைகள் அதிகரித்தல் காரணமாக இது மேற்கொள்ளப்படல் மிகவும் மெதுவாக நடைபெறுகின்ற போதிலும், முடியுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படும். | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 3.3 | வாகனங்களின் மாதாந்த எரிபொருள் எரிவு தொடர்பாக குறிப்பொன்று உரிய படிவத்துக்கு இணங்க பேணப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது . | எரிபொருள் எரிவு தொடர்பான தகவல்கள் படிவத்திற்கு இணங்க பேணப்பட வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபை பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் ஒன்றிணைந்து மகாவலி வலையங்களின் தொழில் முனைபவர்களுக்காக தேவையான ஆரம்ப வசதிகள் ஏற்படுத்தி விவசாயம்சார் கால்நடை வளர்ப்பு, பெறுமதி கூட்டிய மற்றும் ஏனைய கைத்தொழில்கள் சார்ந்த உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கு சேர்ப்பதன் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்டிருந்த சிறு மற்றும் மத்திய அளவிலான 03 கடன் திட்டங்களில் மகாவலி சவிய மற்றும் மொரகஹகந்த கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக வழங்கியிருந்த ரூபா 107.02 மில்லியன் தொகையில் 2023 திசெம்பர் 31 | ‘‘மகாவலி சவிய’’ கடன் திட்டத்தின் உடன்படிக்கையின் படி பிரதேச அபிவிருத்தி வங்கி 8 சதவீத வட்டியொன்று அறவீடு செய்து அந்த வங்கியின் செலவுகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன், கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் படி மகாவலி அதிகாரசபையின் வருமானத்திற்காக சேர்க்கப்படமாட்டாது. அவ்வாறு உடன்படிக்கைக்கு இணங்க வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளுக்காக வட்டி வருமானம் மகாவலி அதிகாரசபையின் வருமானம் ஒன்றென கிடைக்கப் பெறாத போதிலும், முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படாத பணத் தொகைக்காக உரிய வருடாந்த | வழங்கப்பட்டுள்ள பணம் விரைவாக குடியிருப்புவாசிகளுக்கு வழங்கப்பட்டு அந்த கடன் விடுவித்தலின் மூலம் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

திகதியில் உள்ளவாறு கடன் என ரூபா 78.25 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. இந்த மகாவலி சவிய கடன் திட்டத்தின் கீழ் கடன் என வழங்கியிருந்த ரூபா 66.57 மில்லியன் தொகைக்காக வங்கியினால் அறவீடு செய்யப்படும் வட்டியிலிருந்து அதிகாரசபைக்கு எதுவிதத் தொகையும் வழங்கியிருக்கவில்லை.

மொரகஹகந்த கடன் திட்டத்தின் கீழ் கடன் என வழங்கியிருக்காத ரூபா 13.32 மில்லியன் தொகைக்காக எதுவித வட்டித் தொகையும் அதிகாரசபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

இதன்படி, கடன் வழங்குவதற்காக வழங்கியிருந்த ரூபா 79.89 மில்லியன் தொகைக்காக எதுவித வட்டித் தொகையும் அதிகாரசபைக்கு கிடைத்திருக்காததுடன், அதிகாரசபைக்கு சொந்தமான பணம் ஏனைய தரப்பினரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது.

சாதாரண சேமிப்பு வட்டி வீதாசாரத்தின் கீழ் வட்டி வருமானம் ஒன்று உரித்தாகின்றது.

மொரகஹகந்த வழிகாட்டி கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற கடனிற்காக அறவிடப்படும் 7 சதவீத வட்டியில் 02 சதவீதம் மற்றும் வழங்கப்படாதவைகளுக்காக வருடாந்த சாதாரண சேமிப்பு வட்டி சதவீதத்தின் கீழ் வட்டி வருமானம் ஒன்று உரித்தாகின்றது.

2006 ஆண்டு S.M.E வங்கியுடன் அணுகியிருந்த உடன்படிக்கையின் படி ரூபா 50 மில்லியனிற்கான ஆரம்ப வைப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த கடன் நிகழ்ச்சித் திட்டம் பின்னைய காலங்களில் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கியுடன் உடன்படிக்கை மேற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது. கடன் தொகை வழங்குவதற்காக தகுதியுடைய முதலீட்டாளர்களை இனங்காண்பதற்காக களப் பரிசோதனை மற்றும் பிணையாளர்களின் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட காலம் கடந்திருந்த போதிலும், தற்போது கடன்தொகை வழங்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,201,567,000 இற்கான நட்டமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,494,045,000 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 4,707,522,000 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு ஏனைய வருமானங்கள் குறைவடைதல், அரச மீண்டுவரும் ஏற்பாடுகள் கிடைப்பது குறைவடைதல் மற்றும் பெறுமானத் தேய்வு அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டின் குழுமத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,201,724,000 இற்கான நட்டமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா

1,485,127,000 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 4,716,597,000 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு ஏனைய வருமானங்கள் குறைவடைதல், அரச மீண்டுவரும் ஏற்பாடுகள் கிடைப்பது குறைவடைதல் மற்றும் பெறுமானத் தேய்வு அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி பீ வலையத்தை சேர்ந்த கந்தகாடு பிரதேசத்தில் 3,770 ஏக்கருக்கான தரைப் பிரதேசத்தில் விவசாயம் மற்றும் பண்ணை விலங்கு அபிவிருத்தி செயற்திட்டமொன்றுக்காக சுற்றாடல் தாக்கல் மதிப்பாய்வு அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்த வேலை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திற்கு ரூபா 6,539,600 தொகைக்காக 2021 செப்தம்பர் 28 திகதி வழங்கப்பட்டு ரூபா 3,211,376 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் படி இந்தக் காணியின் உரிமை தேசிய பண்ணை விலங்குகள் சபைக்கு சாட்டப்பட்ட காரணத்தினால் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த சுற்றாடல் தாக்க மதிப்பாய்வு அறிக்கை சாட்டப்பட வேண்டியது எந்த நிறுவனத்திற்கு என மற்றும் இதற்கான கொடுப்பனவுகள் எந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக அறுதியான இணக்கப்பாட்டொன்றுக்கு அணுகுவதற்கு 2024 மே 10 திகதி வரை முடியாமல் இருந்ததனால் குறிப்பிட்ட சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கையை பூர்த்தி செய்வதற்கு பல்கலைக் கழகத்திற்கு முடியாமல் இருந்தது. முறையான திட்டமொன்று இன்றி செயற்படுத்தப்படாத நிலைமையின் காரணமாக அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,211,376 இற்கான தொகை விளைவற்ற செலவொன்றென ஆகியிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்ட சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டு சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக்கொண்டு அந்த செயற்திட்டத்தை தாமதம் இன்றி பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபையினால் பாற்பசுக்கள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மகாவலி பீ, சீ, டீ, எல் மற்றும் உடவளவ வலையங்களில் புல் பயிர்ச் செய்வதற்காக 2,802 ஏக்கர் வழங்கப்பட்டு கால்நடை போசாக்கை முன்னேற்றுவதற்குரிய செயற்பாடுகள் அடங்கிய நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக சுற்றாடல் பரிசோதனை மற்றும் தொல்பொருள் மதிப்பாய்வுப் பரிசோதனை மற்றும் நிலஅளவை அலுவல்களுக்காக ரூபா 6,571,882 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவிலும் எதுவித காணியும் புல் பயிர்ச் செய்வோருக்கு பகிரப்பட்டிருக்கவில்லை. | மகாவலி எல் வலையத்தில் உத்தேச புற்பூமி அபிவிருத்திக்காக ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைக்கு இலங்கை இரஜரட்ட பல்கலைக் கழகத்திற்கு ரூபா 1,551,958 இற்கான தொகையொன்றும் தொல்பொருள் மதிப்பாய்வு பரிசோதனைக்காக தொல்பொருள் திணைக்களத்திற்கு ரூபா 140,099 இற்கான தொகையொன்றும் புற்கள் பயிர்ச்செய்யும் நிலங்களின் நில அளவை அலுவல்களும் செய்வதற்காக இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு ரூபா 4,879,825 தொகையொன்றென மொத்தம் ரூபா 6,571,882 இற்கான தொகையொன்றும் செலவிடப்பட்டிருந்தது. தற்போது புல் நிலங்களில் புற்பயிர்ச் செய்கைக்காக காணிக் கச்சேரியொன்று நடாத்தி தகைமையுடைய பால் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதிச் செயலாளரினால் வெளியிடப்பட்டிருந்த 2022.11.11 திகதிய கடிதத்தின் மூலம் மகாவலி அதிகார சபையினால காணிகள் விடுவித்தல் இடைநிறுத்தப்பட வேண்டும் என்ற கட்டளையின் படி உத்தேச அபிவிருத்திக் கருமங்கள் திட்டமிட்டவாறு ஆரம்பிக்க முடியாமல் உள்ளது. | சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையின் படி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மகாவலி பீ வலையத்தில் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய பயிர்கள் உற்பத்திச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சுமார் 540 ஏக்கர் நிலப் பகுதியொன்று முதுவெல்ல வெலிகந்த பிரதேசத்தில் வழங்குவதற்கு 2020 ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த முதலீட்டு செயற்திட்டங்களில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்காக ரூபா 2,619,000 இற்கான ஒப்பந்த வேலை கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டு அவற்றில் ரூபா 2,093,200 தொகை | முதுவெல்ல செயற்திட்டத்தின் சுற்றாடல் ஆய்வு அலுவல்களின் கள நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பம் செய்ததுடன், கொரோனா வைரஸ் பரவல், அங்கீகாரம் இன்றிய வதிவோர்களின் சிக்கல்கள், நீர் மூலவளம் தொடர்பாக ஆய்வு மற்றும் உட்பட்டமைப்பு வசதி அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் தயாரிப்பதற்காக காலம் எடுத்த காரணத்தினால் திட்டமிடப்பட்ட காலப் பகுதியை விட ஆய்வு அலுவல்கள் தாமதம் அடைவதற்கு தாக்கத்தை | சாத்தியக்கூறு ஆய்வின் மூலம் சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்து செயற்திட்டத்தை தாமதம் இன்றி பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட ஆண்டில் இருந்து கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவில் 3 வருடங்களும் 5 மாத காலம் கடந்திருந்த போதிலும் எதுவித முதலீட்டுச் செயற்திட்டமேனும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்படுத்தியிருந்தது. | |
| (ஈ) | மகாவலி வலைய விவசாயிகளுக்கு தரமான விதை நெல் உற்பத்தி செய்து கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதிகாரசபைக்கு சொந்தமான ரன்கித மற்றும் அரலகம்வில விதைப் பண்ணைகளுக்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது தேவையான விவசாய இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு மற்றும் பண்ணைகளில் காணப்படும் சூட்டுக்களங்களை திருத்துவதற்காக ரூபா 80,968,960 தொகை செலவிடப்பட்டிருந்தது. பண்ணைகளுக்கு சொந்தமான வயற் காணிகள் அனைத்தும் வெளித்தரப்பினருக்கு போக குத்தகை அடிப்படையில் நெற்பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை விளைவற்ற செலவொன்றாக மாறி இருந்தது. | 2021 சிறுபோகம், 2021/2022 பெரும்போகத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி, அரசியல் நிலையற்ற தன்மையின் காரணமாக நிதி ஏற்பாடுகள் படிப்படியாக குறைத்திருந்தமையால், 2022 சிறுபோகம் மற்றும் 2022/2023 மொத்த பயிர்ச் செய்கை தரைப் பரப்பு எண்ணிக்கையில் 50 சதவீதம் மேற்கொள்ள நேரிட்டது. அதன் பின்னர் போகங்களுக்காக மொத்த தரைப் பரப்பும் போக குத்தகை முறையில் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், மேற்கூறிய சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்தக்கூடிய இயலுமையை கண்டறிய வேண்டும். |
| (உ) | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் படி விவசாய தொழில் முயலுனர் கிராமங்கள் நிறுவுதல் 2023 – புளி வாழை ஏற்றுமதிக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய கினறுகள் நிர்மாணித்தல் நீர்ப்பாசன அமைச்சு ஏற்பாடுகளின் மீது வளவ வலையத்தில் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் கீழ் வலையத்தில் 200 கினறுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அனைத்துக் கினறுகளும் பாதுகாப்பற்ற நிலைமையில் காணப்பட்டது. | விவசாய தொழில் முயலுனர் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய கிணறு சார்ந்து ஏற்படக்கூடிய விபத்துக்களை தடுத்தல் தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீண்ட காலமாக விவசாய கிணறுகள் விவசாய அலுவல்களுக்காக பயன்படுத்தும் விவசாயிகள் காணப்படுகின்ற போதிலும், இதுவரை எதுவித விபத்துக்களும் ஏற்பட்டிருந்ததென கண்டறியப்படவில்லை. | விவசாய கிணறுகள் பாதுகாப்பாக நிர்மாணிப்பதற்கு தேவையான அறிவுரைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட வேண்டும். |

(ஊ) விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் மிளகாய் பயிர்ச் செய்கை செயற்திட்டம் ஒன்றிற்காக அதிகாரசபையின் பீ வலையத்தில் செவனபிடிய பிரிவு அலுவலகத்தை சேர்ந்த 95 ஏக்கர் காணி 190 விவசாயிகளுக்கிடையே பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் ஒன்றின்றி பகிரப்பட்டிருந்தது. விவசாயிகளுக்காக பகிர்வதற்கு தேவையான காணியின் எண்ணிக்கை, பிரதேசம், காலப் பகுதிகள் மற்றும் பகிர்வு செய்யும் முறை ஆகியவை அடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் அதிகாரசபை மற்றும் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்கிடையே ஏற்படுத்தியிருக்கவில்லை. 2021 ஆண்டில் விடுவிக்கப்பட்டிருந்த இந்த காணிகளுக்காக 2021 ஆண்டில் குத்தகை தொகை அறவீடு செய்திருக்காததுடன், 2022 மற்றும் 2023 ஆண்டுகள் முதல் குத்தகை அறவீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், விவசாயிகள் மற்றும் அதிகாரசபையிடையே முறையான குத்தகை உடன்படிக்கையொன்று அணுகியிருக்காத காரணத்தினால் 88 விவசாயிகளிடமிருந்து நிலுவையாக காணப்பட்ட ரூபா 332,500 இற்கான நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டது. கணக்காய்வுத் திகதியளவில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 23 ஏக்கர்கள் பகிரப்பட்டிருந்த 46 விவசாயிகளினால் பயிர்ச் செய்கை ஆரம்பித்திருக்கவில்லை. மேலும், இந்தச் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், நீண்ட காலமாக வளரச்சியடைந்திருந்த மரங்கள், கொடிகளுடனான காட்டுப் பிரதேசம் ஒன்றாகிய இந்த 100 ஏக்கருக்கான அதிகாரசபை மற்றும் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று பீ வலையத்திற்காக கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் செயற்திட்டத்தினால் உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டதுடன், காணியை பயன்படுத்துதல் மற்றும் குத்தகையை அறவீடு செய்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மகாவலி அதிகாரசபை மற்றும் விவசாயி என்ற இரண்டு தரப்பினராலும் 2022.11.05 திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. செவனபிடிய பிரிவில் குத்தகை அடிப்படையில் 163 நலன் பெறுவோர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பயிர்ச் செய்கை செயற்திட்டங்கள் சில இடங்களில் தோல்வியடைத்தல், பயிர்ச் செய்கை கினறுகள் நிர்மாணித்தல் தாமதமடைதல், மேற்கொண்டிருக்காமை, நிர்மாணிக்கப்பட்டுள்ள பயிர்ச் செய்கைக் கினறுகளில் கோடை காலங்களில் போதியளவு நீர் காணப்படாமை விவசாயிகளுக்கு உபகரணத் தொகுதிகள் கிடைக்கப் பெறாமை, கிடைப்பதில் தாமதம் அல்லது முழுமையடையாமை பயிர்ச் செய்கைகள் பல தவணைகள் மேற்கொள்ளும் போது மற்றும் நோய்கள் மற்றும் பீடைக் கட்டுப்பாடு முடியாமல் போவதால், பயிர் மாற்றம் மேற்கொள்ளல் அல்லது குறுகிய காலத்திற்கு பயிர் செய்யாமல் நிலப் பகுதியை கைவிடுவதற்கு நேரிடல் 01 காரணம் அல்லது பல கராணங்கள் முக்கியகமாக காணப்பட்டன.

செயற்திட்ட சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கும் எதிர்பாரத்த நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | காட்டு மரங்களை அப்புறப்படுத்தல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | | |
| (எ) | மகாவலி அதிகாரசபையின் அதிகார பிரதேசத்தை சேர்ந்த நீர்த் தேக்கங்களுக்கு தேவையான மீன் குஞ்சிகள் மகாவலி வளையம் சார்ந்து உற்பத்தி செய்வதற்காக நிகழ்ச்சித் திட்டமொன்று 2021 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சீ, எச், ஹுருலுவெவ மற்றும் வளவ ஆகிய வலையங்களில் குள முறைமைகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவிலும் எச் வலையத்தில் மாத்திரம் குளங்கள் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. சீ வலையத்தில் ரூபா 484,121 தொகை, ஹுருலுவெவ வலையம் ரூபா 523,146 தொகை, எல் வலையம் ரூபா 1,036,650 தொகையும் என மொத்தம் ரூபா 2,043,917 தொகையொன்று இந்த ஏனைய 03 வலையங்களில் செலவிடப்பட்டிருந்த போதிலும், குளங்கள் நிர்மாணிக்கும் அலுவல்கள் திட்டமிடப்பட்டிருந்தவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 2,043,917 இற்கான தொகை விளைவற்ற செலவொன்றாக ஆகியிருந்தது. | எல் வலையத்தில் 02 நன்னீர் மீன் இனவிருத்தி நிலையங்கள் எஹடுகஸ்வெவ மற்றும் கிரிஇப்பன்வெவ பிரதேசங்களில் நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டு கிரிஇப்பன்வெவ இனவிருத்தி நிலையத்திற்காக 06 குள முறைமைகள் தோண்டப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எஹடுகஸ்வெவ இனவிருத்தி நிலையத்தில் 03 குளங்களின் நிர்மாண வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சீ வலையத்தில் ரன்கிந்த மகாவலி பண்ணையில் மீன் கரு உற்பத்தி அலகொன்று நிர்மாணிப்பதற்கு 2021 ஆண்டில் திட்டமிடப்பட்டு மீன் குளங்களின் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆண்டின் போது 04 குளங்கள் வெட்டிப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2024 ஆண்டின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஏற்பாடுகளின் கீழ் மீன் இனப்பெருக்க நிலையமொன்று மேற்கூறிய குளங்கள் அடங்கக் கூடியவாறு பண்ணையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த அந்த அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஹுருலுவெவ வலையத்தில் 2022 ஆண்டின் ஆரம்ப திட்டத்தில் காணப்படும் இரண்டு குளங்கள் 96X42 மற்றும் 80X42 தொகை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இரண்டாவது குளத்தை அகழ்வு செய்யும் போது ‘‘இயற்கையாக அமைந்துள்ள கற்பாறையொன்று’’ காணப்பட்டமையால் தேவையானவாறு அகழ்வு மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. முதலாவது குளத்தின் அலுவல்களை பூர்த்தி செய்து 2023 ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் விசித்திர மீன் | செயற்திட்டங்கள் சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை தாமதமின்றி பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

வளர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் வளங்களை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த மகாவலி கால்நடைகள் வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி தெரிவு செய்யப்பட்ட வெளி முதலீட்டாளர் ஒருவருடன் அரச தனியார் ஒருவருடன் கூட்டு முயற்சி என மறுசீரமைப்பதற்காக 2018 ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மறுசீரமைப்புக்காக எதிர் காலத்தில் மேற்கொள்வதற்கு எதர்பார்க்கப்பட்டுள்ள கருமங்களின் கால சட்டகத்தின் படி 2024 ஏப்ரல் 22 திகதி அளவில் முதலீட்டாளர்களின் செயற்திட்ட அறிக்கைகளை பரிசோதனை செய்து பொறுத்தமான செயற்திட்டங்களை தெரிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் இதுவரை அந்தக் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டக் குழுவினால் தொழில்நுட்ப செயற்திட்ட அறிக்கை மதிப்பாய்வு செய்யப்பட்டு அந்த செயற்திட்டக் குழுவின் அறிக்கை 2024.05.06 திகதி நடைபெற்ற அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட கலந்துரையாடல் இணக்கக் குழு (CANC) இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அங்கு நிதிச் செயற்திட்ட மதிப்பாய்விற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2024.08.13 திகதி அளவில் கூட்டம் கூடி மதிப்பாய்வு அலுவல்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி, தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு உத்தியோகத்தர்களின் பரிந்துரையை பெற்றுக்கொள்வதற்காக முயற்சி செய்த போதிலும், பொதுத் தேர்தல் அலுவல்கள் காரணமாக உத்தியோகத்தர்களின் வேலைப்பழு காரணமாக அந்த அலுவல்களை இதுவரை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அரச தனியார் கூட்டு முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபைக்கு சொந்தமான தெமடகொட பேஸ்லயின் வீதியில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டயருக்கான காணி மற்றும் கட்டிட வளாகம் தற்போது கைவிடப்பட்டு அழிவடையும் நிலையில் காணப்பட்டதுடன், பௌதீக ரீதியாக பரிசோதனை செய்ய போது காணியில் அமைந்துள்ள கட்டிடம் மீண்டும் பயன்படுத்த முடியாத முறையில் முழுமையாக உடைந்து சிதைவடைந்து | இந்தக் காணிகள் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை பாதுகாப்பதற்காக மகாவெலி பாதுகாப்புப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், 2023.08.04 திகதி 352 ஆம் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் தெமடகொட பேஸ்லைன் பாதையில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டயர் காணி மற்றும் கட்டிடங்கள் களஞ்சியமொன்று | அழிவடைந்த மற்றும் காணாமல் போயிருந்த ஆதனங்கள் தொடர்பாக நி.பி. இற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அழிவுக்குள்ளாகியிருந்ததெனவும், இது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மற்றும் வாகன செயற்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக அபிலாசைகள் அழைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | அதிகாரசபைக்கு சொந்தமான 02 இணைந்த கம்பனிகளான மகாவலி வென்ஷர் கெபிடல் (தனியார்) கம்பனி 2012 ஆண்டிலும், இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவை (தனியார்) கம்பனி 2019 ஆண்டிலும், கலைப்பதற்கு முடிவு செய்யப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் கலைப்பு நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. | மகாவலி வென்சர் கெபிடல் (தனியார்) கம்பனியின் கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கலைப்பாளரினால் 29 பீ படிவம் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்திற்கு 2024.06.24 திகதி ஒப்படைக்கப்பட்டு, கம்பனியின் கணக்குகளில் காணப்பட்ட அனைத்து மீதிகளும் மகாவலி அதிகாரசபைக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவை (தனியார்) கம்பனியின் கலைப்பு நடவடிக்கைகளுக்காக இறுதிக் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | கம்பனிகளின் கலைத்தல் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்து இறுதிக் கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மகாவலி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் மகாவலி பண்ணை விலங்கு மற்றும் விவசாய வர்த்தக (தனியார்) கம்பனியின் முதலீடு என ரூபா 406,389,000 தொகை காட்டப்பட்டிருந்ததுடன், கம்பனி அதன் இணைந்த கம்பனி ஒன்றெனவும் காட்டப்பட்டிருந்தது. குறிப்பிட்ட கம்பனியின் அமைப்பு அகவிதியின் படி அந்தக் கம்பனி மகாவலி அதிகாரசபையின் இணைந்த கம்பனி ஒன்றென காட்டப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மகாவலி அதிகாரசபைக்காக ஒரு பங்கேனும் கம்பனியினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மகாவலி அதிகாரசபையின் “பண்ணை விலங்கு அபிவிருத்திப் பிரிவு” 1999 ஆண்டில் வ/ப மகாவலி பண்ணை விலங்கு மற்றும் விவசாய வணிகக் (தனியார்) கம்பனி என மாற்றும் போது மேம்பாட்டாளர்கள் என மகாவலி அதிகாரசபைக்கு வழங்கியிருந்த 03 பங்குகளில் ஒரு பங்கு பெறப்பட்டிருந்தது. திரு. ரஞ்சித் காமினி விஜேதுங்க அவர்கள் ஒரு பங்கும் (மகாவலி கால்நடை வியாபாரக் கம்பனி) திரு. கொக்கல லியனகே ஸ்ரீமெவன் கவிரத்ன அவர்கள் ஒரு பங்கும் (மகாவலி கால்நடை வியாபாரக் கம்பனி) என பங்குகள் பெற்றுக்கொண்டு இநத கம்பனி பதிவு செய்யப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றாக காணப்படுவதனால் பதவிப் பேருக்கு பங்குகள் வழங்கப்பட முடியாமையால் அவர்களின் | அதிகாரசபையின் பெயரில் பங்குகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தனிப்பட்ட பெயரில் பங்குகள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு வழங்கியிருந்த பங்கு 2024 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகாரசபையின் முன்னைய பணிப்பாளர் நாயகம் எம்.எல்.டீ.சீ.எம். அபேவர்தன அவரின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட பங்குகளை மாற்றுதல் 2024 ஆண்டு கம்பனியின் வருடாந்த கூற்று (Annual Return) கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும். ஏனைய இரண்டு பங்குதாரர்களும் தற்போது இறந்துள்ளனர். இந்தப் பங்குகளை உரித்தாக்குவதற்கு வாணிப உயர் நீதிமன்றத்திற்கு வழங்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்காக மேற்கூறிய முன்னைய பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மாற்றப்பட்டிருந்த பங்கினை பதிவு செய்து முடிய வேண்டிக் காணப்படுகின்றதென அறிவிக்கின்றேன். | |
| (உ) | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மேட்டு நிலம், நீர்ப்பாசன மற்றும் மழையினால் போசிக்கப்படுவது என 2023 திசெம்பர் 31 திகதி அளவில் காணிகள் 157,843 ஹெக்டயர் 315,529 துண்டுகளாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 110,902 துண்டுகளுக்கான கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு முடியாமல் இருந்ததுடன், அது 35 சதவீதமாக காணப்பட்டது. அதேபோல், அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் வாணிப, வீடு, முதலீட்டுச் செயற்திட்டங்கள், விகாரைகள் மற்றும் அரச நிறுவனங்கள் | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட காணிகளுக்காக கொடுப்பனவுப் பத்திரங்கள் வழங்குவதற்கு சதவீதமாக 35 சதவீத எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு சிக்கல் நிலைமை காரணமாக கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு முடியாமல் மீதியாக இருந்தது. முறைசாரா விதமாக பிற உடமையாக்கல், அபிவிருத்திச் செய்திருக்காமை, சட்டச் சிக்கல்கள், குடும்பப் பிணக்குகள், காணி உரிமையில் சிக்கல்கள் இதற்கான காரணமாக இருந்தது. | கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 18,766 ஹெக்டயர்கள் 24,735 துண்டுகள் காணி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 19,657 துண்டுகளுக்காக நீண்ட கால கொடுப்பனவு பத்திரம், விடுவிப்புக் கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு மகாவலி அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. அது சதவீத ரீதியாக 79 சதவீதத்தை கொண்டிருந்தது. | கொடுப்பனவு பத்திரமொன்று வழங்குவதற்காக 2023 ஆண்டின் இறுதிக் காலாண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, அனைத்து மகாவலி காணிப் பகுதிகளுக்குமாக அந்த கொடுப்பனவு பத்திரம் வழங்கப்பட வேண்டியுள்ளது. அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்காக குத்தகையாளர்களினால் நிலுவை இல்லாமல் குத்தகை செலுத்தியிருத்தல், குறிப்பிட்ட காணிப் பகுதிகளை நிலை அளவை செய்து எல்லைக் கற்கள் இடப்பட்டு நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட்டு நில அளவைத் திணைக்களத்தினால் வரைபடங்கள் பெற்றுக்கொண்ட பின்னர் மற்றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொண்டு குத்தகை உறுதி வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த கருமத்தில் அதற்காக கணிசமான காலமொன்று செலவிடுவதற்கு நேரிடுகின்றது. | |
| (ஊ) | முன்னுரிமை அடிப்படையில் காணிகள் விடுவித்தல் | | |
| | 1981 இன் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட காணி கட்டளை சட்டத்தின் பிரிவு 20(ஆ) ‘‘பொதுமக்கள் நலன்’’ என காட்டப்பட்டு அமைச்சரின் தனிப்பட்ட பட்டியலுக்காக காணிகள் விடுவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 1947 இன் 08 ஆம் இலக்க காணிக் கட்டளைச் சட்டத்தின் 21(i) இன் கீழ் காணி விடுவிப்பதற்கும் 21(ii) இன் கீழ் நடவடிக்கை எடுக்காமல், ஜனாதிபதி அவர்களின் மற்றும் அமைச்சர்களின் தனிப்பட்ட பட்டியல்கள் அடிப்படையில் | அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் காணி பிரமாணம் 21(1) இன் கீழ் குத்தகைக்கு கொடுப்பதற்கும், 21(2) இன் கீழ் அறிவித்தல் ஒன்று வெளியிடுவதற்கும் அமைச்சருக்கு அதிகாரம் காணப்படுகின்றது. அவ்வாறாயினும், அரச காணிகள் கட்டளைச் சட்டத்தில் ‘‘அமைச்சரினால் வேறேதும் முறையில் கட்டளையிடப்படின் அன்றி முன்னுரிமை கொடுப்பனவுப் பத்திரங்கள் அல்லது குத்தகை உறுதி ஒன்று வழங்குவதற்கு கருத்துடைய அணைத்து சந்தர்ப்பங்களிலும், அது தொடர்பாக | முன்னுரிமை அடிப்படையில் காணிகள் விடுவித்தல் அரச காணி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பொதுமக்களின் நலன்களுக்காக மாத்திரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 1998 முதல் 2022 வரையான காலப் பகுதியில் சீ வலையத்தின் 395 நபர்களுக்கும், ஈ வலையத்தில் 91 நபர்களுக்கும் அவ்வாறு முன்னுரிமை அடிப்படையின் மீது காணிகள் விடுவிப்பதற்காக தெரிவுகள் வழங்கப்பட்டிருந்தது. | அறிவித்தலொன்று 21(2) கொண்ட அரச காணிகள் பிரமாணத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்'' என வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமல் இருப்பதற்கான அதிகாரம் காட்டப்பட்டுள்ளது. | |
| (எ) | LC/144 அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த விக்டோரியா வலையத்தில் கொத்மலைப் பிரிவைச் சேர்ந்த தம்மிடிய, பெல்டன், அக்கரமலே, ரிவர்சைட் குடியிருப்புக்களை சேர்ந்த விவசாய வகுப்பு 39 நபர்களின் தெரிவு ஆவணங்கள் கண்டறிவதற்கு முடியாமை மற்றும் 40 வருடங்களுக்கு அண்மித்த காலம் அவர்களுக்கு கொடுப்பனவுப் பத்திரம் வழங்குவதற்கு முடியாமையால் அந்த நபர்களுக்கு கொடுப்பனவுப் பத்திரம் வழங்கும் குறிக்கோளுடன் தயாரிக்கப்பட்டிருந்த பட்டியலில் 2000, 2002, 2003, 2004, 2012, 2014 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த LC/144 அனுமதிப்பத்திரங்களின் உரிமையாளர்களின் பெயரும் உட்படுத்தப்பட்டதன் காரணமாக கொடுப்பனவுப் பத்திரம் வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த இந்த இறுதி ஆவணத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்விற்கு திருப்தியடைய முடியாதுள்ளது. | கொத்மலைப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் வெளிக்கள மற்றும் அலுவலக கோப்புக்கள் பரிசோதனை செய்யப்பட்டு தகவல்கள் பெற்றுக்கொண்டு 2000, 2004, 2012 மற்றும் 2014 ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் தகவல்களும் இந்த ஆவணங்களில் உட்படுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்கான தகவல்கள் அலுவலக கோப்புக்களில் கண்டறிய முடியாமல் உள்ளது. எவ்வாறாயினும், கொத்மலைப் பிரிவிற்கு உரிய தம்மிடிய, பெல்டன், அக்கரமலே மற்றும் ரிவர்சைட் குடியிருப்புக்களுக்கு சொந்தமான விவசாய வகுப்பைச் சேர்ந்த 39 பேரின் தெரிவு ஆவணங்கள் தற்போது கண்டறியப்பட்டு இந்தக் காணிகளை முறைப்படுத்துவதற்கான குறிப்பிட்ட ஆவணங்கள் உரிய இணைப்புக்களுடன் வதிவிட திட்ட முகாமையாளருக்கு தொடர் அங்கீகாரத்திற்காக தற்போது பணிப்பாளர் (காணி) இற்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு காணிகள் வழங்கப்பட்டிருக்காத நபர்களுக்கு காணிகள் வழங்கல் மேற்கொள்ளப் வேண்டும். |
| (ஏ) | விக்டோரியா வலையத்தில் அம்பகொடே பிரதேசத்தில் வரிசை வீடுகளில் வதியும் பிரதான குடும்பங்கள், துணைக் குடும்பங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட காணிகளுக்காக | 2017 செப்தம்பர் 29 திகதி தெரிவு ஆவணத்தின் படி வரிசை வீடுகளில் வதியும் 13 பேருக்கும், 26 துணைக் குடும்பங்களுக்கும் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு | அரச காணிகள் கட்டளைச் சட்டம் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் படி தெரிவுகள் வழங்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றுக் காணிகள் கிடைக்கப் பெறாமையால் காணிகள் வேண்டியுள்ள நபர்களுக்காக 10 பர்சஸ்கள் வீதம் காணிகள் வழங்குவதற்கு 2017 செப்தம்பர் 29 திகதி பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. அந்தத் தரப்பினருக்கு தெரிவு பெறும் தன்மை வழங்கி தற்போது 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், 86 பிரதான குடும்பங்களுக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு பதிலாக வதியும் காணிகள் கிடைக்கப் பெறாத 23 விண்ணப்பதாரிகளுக்கும் காணிகள் பகிரப்பட்டிருக்காத போதிலும் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட கோறிக்கைகளுக்கு 37 தெரிவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது. | பதிலாக வதியும் காணிகள் கிடைக்கப் பெறாத 27 விண்ணப்பதாரிகளுமாக இனங்கண்டிருந்ததுடன், 2024 மார்ச் 22 திகதி அளவில் வரிசை வீடுகளில் வதியும் 27 பேருக்கும், 26 துணைக் குடும்பங்களுக்கும் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு பதிலாக 04 காணிகளுக்கும் காணிப் பகுதிகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், விடுவிப்பதற்கு உத்தேசித்திருந்த காணிகளின் பகுதியொன்று 06 பர்சஸ்களை விட குறைவாக இருத்தலும், பகுதியொன்று நீர்த்தேக்க காப்பு பிரதேச 100 மீற்றர் எல்லையுள் அடங்கியிருந்ததனால் விடுவிப்பதற்கு முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் பல்வேறு கோறிக்கைகளின் படி 37 காணிப் பகுதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென காட்டப்பட்டிருந்த போதிலும், ஆவணங்களின் படி 05 காணிப் பகுதிகள் மாத்திரம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நபர்களுக்கு விரைவாக காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகள் விடுவித்தல் | | |
| | (i) மகாவலி காணிகள் விடுவிப்பதற்கான தேசிய கொள்கையொன்று காணப்படாததுடன், வரையறையான வளமொன்றாகிய காணிகள் மனித தேவைப்பாட்டின் படி சிறந்த ஒழுக்கத்துடன், வெளிப்படையான தன்மையுடன் விவசாயம், வதிவு, கைத்தொழில் மற்றும் சுற்றுலா போலவே சுற்றாடல் சமமான தன்மைக்காக மிகவும் திட்டமிடப்பட்டு மற்றும் விஞ்ஞான ரீதியான நுழைவொன்றின் மூலம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | மகாவலி அதிகாரசபை சட்டத்தின் கீழ் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் முதலீட்டுக் காணிகள், தகுதியுடைய முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு முறையான ஆவணத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த பின்னர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் முதலீட்டாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.<br><br>பல்வேறு துறைகளில் | மகாவலி காணிகள் விடுவித்தலுக்கான தேசிய கொள்கையொன்று அறிமுகப்படுத்தி பௌதீக திட்டங்களின் பரிந்துரைகள் கடைபிடிக்கப்பட்டு காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க விஞ்ஞான ரீதியான செயற்முறை ஒன்றின் மீது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திறமைசாலிகள் அடங்கிய முதலீட்டு செயற்திட்ட மதிப்பாய்வுக் குழுவொன்றின் மூலம் தொழில்நுட்ப, சமூகம்சார் மற்றும் நிதி மூலப் பிரமாணங்கள் ஊடாக தொழில் முயற்சியாளர்களை மதிப்பாய்வு செய்தல் பௌதீக திட்ட பரிந்துரைகளின் கீழ் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க விஞ்ஞானம் ரீதியான செய்முறை ஒன்றின் மீது காணிகள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) 1979 இன் 23 ஆம் இலக்க மகாவலி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 3 இன் படி காணி பயன்படுத்தலுக்காக ஆரம்ப கட்டமைப்புசார் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆண்டின் பின்னர் தற்போதைய காணி பயன்படுத்தல் தேவைப்பாடுகளின் படி அந்தக் கட்டமைப்புசார் திட்டங்கள் நாளதுரையாக்கியிருக்கவில்லை. | மகாவலி வலையத்திற்காக கட்டமைப்புசார் திட்டங்கள் தயாரித்தல் எதிர்வரும் 20 வருடங்களுக்கான அபிவிருத்தி தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, பீ வலையத்திற்காக 2011 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தமும் 20 வருட கால தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த கட்டமைப்புசார் திட்டங்களுக்கு நேரொத்ததாக கால ரீதியான தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து புதிய காணி கேள்விகளுக்கு ஏற்ப காணிகளை பயன்படுத்தல் திட்டத்தை திருத்துதல் வலைய பௌதீக திட்டக் குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளல் அங்கீகாரிக்கப்பட்ட செய்முறை ஆகும். | காணிப் பயன்பாட்டுத் தேவைப்பாடுகளின் படி அந்தக் கட்டமைப்புசார் திட்டங்கள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |
| (iii) விவசாய மற்றும் தொழில் அபிவிருத்திக் கருமங்களுக்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் காணிகள் வழங்கப்படும் போது வழங்கக்கூடிய காணிகள் எண்ணிக்கை, | முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக பிரதேச கட்டமைப்புசார் திட்டத்தின் படி இனங்காணல் 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு அதன்படி, சீ வலயம், வளவ வலயம், பீ வலயம் ஆகிய வலையங்களில் இனங்காணப்பட்ட | மகாவலி காணிகள் விடுவிப்பதற்காக தேசிய கொள்கையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசங்களின் படி பொருத்தமான முதலீட்டுச் செயற்திட்டங்கள் வழங்கக்கூடிய குறைந்த மற்றும் உச்ச அளவு காணி எண்ணிக்கை தொடர்பாக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அறுதியான மற்றும் தெளிவான கொள்கையொன்று காணப்படவில்லை. முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகள் வழங்கப்படும் போது ஆட்களின் வேண்டுகோள்களின் படி காணிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், முதலீட்டாளர்கள் தெரவு செய்தல் தொடர்பாக மூலப் பிரமாணங்கள் இனங்கண்டிருக்கவில்லை. | காணிகளுக்காக செய்தித்தாள்கள் மூலம் விருப்புக்கள் அழைக்கப்பட்டு தகுதியான முதலீட்டாளர்கள் தெரிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தனிப்பட்ட கோறிக்கையின் படி வலைய மட்டத்தில் பரந்து காணப்படும் சிறிய காணித் துண்டுகள் வலைய பௌதீக திட்டக் குழுவின் பரிந்துரையின் படி ஒதுக்கப்படுதலும் மேற்கொள்ளப்படுகின்றது. முதலீட்டாளர்கள் தெரிவு செய்தல் தொடர்பாக மூலப் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்திட்ட மதிப்பாய்வுக் குழுவின் மூலம் மூதலீட்டாளர்கள் தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது முதலீட்டாளர்களுக்கு காணி விடுவிக்கப்படுகின்றது. | |
| (ஒ) | 05 வலையங்களில் 30 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 421.22 ஹெக்டயர் காணி தொடர்பாக குத்தகைக் காலம் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவில் முடிவடைந்து 06 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த நீண்டகால குத்தகை உறுதி முடிவடைந்திருந்த காணிகள் தொடர்பாக குத்தகை உறுதியை மீண்டும் வழங்குவதா அல்லது இரத்துச் செய்வதா, காணிகளை மீள்மதிப்பீடு செய்வதா அல்லது காணிகளை அதிகாரசபைக்கு உரித்தாக்கிக் கொள்வதா ஆகிய விடயங்கள் தொடர்பாக குத்தகை காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் முகாமைத்துவத்தினால் தீர்மானித்தும் இருக்கவில்லை. | நீண்ட கால குத்தகைக்கு வழங்கிய காணிகள் ஆரம்ப 30 வருட காலம் முடிவடைந்த பின்னர் நிலவுகின்ற அபிவிருத்தி நிலைமையை கவனத்தில் எடுத்து காணி பெறுவோருக்கு மீண்டும் 30 வருடங்களுக்காக குத்தகைக்கு கொடுக்கப்படுகின்றது. அதன்படி, ஆரம்ப குத்தகைக் காலம் முடிவடைந்துள்ள குத்தகைகளுக்காக இரண்டாவது குத்தகை காலத்திற்குரிய குத்தகை உறுதி 2022.11.11 திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2022.11.11 திகதிய ஜனாதிபதிச் செயலாளரின் கடிதத்தின் மூலம் புதிய காணிகள் விடுவித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற அறிவுரைகளின் படி ஆரம்ப 30 வருட குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த மீண்டும் குத்தகை அங்கீகாரம் | குத்தகைக் காலம் முடிவடைந்ததுடன் புதிய குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்ட ஆவணங்கள் ஜனாதிபதிச் செயலகங்களுக்கு முறையான படிவம் ஒன்றின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஆரம்ப குத்தகைக் காலம் முடிவடைந்த குத்தகை உறுதிகளுக்காக குத்தகை உறுதிகள் வழங்குவதற்கு இயலுமை காணப்படுகின்றது. | |
| (ஓ) | விவசாயத் தொழில் தனியார் கம்பனி ஒன்றுக்கு பீ வலையத்தில் சித்தபுர பண்ணையிலிருந்து 500 ஏக்கர்கள் மற்றும் முத்துவெல்ல பண்ணையிலிருந்து 500 ஏக்கர்கள் வழங்கப்பட்டு காணியை அபிவிருத்தி செய்யாமை என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு 2021 செப்தம்பர் 29 திகதி குத்தகை அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அந்தக் காணியிலிருந்து 400 ஏக்கர்கள் வேறு 16 முதலீட்டாளர்களுக்கு குறுகிய கால பயிர்ச் செய்கைக்காக ஒருவருக்கு 25 ஏக்கர் வீதம் ஒரு வருட காலத்திற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது ஒரு போகத்திற்கு ரூபா 4,000 தொகை வீதம் போகக் குத்தகை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் காணப்பட்ட சில கட்டிடங்களுடன் குத்தகைக்கு கொடுக்கப்பட்டு அதற்காக தனியாக மாதாந்த வாடகை அறவிட்டிருக்கவில்லை. இந்த முதலீட்டாளர்களும் தெரிவு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், இந்த அறிக்கைத் திகதி வரை 09 முதலீட்டாளர்கள் ஆண்டிற்கான குத்தகைத் தொகையை செலுத்தியிருக்காததுடன், தரைப் பகுதியையும் இணங்கியவாறு அபிவிருத்தி செய்திருக்கவில்லை. | சித்தபுர பண்ணையிலிருந்து 182.188 ஹெக்டயர் எண்ணிக்கையொன்று தனியார் கம்பனியொன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது விடுவிக்கப்பட்டிருந்தது. மீதியான காணிப் பகுதிகள் இதுவரை முறைப் பிரகாரம் குத்தகைக்கு வழங்கியிருக்காததுடன், ஜனாதிபதிச் செயலாளரின் 2022.11.11 கடிதத்தின் படி மகாவலி அதிகாரசபையினால் காணிகள் விடுவித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.<br><br>விவசாய தொழில் தனியார் கம்பனிக்கு முன்னர் விடுவித்திருந்த முத்துவெல்ல பண்ணையிலிருந்து குறுகிய கால பயிர்கள் பயிர்ச் செய்வதற்காக 17 நபர்களுக்கு 10 ஹெக்டயர் வீதம் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 07 நபர்களினால் காணியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அபிவிருத்தி செய்யப்படாத 09 முதலீட்டாளர்களின் காணி அபிவிருத்தி செய்தல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்தச் செயற்திட்டத்திற்காக போக குத்தகை அறவீடு செய்யும் முறைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் வரை 01 ஏக்கருக்கு ரூபா 4,000 தொகை வீதம் குத்தகைத் தொகையொன்று அறவீடு | குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகுதல், காணி வழங்கிய குறிக்கோள் நிறைவேற்றப்படல், காணி அபிவிருத்தி, தொடர் நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் உரித்தாக்கி, முதலீட்டாளர்களின் குத்தகை உரிமையை இரத்துச் செய்து நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யும் படி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தற்காலிகமாக பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக காணிகள் விடுவிக்கப்பட்ட நபர்களின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்த காலம் 2023.03.31 திகதி முடிவடைந்திருந்ததால், அதற்காக விரைவாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | |
| (ஔ) | ஒன்றினைந்த நிதிக்கூற்றுக்களின் படி முதலீட்டுச் செயற்திட்டங்களின் மூலம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட குத்தகைத் தொகை ரூபா 165,524,701 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 22,993,596 தொகை 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு முடியாமல் காணப்பட்டது. | இது தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலுவைக் குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | காணிகள் அனுமதியின்றி பயன்படுத்தல்<br><br>1979 இன் 07 ஆம் இலக்க அரச காணிகள் (உரித்தினை திருப்ப பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் பிரிவு 180 இன் படி அனுமதியின்றி பிடித்தல் மேற்கொள்ளப்படாமல் இருப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்காத சந்தர்ப்பங்கள் | | |
| | (i) 08 வலையங்கள் தொடர்பாக 897 ஹெக்டயர் காணி எண்ணிக்கையொன்று தற்போது அனுமதியின்றி அனுபவிப்போர் 4,616 பேரினால் அனுமதியின்றி அனுபவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்றவர்களின் கீழ் இதுவரை பகிரப்பட்டிருந்த காணிகளை பிறர் மயமாக்கிய பின்னர் ஆரம்ப காணி பெற்றவரை இரத்துச் செய்வதன் மூலம் அனுபவித்து வரும் ஆட்களும் அடங்குவதுடன், அந்த நபர்களை காணிக் கச்சேரிகள் மூலம் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன், ஏனைய அனுமதியற்ற நபர்களுக்காக உரித்தினை திருப்பி பெற்றுக்கொள்ளும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை | விரைவாக அனுமதியற்றவர்களை அகற்ற வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்படுகின்றது. இதற்காக விலக்கும் அறிவித்தல் வெளியிடல் ஆகிய கருமங்களுக்காக குறிப்பிட்ட காலம் எடுக்கின்றது. அத்துடன், அரச காணிகள் அனுமதியற்றவர்களிடமிருந்து பாதுகாத்தல் தொடர்பாக உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) சுற்றறிக்கையின் பிரிவு 3.1 இன் படி அனுமதியின்றியதை முறைப்படுத்தும் கொள்கை 2008 ஜூன் 13 திகதி முதல் இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆண்டின் பின்னர் 08 வலையங்களில் அனுமதியின்றியதை முறைப்படுத்துவதற்காக 151 விசாரணைகளுக்காக பங்குபற்றிய நபர்களுக்கு 16,135 தெரிவுகள் வழங்கப்பட்டிருந்தது. | அனுமதியற்றவர்களின் கீழ் இதுவரை பகிரப்பட்டிருந்த காணிகளை பிறர் மயமாக்கிய பின்னர் ஆரம்ப காணி பெற்றவரிடமிருந்து இரத்துச் செய்வதன் மூலம் அனுபவித்து வரும் ஆட்களும் அடங்குவதுடன், அந்த நபர்களை காணிக் கச்சேரிகள் மூலம் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன், ஏனைய அனுமதியற்ற நபர்களுக்காக உரித்தினை திருப்பியெடுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்காக விலக்கும் அறிவித்தல் வெளியிடல் ஆகிய கருமங்களுக்காக குறிப்பிட்ட காலம் எடுக்கின்றது. அனுமதியின்றியதை முறைப்படுத்துவதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், காணிக் கச்சேரிகள் மூலம் மாத்திரம் விசாரணைகள் மேற்கொண்டு குறிப்பிட்ட நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க காணிகள் வழங்குதல் மேறகொள்ள வேண்டும். |
| (iii) சட்டரீதியான தெரிவு செய்தல் ஒன்றின்றி முறைசாரா விதமாக பிறர்மயப்படுத்தப்பட்ட அல்லது நபர்களினால் பிடிக்கப்பட்டிருந்த காணிகள் அந்த ஆட்களுக்கு சட்டரீதியாக சாட்டுவதற்காக அனுமதியின்றியவையை முறைப்படுத்தும் காணிக் கச்சேரிகள் மூலம் | காணிகள் பெறுவோர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் மூலம் காணிகள் விடுவிக்கும் சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரம் பெறுவோரினால் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறியிருந்த சந்தர்ப்பத்தில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின படி | அனுமதியற்றவர்களை அகற்றி சுற்றறிக்கைக்கு இணங்க காணி வழங்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுப்பதற்காக முறையான செய்முறையொன்றினூடாக காணிகள் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்களிடம் காணப்படும் முனைப்பினை குறைப்பதற்கும் பொதுமக்களிடையே தேவையில்லாத மோதல்கள் ஏற்படுவதற்கு காரணமாகியிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பதிசோதனையின் போது சீ வலையத்தற்கு மற்றும் விக்டோரியா வலையத்தை சேர்ந்த பிரதேசங்களில் மாத்திரம் கூறுகளாக்கப்படாத 177.95 ஹெக்டயர் தொகை 550 நபர்கள் வியாபாரம், வதிவு மற்றும் பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக அனுமதியின்றி அனுபவிக்கப்பட்டு வந்துள்ளது. | அந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து அனுபவிப்போரை காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய்வதற்கான சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கப்படுவதுடன், அந்த தெரிவு செய்தல் அனுமதியின்றியதை முறைப்படுத்தலாக கவனம் செலுத்தப்படாததுடன், முறைசாரா அனுபவித்தலை முறைப்படுத்தல் என கணிக்க வேண்டும் என மேலும் அறிவிக்கின்றேன். கூரிடப்படாத அரச காணிகளுக்கு அனுமதியின்றியோர் உட்படுவதை தடுக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், முன்னர் குறிப்பிடப்பட்டவாறு அனுமதியற்றவர்களுக்கு உரித்தினை திருப்பிப் பெற்றுக்கொள்ளும் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கின்றேன். | |
| (iv) அதிகாரசபைக்கு சொந்தமான பீ, சீ, டீ, ஜீ, எச், எல், ஈ, ஹுருலுவெவ, வளவ ஆகிய வலையங்களில் மற்றும் நீர்த்தேக்கங்கள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் கீழ் காணப்படுகின்ற நீர்த்தேக்க காப்புப் பிரதேசங்களில் 2024 மே 20 திகதி அளவில் அனுமதியின்றி அனுபவிக்கும் 2,544 நபர்கள் காணப்பட்டனர். | | |
| (a) அனுமதியின்றிய வதிவோர்களை அகற்றுவதற்காக வலைய மட்டத்தில் 910 துண்டுகளுக்காக நிறுவனம்சார் செயற்பாடுகள் எடுத்திருப்பதுடன், 145 துண்டுகளுக்காக சட்டச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, அனுமதியின்றி அனுபவிக்கும் 1489 காணித் துண்டுகளின் அனுமதியின்றியவர்களை | உள்ளக நீர்த் தேக்கங்கள் மற்றும் வேறு நீர் மூல வளங்களின் அனுமதியின்றிய அலுவல்களை தடுப்பதற்காக வலையத்தின் பிரதான அணைகள், நீர்த்தேக்கங்கள் செயற்பாட்டுப் பிரிவு உள்கிடிய / ரத்ஹித நீர்த் தேக்க காப்புப் பிரதேசங்களில் அனுமதியின்றிய அலுவல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றது. அலகின் அலகு முகாமையாளர் நேரடியாக தலையிட்டு பிரிவு | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான வலையங்கள் மற்றும் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதிகாரசபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | அகற்றுவதற்காக எதுவித நடவடிக்கையும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 20 திகதி அளவிலும் எடுத்திருக்கவில்லை. | முகாமையாளர் மற்றும் காணி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | |
| (b) | பணிப்பாளர் (நீர்த்தேக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்) இன் கீழ் காணப்படுகின்ற நீர்த்தேக்க காப்புப் பிரதேசங்களில் 150 அனுமதியின்றிய வதிவோர்களை அகற்றுவதற்காக தாபனம்சார் நடவடிக்கைகளும், 185 பேர்களுக்காக சட்ட நடவடிக்கைகளும் எடுத்திருந்ததுடன், மீதியான 67 பேரை அகற்றுவற்காக கணக்காய்வுத் திகதியாக 2024 மே 20 திகதி அளவிலும் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | மயுரபுர பிரிவின் காட்டு யானை முகாமைத்துவ காப்புப் பிரதேசத்திற்காக அனுமதியின்றியதை தடுக்கும் போது ஏற்படுகின்ற செய்முறைசார் வசதியீனங்களை அடக்குவதற்காக அங்கீகாரம் இன்றியதை தடுக்கும் அலகிற்கு வெளிக்கள கடமைகள் மற்றும் பாதுகாப்பு அலுவல்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. அந்த அலகு நிறுவப்பட்டதுடன், அனுமதியின்றி கைப்பற்றும் அலுவல்கள் பாரியளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கட்டுப்படுத்த முடியாத மட்டத்தில் காணப்படும் அனுமதியின்றிய கைப்பற்றுதல் நடைபெறும் சந்தர்ப்பங்களில் இந்த அனுமதியின்றி அலகு வளவ வலையத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் அழைக்கப்படுகின்றது.<br><br>குளங்கள் மற்றும் காப்புப் பிரதேசம் சார்ந்த அனுமதியின்றிய வதிவோருக்காக சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 76 நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>டீ வலையத்தில் பிசோபுர பிரிவில் 2009 காணி நிருவாகத்தை ஏற்றுக்கொள்ளும் போதும் 21 சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் ¼ ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை பல்வேறு அளவுகளையுடைய அரசுக்கு சொந்தமான காணிகளை அனுபவிக்கும் 851 நபர்கள் இனங்காணப்பட்டிருந்தது. | சொந்தமான உணர்வு ரீதியான வலையங்கள் மற்றும் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பல்வேறு சமூக சச்சரவுகள் மற்றும் குடும்பச் சச்சரவுகள் ஏற்படும் நிலைமையொன்று அவதானிக்கப்படுவதனால் தற்போது அந்தச் சச்சரவுகளை தீர்ப்பதற்காக வலையத்தின் காணிப் பிரிவு மற்றும் காணி பயன்படுத்தல் திட்டப் பிரிவு மூலம் நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | |
| (c) | மகாவலி சீ வலையத்தில் குளக் காப்பினை சார்ந்த 137.175 ஏக்கர்கள் 219 நபர்களினால் உச்ச அளவு 40 வருட காலம் முதல் விக்டோரியா வலயத்தின் நீர்த தேக்க காப்பினை அண்டி 23 ஏக்கர்கள் 237 நபர்களினால் உச்ச அளவு 30 வருடங்கள் வரையான காலம் முதல் வளவ வலையத்தின் குளம் மற்றும் நீர்த்தேக்க காப்பினை சார்ந்த 645 ஏக்கர்களில் 1,042 நபர்கள் உச்ச அளவு 45 ஆண்டு காலம் வரையும் அங்கீாரம் இன்றி நிரந்தர பயிர்கள் மற்றும் பயிர்கள் பயிர் செய்யப்பட்டு நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு காணப்பட்டது. இந்த அங்கீகாரமற்ற பயன்படுத்துவோரை அகற்றும் செய்முறை அதிகாரசபையில் மெதுவான தன்மையுமன் செயற்படுத்தப்பட்டிருந்தது. | பிரதான அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் செயற்பாட்டுப் பிரிவு நீர்த்தேக்க காப்புக்களில் அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றும் அலுவல்களுக்காக உரிய சட்ட செயற்பாடுகள் எடுக்கப்பட்டு வருவதுடன், 2024 மே 20 திகதி முதல் இதுவரை 13 அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றுவதற்காக வழக்கு அலுவல்களில் ஈடுபட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| (d) | விக்டோரியா வலயத்தில் நீர்த்தேக்க காப்புப் பிரதேச காட்டுப் பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்காக அதிகாரசபையினால் தனதாக்கப்பட்ட 20.19 ஏக்கர் காணி 181 நபர்களினால் 30 வருடங்களாக அனுமதியின்றி அனுபவித்தல் மேற்கூறிய அனுமதியின்றிய பயன்படுத்தலில் அடங்கியிருந்தது. | துல்கொல்லயாய 1987 ஆண்டில் காடு வளர்ப்பதற்காக தனதாக்கப்பட்ட போதிலும், அனுமதியற்றவர்கள் 1994 ஆண்டு அளவில் முறைசாரா அபிவிருத்தி காரணமாக அகற்றுதல் நடைமுறைச் சாத்தியமாக காணப்படாததுடன், தனதாக்கப்பட்ட கருமத்திற்கு புறம்பானது என்பதை தவிர்க்க முடியாமையால் முறைப்படுத்துவதற்கான இயலுமையும் காணப்படவில்லை. | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான மிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளிக்களத்தில் தர நிலஅளவையொன்று மேற்கொண்டு குறிப்பிட்ட தகவல்களுடன் பணிப்பாளர் (காணி) இற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (v) | சீ வலையத்தின் கிராந்துருக்கோட்டே அலகின் உல்ஹிடிய நீர்த்தேக்கத்தை அண்மித்து அதிகாரசபையினால் தனியார் கம்பனியொன்றுக்கு முதலீட்டுச் செயற்திட்டம் ஒன்றிற்காக விடுவிக்கப்பட்டிருந்த 511.52 ஏக்கர் காணிக்கு மத்தியில் அமைந்திருந்த சுமார் 50 ஏக்கர் தரைப் பகுதியின் உரிமையை கோரி தனியார் தரப்பினர் ஒருவரினால் பயிர்ச் செய்கை ஒன்று மேற்கொள்வதற்காக 2014 மார்ச் 15 திகதி முதல் 2024 மார்ச் 14 திகதி வரையான 10 வருட காலப் பகுதிக்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 6,522,100 இற்கான தொகையொன்றுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இந்தத் நிலப் பகுதியின் உரிமை தொடர்பாக தகவல்களை பரிசோதனை செய்து குறிப்பிட்ட நபர் சட்ட ரீதியற்ற முறையில் காணியை உரிமையாக்கியிருப்பின் மீண்டும் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அவரிடம் அறவீடு செய்வதற்கும் அல்லது காப்புப் பிரதேசத்தில் காணப்படும் மரங்களை அகற்றுவது தொடர்பாக பயிர்ச் செய்கையாளருக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 வரை எடுத்திருக்கவில்லை. | மகாவலி சீ வலையத்தின் கிராந்துருக்கோட்டே அலகில் வலைய எல்லையை அண்டி 50 ஏக்கர் தரைப் பகுதியொன்று இலக்கம் 17, நவநகரம், கிராந்துருக்கோட்டே என்ற முகவரியையுடைய திரு. ஆர்.எம்.சீ.எம்.ஏ. ரத்னாயக என்பவரால் 16409 ஆம் இலக்கம் கொண்ட காணி உறுதியின் கீழ் அபிவிருத்தி செய்து அனுபவித்து வரப்படுகின்றது. இந்தக் காணிப் பகுதி மகாவலி அதிகாரசபையின் ஆரம்பம் முதல் தனியார் காணியொன்றாக நடாத்திச் செல்லப்பட்டிருந்தமையால் இதுவரை அந்தக் காணி அரச காணியொன்றாக கணித்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்தக் காணியின் சிக்கலற்ற தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| (vi) | மேற்கூறிய அனுமதியற்ற பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுவதற்காக தேவையான சட்ட | திரு. ஏ.எல். புஷ்பலால் மற்றும் திரு. ஆர்.ஏ. இந்திக்க ஆகியோர்களுக்கு விவசாய செயற்திட்டம் ஒன்றிற்காக 45 | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், காணிகளை கைப்பற்றிக் கொள்வதை தடுப்பதற்காக மயுராபுர அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள மகாவலி பாதுகாப்புச் சேனை உத்தியோகத்தர்களுக்கு முடியாமல் இருந்தது. | ஏக்கர் வீதம் இரண்டு காணிப் பகுதிகளை வழங்குவதற்காக பணிப்பாளர் (இ.ப.செ.) பரிந்துரையை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட காணி காட்டு யானை முகாமைத்துவக் காப்புக் பிரதேசத்தை சேர்ந்ததால் காணிகளை விடுவித்தல் தொடர்பாக மீண்டும் தேவையான அறிவுரைகள் வேண்டப்பட்டுள்ள போதிலும், காட்டு யானை முகாமைத்துவ காப்புப் பிரதேசம் 2021 ஆண்டு வெளியிடப்பட்டமையால் காணிகளை விடுவித்தல் மேற்கொள்ள முடியாது என அறிவித்து குறிப்பிட்ட அனுமதியற்றவர்களை அகற்றுவதற்குரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (vii) கண்டி மாவட்டத்தின் கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கெடம்பே கிராம உத்தியோகத்தர் பிரிவில் மகாவலி கங்கைக்கு மத்தியில் அமைந்துள்ள தீவொன்று சுமார் 01 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் காணிப் பகுதியொன்றில் தனியார் தரப்பினர் ஒருவரால் உணவகம் ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த தீவு அமைந்துள்ள பிரதேசம் வலாதென்ன ஹக்கித சுற்றாடல் பாதுகாப்பு வலையத்தில் அமைந்துள்ள தனியார் உணவகம் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 திகதி வரை அந்தக் காப்புப் பிரதேசத்தலிருந்து அகற்றியிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்த உணவகம் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம் என வெளியிடுவதற்கு முன்னர் இருந்து நடாத்தப்பட்டு வந்த வியாபார நிலையமொன்றாக காணப்படுவதால் உணவகம் நடாத்தப்பட்டு வருவதற்காக காணியை குத்தகைக்கு கொடுப்பதற்கு குழுவின் அங்கீகாரம் ஒன்று இன்றி மகாவலி அதிகாரசபையின் சட்ட ஏற்பாடுகள் மீது உணவகம் நடாத்திச் செல்வதற்காக தொழில்நுட்ப பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகள் விதிப்பதன் மூலம் உணவகத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்திறன் மிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| (viii) விக்டோரியா வலையத்தின் அலுத்வத்த ரஜவெல்ல பிரதேசத்தின் பொது மயானம் ஒன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த 3.1 ஏக்கரிற்கான தரைப் பகுதியொன்று 39 நபர்களினால் அனுமதியின்றி | அலுத்வத்த மயானத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியில் 39 அனுமதியற்றோர் நீண்ட காலமாக முறைசாரா நிர்மாண வேலைகள் மேற்கொண்டு காணியை அனுபவித்து வருவதுடன், ஒதுக்கப்பட்டுள்ள | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்திறன் மிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனதாக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக சட்ட நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | கருமங்களுக்கு புறம்பாக நிரந்தரமாக வசித்து வருவதனால் தர நில அளவையொன்று மேற்கொண்டு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை நில வரைபடம் கிடைத்திருக்கவில்லை. | |
| (ங) | அதிகாரசபைக்கு சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், அந்தக் களஞ்சியங்களுக்காக எதுவித வாடகையும் மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. அந்தக் களஞ்சியங்களின் உரிமையை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாக்குவதற்காக அந்தக் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கைக்கு பதிலனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 20 திகதி வரை அந்தக் கட்டிடங்களுக்காக வாடகை அறவீடு செய்வதற்கு அல்லது உரித்தாக்கி கொடுத்தல் தொடர்பாக முன்னேற்றம் ஒன்று அடைந்திருக்கவில்லை. | நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாக்குவதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி குறிப்பிட்ட வாடகையை செலுத்துவதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபை இணங்காவிடின் அந்த நிறுவனம் நிறுவப்பட்டிருந்த சட்டத்தின் அரச காணிகள் இலவசமாக பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றதென நலன்கள் காணப்படின் அந்தச் சட்டத்தின் பிரதியொன்றுடன் விரைவாக அறிவிக்கும் படி நெல் சந்தைப்படுத்ததும் சபைக்கு அறிவித்திருந்த போதிலும், அதற்குரிய பதில் கிடைத்திருக்கவில்லை. | நிலுவை களஞ்சிய வாடகை அறவீடு செய்வதற்காக அவற்றை முறைப் பிரகாரம் விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ச) | தபுத்தேகம நிராவிய பண்ணையில் 146 ஏக்கர் காணிப் பகுதியொன்று விவசாய நடவடிக்கைகளுக்காக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் 2020 ஆண்டில் இராணுவத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அங்கு இராணுவ உத்தியோகத்தர்களின் பண்ணையொன்றில் சுற்றுலா பங்களா மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கியிருந்த போதிலும், எதுவித அறவீடுகளும் அதிகாரசபையினால் | நிராவிய பண்ணைப் பூமியிலிருந்து இலங்கை இராணுவத்திற்கு வழங்கியிருந்த காணிப் பகுதியை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு அதன்படி, குறிப்பிட்ட வாடகை மற்றும் அதன் நீர் மற்றும் மின்சாரம் பயன்படுத்தல் தொடர்பாக இரு தரப்பினரிடையே கலந்துரையாடல் நடைபெற்றுக்கொண்டு | குத்தகை உடன்படிக்கைகளுக்கு அனுப்பி அதன்படி வாடகைத் தொகை மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் அறவீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக கணக்காய்வுத் திகதி வரை சுமார் ரூபா 24 மில்லியன் வருமானம் ஒன்றினை அதிகாரசபை இழந்துள்ளது. | வருகின்றது. | |
| (ஞ) கனிம வளங்களை பிரித்தெடுத்தல் | | |
| (i) வளவ வலையத்தின் மயுராப்புர பிரிவில் 20.2343 ஹெக்டயர் அளவுடைய மண் வெட்டும் செயற்திட்டம் ஒன்றிற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2016 ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனம் 2016 திசெம்பர் 20 திகதி முதல் 2017 திசெம்பர் 19 திகதி வரையான காலப் பகுதியினுள் 66,012 கியுப் மண் அகழ்வதற்காக புவிச்சரிதவில் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு வேத்துரிமை செலுத்தப்பட்ட போதிலும், அதிகாரசபைக்கு செலத்தப்பட வேண்டிய காணிப் பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 51,533,440 தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 19 வரை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இணங்கியவாறு குறிப்பிட்ட நிலப் பகுதியின் புணரமைப்பு அலுவல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | வதிவிட திட்ட முகாமையாளர் (வளவ) குறிப்பிட்ட நிறுவனத்திற்கு நிலுவை காணி பயன்பாட்டுக் கட்டணம் செலுத்தும் படி அறிவிக்கப்பட்டது. எனினும், இதுவரை அந்தப் பணத்தை செலுத்துவதை புறக்கணித்திருந்தமையால், அதற்குரிய சட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவைக் காணி பயன்பாட்டுக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) மகாவலி அதிகாரசபை நிறுவுதல் தொடர்பான சட்டத்தின் பிரிவு 12(ஈ) படி ஏதேனும் விஷேட பிரதேசமொன்றில பௌதீக சுற்றாடல் பாதுகாப்பு மேற்கொள்ளல் மற்றும் அதனை பேணிச் செல்லல், அதிகாரசபையின் பிரதான கருமம் ஒன்றெென இனங்கண்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| a. கணிமப் பொருட்கள் அகழ்வின் போது அகழ்வுப் பூமியில் ஏற்படுகின்ற கிடங்குகள் அந்த பூமியை சுற்றிய சுற்றாடலுக்கு நேரொத்ததாக | 2019 ஆண்டின் பின்னர் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது போலவே அதற்கு முன்னர் வழங்கியிருந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் போதும் | 2019 இற்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த அகழ்வுத் நிலங்கள் மீண்டும் குத்தகைக்கு கொடுக்கும் போது தரையினை |

| | | | |
|---|---|---|---|
| | ஆக்குவதற்காக குறிப்பிட்ட நிலப்பகுதியை மறுசீரமைப்பதற்கு தேவைப்பட்ட போதிலும், 2019 ஆண்டிற்கு முன்னர் அதிகாரசபையினால் அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 20 திகதி அளவிலும், அந்த அகழ்வு நிலங்கள் மறுசீரமைக்கப்படாமல் பாதுகாப்பற்ற முறையில் பாரிய நீர் நிரம்பப்பட்ட கிடங்குகளாக கைவிடப்பட்டிருந்தன. | மறுசீரமைப்பு திட்டமொன்று அங்கீகரித்துக்கொள்ளல் போலவே, அங்கீகரிக்கப்பட்ட மறுசீரமைப்பு திட்டத்தின் படி கட்டணம் அறவீடு செய்து நீடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மறுசீரமைத்தல் தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய உடன்படிக்கைகளுக்கு அணுகுதல் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| b. | 2019 ஏப்ரல் 01 திகதி முதல் நிலப் பகுதியை மறுசீரமைக்கும் கட்டண பாதுகாப்புமுறியினை தடுத்து வைப்பதற்கு சட்டங்கள் ஆக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் காலப் பகுதிக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த அகழ்வு அனுமதிப்பத்திரங்களை மீண்டும் புதுப்பிக்கும் போது அந்த அகழ்வு நிலங்களிலிருந்து நில மறுசீரமைப்புக் கட்டணம் ஒன்று அறவீடு செய்வதற்கு அல்லது நிலம் மறுசீரமைத்தல் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 ஆண்டின் பின்னர் அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மற்றும் அனுமதிப்பத்திரங்கள் நீடிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக மறுசீரமைத்தல் திட்டமொன்று சமர்ப்பிக்கும் படி வலய ரீதியாக முதலீட்டாளர்களுக்கு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்ட மறுசீரமைப்புத் திட்டம் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த தொழில்நுட்பச் சிக்கல் மீண்டும் தயாரிக்கும் போதும் ஏற்பட்டிருந்த தாமதம் மற்றும் 2019 ஆண்டின் பின்னர் அகழ்வு நிலங்கள் செயற்படுத்தப்படாமையால் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த கருமங்களுக்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்வதில் செய்முறைசார் சிக்கல்கள் போன்ற விடயங்கள் காரணமாக மறுசீரமைப்பு செலவினை மீண்டும் செலுத்தப்படக்கூடிய வைப்பொன்றென அறவீடு செய்யாமல் எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அந்த அகழ்வு நிலங்கள் தற்போது இடைநிறுத்தப்பட்டிருந்தது. | இடைநிறுத்தப்பட்டுள்ள அகழ்வு நிலங்களை குத்தகைக்கு கொடுக்கும் போது நில மறுசீரமைப்பு தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |
| c. | கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 | எல் வலையத்தில் காணி பயன்பாட்டுக் கட்டணம் | 2019 இற்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த |

| | | | |
|---|---|---|---|
| | திகதியில் உள்ளவாறு 05 வலயங்களில் காணப்படுகின்ற கைவிடப்பட்டிருந்த 35 கருங்கல் அகழ்வுச் செயற்திட்டங்களில் இருந்து மறுசீரமைத்தல் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. அகழ்வாளர்களினால் அந்த கருங்கல் செயற்திட்டங்களில் இருந்து 197,730 கியுப் எண்ணிக்கையான கருங்கல் அகழ்வு செய்யப்பட்டிருந்தது. | செலுத்துவதை புறக்கணித்திருந்த 02 கருங்கல் செயற்திட்டங்களை இடைநிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வளவ வலையத்தில் 2019.04.01 திகதி முதல் பரிந்துரைக்கப்படும் செயற்திட்டங்களுக்காக நில மறுசீரமைப்புக் கட்டணம் முறையாக அளவிடப்பட்டு வருகின்றது. பீ வலையத்தில் விடுவிக்கப்பட்டிருந்த கருங்கல் செயற்திட்டங்களின் மூலம் ஒரு அகழ்வாளருக்கு கருங்கல் அகழ்வதற்காக 2022 ஆண்டில் விடுவிக்கப்பட்டிருந்த துண்டுகளை பிரித்தல் வரைபு இலக்கம் 14 இன் துண்டு இலக்கம் 01 இற்குரியது மாத்திரம் மறுசீரமைத்தல் தடுத்துவைத்தல் கட்டணம் அந்த சந்தர்ப்பத்திலேயே அறவீடு செய்திருக்கவில்லை. அந்த குத்தகையாளர் இறந்துள்ளதுடன், கருங்கல் அகழ்வுச் செயற்திட்டம் செயற்படவில்லை. கருங்கல் அகழ்வு செயற்திட்டங்களை பரிசோதனை செய்து குறிப்பிட்ட நிலத்தினை மறுசீரமைத்தல் தொடர்பாக இந்த வலையத்தின் சுற்றாடல் உத்தியோகத்தரினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன், அனுமதித்தாரரின் மகனினால் தற்போது அந்தக் காணியில் காட்டுப் பயிர்ச் செய்கை கன்றுகள் நடப்பட்டு பயிரிடப்பட்டு நிலத்தினை மறுசீரமைத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எச் வலையத்தின் நில மறுசீரமைத்தல் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக முன்னேற்றம் காட்டப்பட்டிருந்தது. | அகழ்வு நிலங்களை மீண்டும் குத்தகைக்கு கொடுக்கும் போது அந்த நிலத்தின் மறுசீரமைப்பு தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய உடன்படிக்கைகளுக்கு அணுகுதல், அவற்றை மறுசீரமைப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |
| d. | அகழ்வு அனுமதிப்பத்திரம் நீடிக்கும் சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டின் நிலுவைக் கட்டணத்தை கணித்து அதனை அறவீடு செய்த பின்னர் புதிய அனுமதிப்பத்திரம் | பதில் பொருத்தமாக காணப்படவில்லை. | பொறுப்புகளை புறக்கணித்திருந்த உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கும் முறையான செய்முறையொன்று கடைபிடித்திருக்காமை மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நிலுவைக் காணி பயன்பாட்டுக் கட்டணத்தை நாளதுவரையாக்கி அறவீடு செய்வதில் கவனம் செலுத்தியிருக்காத காரணத்தினால் 2019 ஆண்டு இறுதியளவில் அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை காணிப் பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 1,898,907,760 தொகையாக காணப்பட்டது. | | அறவீடு செய்ய வேண்டும். |
| e. | 2020 திசெம்பர் 14 திகதி අමප /20/1852/317/012 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கருங்கல் வர்த்தகர்களிடம் அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணத் தொகையில் 75 சதவீதத்தை பதிவழிப்பதற்கும் மீதியை 36 தவணைகளில் அறவீடு செய்வதற்கும் வசதி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, சீ,எச்,எல் மற்றும் வளவ வலையங்களில் பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 1,424,180,320 இற்கான தொகை அதிகாரசபைக்கு அறவீடு செய்தவற்கு இயலுமாக இருந்த வருமானம் ஒன்றெனவும், அதிகாரசபையின் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களின் மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் பலவீன மற்றும் செயற்திறனற்ற கடமை நிறைவேற்றுதலின் காரணமாக இந்தத் தொகை அதிகாரசபை இழக்க வேண்டி | கைத்தொழிலாளர்களின் நிலுவைத் தொகையின் 25 சதவீதம் 03 வருடங்களில் 36 தவணைகளாக அறவீடு செய்வதற்கு வழங்கியிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் காரணமாக ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிலுவை பயன்பாட்டுக் கட்டணம் அறவிட முடியாமல் போனது. அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க 25 சதவீதம் என கணிக்கப்பட்ட பயன்பாட்டுக் கட்டணத்தை அறவிடப்பட்டு வருகின்றது. | பொறுப்புக்களை புறக்கணிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன், அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நேரிட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| f. | நிலுவைத் தொகை செலுத்துவதற்கு அகழ்வாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால வரையறை 2023 திசெம்பர் 31 திகதி அளவில் முடிவடைந்திருந்த போதிலும், 65 அகழ்வாளர்களினால் ரூபா 298,362,829 இற்கான தொகை 2024 மே 20 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. இது தொடர்பான மேலதிக பரிசோதனையின் போது 27 அகழ்வாளர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 69,423,300 இற்கான தொகையில் எதுவித தொகையும் அறவீடு செய்திருக்காததுடன், மேலே வழங்கப்பட்டிருந்த சலுகையை முறைகேடாக பயன்படுத்தி 38 அகழ்வாளர்கள் செலுத்த வேண்டியிருந்த தொகையில் மிகவும் குறைந்த தொகையொன்றினை மாத்திரம் செலுத்திவிட்டு மீண்டும் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த அகழ்வாளர்களினால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 373,612,647 இற்கான தொகையில் கணக்காய்வுத் திகதியளவில் ரூபா 228,939,529 இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. அது அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையில் 61 சதவீதமாக காணப்பட்டது. மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக அரசுக்கு கிடைக்க வேண்டிய காணி பயன்பாட்டுக் | காணி பயன்பாட்டுக் கட்டணம் செலுத்தும் படி எழுத்துமூலம் முதலீட்டாளர்களுக்கு அறிவுறுத்தல் வலைய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைளுக்கு அணுகுவதற்காக கோரிக்கைப் பத்திரம் அனுப்புதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவாவறு அனுப்பப்பட்ட போதிலும், கட்டணத்தை செலுத்துவதற்கு முன் வராத முதலீட்டாளர்களுக்கு அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்தல் 1982 இன் 12 ஆம் இலக்க பொது ஆதன விடயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற குற்றங்கள் தொடர்பாக சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய முறைப்பாடுகள் அவ்வவ் கற்சுரங்கங்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அகழ்வாளர்களுக்கு எதிராக சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து கட்டணங்கள் மற்றும் அதற்குரிய சட்டரீதியான வட்டி அறவிடப்பட வேண்டும். |

கட்டணத்தில் 75 சதவீதத்தை கைவிடுவதற்கும் மீதியை 36 தவணைகளில் செலுத்துவதற்கும் அந்த நிலுவைத் தொகைக்காக வட்டி ஏதும் அறவிடப்படாமல் இருப்பதற்கும் ஆகிய சலுகைகள் வழங்கப்பட்ட பின்னரும் அந்த நிலுவைத் தொகையை செலுத்தாத வியாபாரிகளிடம் அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதி வரை சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2023 ஆகஸ்ட் 10 திகதி நடைபெற்ற பொது தொழில் முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் உரிய முறையில் கொடுப்பனவு செய்யப்படாத முதலீட்டாளர்களுக்கு எதிராக விரைவாக பொது ஆதனச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி வழக்குத் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி சீ வலையத்தின் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஏற்பட்டிருந்த ஒழுங்கீனங்கள் தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் படி அரச வளங்கள் பிழையாக பயன்படுத்துவதற்கு இடமளித்தல் தொடர்பாக முன்னைய வதிவிட திட்ட முகாமையாளருக்கு எதிராக தாபனக் கோவையின் படி நடவடிக்கை எடுப்பதற்கும், கணிமப் | ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரையின் படி ஓய்வுபெற்றிருந்த அப்போதைய வதிவிட திட்ட முகாமையாளர் (சீ) என இரண்டாம் நிலை அடிப்படையில் கடமையாற்றிய உத்தியோகத்தருக்கு மற்றும் இந்த அதிகாரசபையில் இருந்து விலகி வேறு நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் அப்போதைய பணிப்பாளர் (காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள்) இனால் திணைக்கள கைநூல்களில் | வருமானத்தை இழக்கச் செய்வதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களின் அகழ்வு தொடர்பாக முழுமையாக பொறுப்பாக இருந்த காணிப் பயன்பாட்டுப் பிரிவின் முன்னைய பணிப்பாளருக்கு எதிராக தாபனக் கோவையின் 02 ஆவது அட்டவணையின் குற்றமொன்று விளைவித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆரம்ப விசாரணை அறிக்கையின் அந்தப் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 மே 20 திகதி அளவிலும் மேல் குறிப்பிடப்பட்ட பிரதான குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்தல் அல்லது பணம் அறவீடு செய்தல் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | மற்றும் அறிவுரைக் கோவைகளில் செயற்பாடுகளை மீறுதல், புறக்கணித்தல், தவிர்ப்புச் செய்தல் தொடர்பாக தாபனக் கோவையின் தொகுதி II அத்தியாயம் XLVIII இன் முதலாவது அட்டவணையின் பிரிவுகள் 8.15 இற்கு இணங்க செயற்படுதல் காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபனக் கோவையின் படி நடவடிக்கை எடுக்கும் படி மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் காரணமாக 2023.06.27 திகதிய கடிதத்தின் மூலம் சட்டப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது. சட்டமா அதிபரின் எழுத்துமூல அறிவுரையின் படி காணிப் பயன்பாட்டுக் கட்டணம் செலுத்தப்படாத மணல் துறைதாரர்களுக்கு எதிராக பொது ஆதனச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்காக தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் படி வதிவிட திட்ட முகாமையாளர் (சீ) இற்கு அறிவுறுத்தப்பட்டதென பிரதி பணிப்பாளர் (சட்டம்) இனால் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2019 பெப்பரவரி 21 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் மண் அகழ்வின் மூலம் சுற்றாடல் பாதிப்பை குறைப்பதற்காக மகாவலி கங்கை இரு மருங்கிலும் 60 மீற்றர் காப்பு எல்லை அடையாளமிடுவதற்கு இணங்கியிருந்ததுடன், அதற்காக 2018 ஆண்டு ரூபா 1,000,000 தொகையும் 2019 ஆண்டு ரூபா 612,300 தொகையும் என மொத்தம் ரூபா 1,612,300 தொகையொன்று இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி வரை நில அளவை அலுவல்கள் அல்லது காப்புப் பிரதேசத்தை அடையாளமிடல் | மகாவலி கங்கையின் இரு மருங்கிலும் 60 மீற்றர் காப்புப் பிரதேச ஆரம்ப நில அளவை அலுவல்கள் நில அளவைத் திணைக்களத்தினால் 2019 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னரான ஆண்டுகளில் கோவிட் தொற்றுநோய் நிலைமை போக்குவரத்து வசதியீனங்கள் மற்றும் காட்டு யானைகள் நிறைந்து காணப்படும் பிரதேசமாக காணப்படல் மற்றும் அந்தக் காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த உயிர்ச் சேதங்கள் காரணமாக நில அளவை அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது. இது தொடர்பாக தொடர்ச்சியாக | காப்புப் பிரதேசத்தை அடையாளமிடும் கருமங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டப்பட்டதுடன், நில அளவை அலுவல்கள் 2024.06.24 திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை காணி முகாமைத்துவத்திற்கு 2016 மற்றும் 2018 ஆண்டுகளின் போது ரூபா 6,973,405 தொகை செலவிடப்பட்டு காணித் தகவல் முறைமையொன்று நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.<br>அவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவிலும் காணி முகாமைத்துவ தகவல்கள் முறைமை செயற்படுத்தப்படாமையால் அந்தச் செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியுள்ளது. | 2021 ஆண்டின் போது LGC 1 முதல் LGC 2 வரை தரவு இடைவெளி மாற்றங்கள் ஏற்பட்டதனால் தரவு முறைமை செயற்படாமல் தரவுகளை உள்ளீடு செய்ய முடியாமல் இருந்தது. இந்த தரவு முறைமையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக வரிசை அமைச்சுச் செயலாளரினால் அமைச்சின் உசாத்துணை பெறுகைக் குழுவொன்று (CPCD) 2024.01.10 திகதி நியமனம் செய்து அதன் பரிந்துரை 2024.05.27 திகதி அமைச்சின் பெறுகை அலுவல்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. Araaya Business Solutions (Pvt) Ltd நிறுவனத்தினால் e-Slim கணினி முறைமை மீண்டும் நிறுவுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,450,000 தொகை மற்றும் ஒரு வருடத்திற்கு மென்பொருள் பொறியியலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,750,000 இற்கான தொகையொன்று செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், LGC 1 முதல் LGC 2 வரை தரவு இடைவெளி மாற்றமடைதலுக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள ரூபா 800,000 இற்கான தொகை மற்றும் தற்போது காணப்படும் அரச காணிகள் தொடர்பான தொழில்பாடு அடங்கக் கூடியவாறு செய்யக்கூடிய விதமாக அரச காணித் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன், தற்போது காணப்படும் முறைமையினை | காணி முகாமைத்துவ தகவல் முறைமை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாளதுவரை ஆக்குவதற்காக வேண்டப்பட்டிருந்த ரூபா 700,000 இற்கான தொகையினை செலுத்துவதற்கு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.<br><br>அதன்படி, e-Slim முறைமை மகாவலி அதிகாரசபையில் செயற்படுத்துவதற்கான பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஈ) நீர்த் தேக்கங்கள், நீர்ப்பாசன வினியோக முறைகள் மற்றும் மின்சார உற்பத்தி மற்றும் வழங்கலுக்கான இயந்திர நிலையங்கள் நிர்மாணித்தல், செயற்படுத்துதல் உட்பட மகாவலி கங்கையின் அபிவிருத்தித் திட்டத்தை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் அதிகாரசபையின் பிரதான கருமங்களில் ஒன்றாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க முறைமைகளின் நிர்மாணச் செலவுகளின் ஒட்டுமொத்த பெறுமதி ரூபா 288.5 பில்லியன் தொகை என பெறுமதி மதிப்பீடு செய்து இருந்த போதிலும், வருடாந்தம் இந்த அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பராமரிப்புச் செலவுகள் மற்றும் பிரதான மறுசீரமைப்பு அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தெளிவாக இனங்காணக்கூடியவாறு அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | பிரதான அணைகள் முறைமைகளின் நிர்மாண வேலைச் செலவுகளின் ஒட்டுமொத்த பெறுமதி ரூபா 420 மில்லியனாகும். அவ்வாறாயினும், வருடாந்த பராமரிப்புக் கிரயத்தை வெவ்வேறாக வகைப்படுத்துதல் நீண்ட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் எதிர் காலத்தில் அந்த விபரங்களை பரிசோதனை செய்து ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது 2020 முதல் 2023 வரை செலவுகள் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் முறைமையின் பராமரிப்பு மற்றும் மறுசீரமைப்புச் செலவுகள் இனங்காணக் கூடியவாறு அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| (ii) மின்சார உற்பத்திக்காக விக்டோரியா, ரன்தெனிகல, ரன்தபே, கொத்மலை, போவதன்ன, மாதுருஓயா, பொல்கொல்ல மற்றும் உடவளவ நீர்த்தேக்கங்களில் நீர் தடுத்து வைக்கப்பட்டு | நீர்த்தேக்கங்களின் சொத்துக்கள், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் மகாவலி அதிகாரசபையினாலும், மின்உற்பத்தி நிலைய செயற்பாட்டு அலுவலகள் இலங்கை மின்சார | மின் உற்பத்திக்காக விடுவிக்கப்படும் நீருக்கு நியாயமான கட்டணமொன்று அறவீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| வினியோகிக்கப்படுவதுடன், அந்த நீர்த் தேக்கங்களின் பராமரிப்பு, செயற்படுத்தலுக்காக அதிகாரசபையினால் பாரிய செலவுப் பொறுப்பொன்று மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் நீர் மின் உற்பத்தி செய்வதற்காக இந்த நீர்த் தேக்கங்களிலிருந்து முறையே 11,042.67 மில்லியன் நீர் கியுப் மீற்றர்கள் மற்றும் 9,210.85 தொகை விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் மூலம் முறையே 2,327.46 கிகா வோட் மணித்தியாளங்கள் மற்றும் 1,845.76 இற்கான மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பணமேதும் அதிகாரசபைக்கு அறவீடு செய்திருக்கவில்லை. | சபையினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களின் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகள் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடையும் கட்டண முறைமையொன்றின் மூலம் நுகர்வோரிடம் அறவிடப்படுகின்றது. எனினும், மகாவலி அதிகாரசபை செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படுவது திறைசேரியிலிருந்து கிடைக்கக்கூடிய வருடாந்த ஏற்பாடுகளின் மூலமே. மகாவலி மீள்கட்டமைப்புத் திட்டத்தின் படி சுயநிதி (Self-Finance) நிறுவனம் ஒன்றாக மாற்றமடையும் செய்முறையின் போது நீர் மின்சக்தி உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களை பராமரித்தல் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ஆக இலங்கை மின்சார சபையின் நீர் மின்சக்தி அலகொன்றிற்கு பராமரிப்புக் கிரயத்தின் 20 சதவீதத் தொகையொன்று (அண்ணளவாக 1 ரூபா மற்றும் 2 ரூபா) அறவீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், இது தொடர்பாக சிறந்த பதிலொன்று இலங்கை மின்சார சபையிடமிருந்து கிடைத்திருக்கவில்லை. | |
| (iii) நீர் மின் உற்பத்திக்கு மேலதிகமாக அதிகாரசபைக்கு சொந்தமான நதிகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள், மற்றும் அணை முறைமைகளின் மூலம் பல்வேறு தொழில்முயற்சிகளுக்காக நீர் பாரியளவில் வழங்கப்படுகின்ற போதிலும், அதற்காக அறுதியான செய்முறை ஒன்றின் கீழ் கட்டணம் அறவீடு செய்தல் தற்போதும் மேற்கொள்ளப்படவில்லை. கணக்காய்விற்கு பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் படி 48 பண்ணைகள் / வேலைத் தளங்களுக்கு ஒரு நாளைக்கு 133,113 கனமீற்றர் நீர் | மகாவலி அதிகாரசபையினால் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற நீர் மூலவளங்களின் மூலம் போசிக்கப்படுகின்ற பல்வேறு செயற்திட்டங்களுக்காக நீர்க் கட்டணம் ஒன்று அறவீடு செய்வதற்கு மகாவலி வலைய மற்றும் பிரதான அணைகள் பராமரிப்புப் பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அந்தச் செய்முறை தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தற்போது 2022 ஆண்டில் மற்றும் 2023 ஆண்டில் முறையே ரூபா 5.33 மில்லியன் தொகை மற்றும் | அதிகாரசபையின் நீர் மூலவளங்களில் இருந்து நீர் வழங்கும் போது அதற்காக கட்டணம் ஏதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்படுகின்றது. | ரூபா 7.09 மில்லியன் தொகை ஒன்று நீர் கட்டணம் என அதிகாரசபை அறவீடு செய்திருந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் வருடாந்தம் மகாவலி நீர் மூலவளங்கள் மூலம் சுமார் 250 மில்லியன் கனமீற்றர் எண்ணிக்கை பெற்றுக்கொள்வதுடன், அதற்காக, எதுவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. | |
| (iv) அதிகாரசபையினால் சிறிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக முதலீட்டாளர்களை தெரிவு செய்தல் மற்றும் அதற்குப் பொருத்தமான 20 இடங்களை இனங்காண்பதற்காக 2011 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 1,297,533 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 10 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதி அதாவது 2024 ஏப்ரல் 28 திகதி வரை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. | 2011 ஆண்டு தெரிவு செய்யப்பட்டிருந்த 20 இடங்களின் 2024.09.30 திகதியில் உள்ளவாறு முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களின் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டு முதலீட்டாளர்கள் மற்றும் பொருத்தமான இடங்களை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |
| (v) மேற்கூறிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக அதிகாரசபையினால் ஒழுங்குறுத்தப்படாத ஆனால், மகாவலி விஷேட அதிகார பிரதேசத்தினுள் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான 65 நீர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக முறையான உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. | இந்த சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் மகாவலி வர்த்தமானி அதிகாரப் பிரதேசத்தில் அமைந்திருந்த போதிலும், அந்த பிரதேசங்கள் நிருவகிக்கப்படுவது குறிப்பிட்ட பிரதேச செயலகங்களினால் அல்லது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழாகும். அதன்படி, செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் போதும் அந்த அலுவலகங்களிலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த உற்பத்தி நிலையங்களுக்கு 15 வருட காலத்திற்கு செல்லுபடியாகக் கூடிய விதமாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் | நீர் மின் உற்பத்தி நிலையங்களின் நீரேந்து பிரதேசங்களின் முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்வதற்காக பொருத்தமான செய்முறையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த அனுமதிப்பத்திரத்தை நாளதுவரை ஆக்கும் போது மகாவலி அதிகாரசபைக்கு இந்த செயற்திட்டங்களுக்காக மீண்டும் தலையீடு செய்வதற்கு இயலுமாக இருப்பதனால் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும பொருத்தமான விதத்தில் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (vi) நிலத்தின் மீது அமைந்துள்ள மற்றும் மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவுவதற்காக பொருத்தமான இடங்களை இனங்கண்டு சூரிய சக்தி முதலீட்டுச் செயற்திட்டங்கள் நிறுவுவதற்காக அதிகாரசபையினால் 692.6 ஹெக்டயார் தரைப் பகுதியொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி வரை 33 முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவில் அவற்றின் 08 முதலீட்டாளர்கள் மாத்திரம் மின் உற்பத்தியில் ஈடுபட்டடிருந்தனர். செயற்திட்டத்தை ஆரம்பித்திருக்காத காணிகளை வேறு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்கான முறையான அதிகாரியாகிய இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையாகும். சூரிய வலு உற்பத்தி ஆரம்பிக்கும் போது இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் ஆரம்ப இணக்கப்பாட்டினை பெற்றுக்கொண்டு பின்னர் குறிப்பிட்ட சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் கட்டாயமாகும். மேலும், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக இலங்கை மின்சார சபை இணங்க வேண்டியிருந்ததுடன், அதன்படி, மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக் உடன்படிக்கை கையொப்பமிடப்பட வேண்டும். கொவிட் தொற்றுநோய் மற்றும் அதன் பினனர் ஏற்பட்டிருந்த பொருளாதார பின்னடைவின் மத்தியில் முதலீட்டாளர்கள் முன்வராமை காரணமாக இந்த விடயம் கால தாமதம் ஆகிய போதிலும் தற்போது கணிசமான முன்னேற்றம் ஒன்றினை அடைந்துள்ளது. | காணிகள் வழங்கும் குறிக்கோள், அபிவிருத்தியின் பின்நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி செய்யாத காணிகளை மீண்டும் உரித்தாக்கி பொருத்தமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |
| (உ) முதலீட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 05 வலையங்களின் தகவல்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் | மகாவலி 10 வலையங்கள் அடங்கக் கூடியவாறு 797 காணித் துண்டுகள் தொடர்பாக | முழுமையாக அபிவிருத்தி செய்யாத செயற்திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு அதிகாரசபையினால் 82 முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 464.68 ஹெக்டயருக்கான காணி அந்த காணிகள் விடுவிக்கப்பட்டு 02 வருடங்களுக்கும் 38 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் குறை அபிவிருத்தி மட்டத்தில் (அபிவிருத்தி 25 சதவீதத்தை விட குறைவு) காணப்பட்டது. | 6,534 ஹெக்டயர் விடுவிக்கப்பட்டிருந்தது. 2023.05.23 திகதி நடைபெற்ற அரச தொழில்முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நாளதுவரையான தரவுகளின் படி விடுவிக்கப்பட்டிருந்த மொத்தக் காணித் துண்டுகளின் எண்ணிக்கையில் 75 சதவீதத்தை விட குறைவான அபிவிருத்தி நிலைமையொன்றுடன் 325 காணித் துண்டுகள் காணப்படுகின்றதென இனங்காணப்பட்டிருந்தது. அதன்படி, பீ வலையத்தை சேர்ந்த குறை அபிவிருத்தி செய்யப்பட்ட 135 தொகை காணித் துண்டுகளும் தற்போது இரத்துச் செய்யப்பட்டு மீதியான வலயங்களிலும் அந்த அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இரத்துச் செய்து காணிகளை திருப்ப பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய செயற்திட்டங்கள் புதிய முன்மொழிவுகளுக்கு இணங்க கால ரீதியாக மேற்பார்வை செய்ய வேண்டும். |
| (ii) | 06 வலையங்களில் 186 முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 229.3 ஹெக்டயர் காணி அரச பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்ளாமல் மொத்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் காணிகளை குத்தகைக்கு கொடுத்து 02 வருடங்களுக்கும் 34 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அரச பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இந்த முதலீட்டு ஆதனங்களில் இருந்து அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு கூடியதாக இருந்த சரியான குத்தகைத் தொகையினை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதில் தாமதம் காணப்படுவதனால் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி மொத்த பெறுமதி மதிப்பீட்டின் படி வரி அறவீடு செய்யப்படுகின்றது. அதன்படி, அரச பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரச பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு குத்தகை அறவீடு செய்ய வேண்டும். |
| (iii) | 05 வலயங்களில் 30 வருட காலத்திற்கான குத்தகையில் வழங்கப்பட்டிருந்த 421.22 | நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் ஆரம்ப 30 வருட | காலம் முடிவடைந்திருந்த இந்த குத்தகைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஹெக்டயரிற்குரிய குத்தகைக் காலம் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவிலும் முடிவடைந்து 06 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்த குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் நிலவுகின்ற அபிவிருத்தி நிலைமையை கவனத்தில் எடுத்து அந்தக் காணி பெறுவோருக்கு மேலும் 30 வருடங்களுக்காக குத்தகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, முதலாவது 30 வருட குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த குத்தகையுறுதிக்காக இரண்டாவது குத்தகைக் காலம் தொடர்பாக குத்தகையுறுதி 2022.11.11 வரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2022.11.11 திகதிய ஜனாதிபதிச் செயலாளரின் கடிதத்தின் மூலம் புதிய காணிகள் விடுவித்தல் இடைநிறுத்தப்பட்டதுடன், அதன்படி, அத் திகதி முதல் 30 வருட காலம் முடிவடைந்த நபர்களுக்காக மீண்டும் குத்தகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. அதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைத்திருந்த அறிவுரையின் படி ஆரம்ப 30 வருட குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த மீண்டும் குத்தகை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக உரிய ஆவணங்கள் ஜனாதிபதிச் செயலகத்திற்கு முறையான படிவம் ஒன்றின் மூலம் அனுப்பப்பட்டது. அதன்படி, அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஆரம்ப குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த குத்தகை உறுதிகள் வழங்குவதற்கு இயலுமாக உள்ளது. | கொடுப்பதற்காக தொடர்பாக புதிய குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்ம், குத்தகை திருத்தங்களை நாளதுவரையாக்கி நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | சீ வலையத்தில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 85.42 ஹெக்டயர் காணி முறைசாரா விதமாக பிறர் மயமாக்கப்பட்டிருந்தது. | மகாவலி அதிகாரசபை அறிந்திருக்காமல் அனுமதியின்றி முறைசாரா விதமாக பிறர் மயமாக்கிய முதலீட்டுச் செயற்திட்டங்கள் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இரத்துச் செய்யும் அலுவல்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | முறைசாராத முதலீட்டுச் செயற்திட்டங்கள் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (v) வளவ வலையத்தின் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 206 ஏக்கர் காணி 2024 மே 10 திகதி அளவில் விடுவிக்கப்பட்டு 2 வருடங்களும் 11 மாத காலம் கடந்திருந்த போதிலும், எதுவித அபிவிருத்தியும் மேற்கொண்டிருக்காததுடன், குத்தகை உடன்படிக்கைகளை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முதலீட்டாளர்களின் குத்தகை அனுமதியை இரத்துச் செய்து குறை பயன்பாட்டுக் காணிகளை மகாவலி அதிகாரசபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், சந்திரவாவிப் பிரிவின் 2022 ஆண்டில் வழங்கியிருந்த புதிய முதலீட்டுக் காணிகள் பகிர்ந்தளித்தல் மேற்கொண்டிருந்த போதிலும், காணிகளை பெற்றுக்கொண்டிருநத முதலீட்டாளர்களினால் அந்தக் காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்காமையால் குத்தகை தொகையை செலுத்தி அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்ளும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் இவர்களின் குத்தகை உரிமையை இரத்துச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக அபிவிருத்தி செய்யாத செயற்திட்டங்களை இரத்துச் செய்து அதற்கான காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (vi) தபுத்தேகம பிரிவின் 406/408 அலகின் அ.க.பி. 80 இன் துண்டு இலக்கம் 366 அரச காப்புப் பிரதேசங்கள் என ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இந்தக் காணிப் பகுதியிலிருந்து தபுத்தேகம பொருளாதார மையத்தின் குப்பை முகாமைத்துவ நிலையத்துக்காக 05 ஏக்கர் தொகையும், பிக்குமாரின் ஆசிரமம் ஒன்றிற்காக 20 ஏக்கர் எண்ணிக்கையும், கொய்யா பயிர்ச் செய்கைக்காக 10 ஏக்கர் எண்ணிக்கையும், திராட்சை பயிர்ச் செய்கைக்காக 12 ஏக்கர் எண்ணிக்கையும் ஒதுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | | |
| a. 2015 மற்றும் 2019 இற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்காக காணிகள் | 2005 ஆண்டின் போது திராட்சைப் பயிர்ச் செய்கைக்காக 12 ஏக்கர்கள் விடுவித்த போது துணை குறுக்குவெட்டின் படி | அனுமதியின்றியவர்கள் அனுபவிக்கும் காணிகள் திருப்பிப் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 25 திகதி அளவிலும் இந்தக் காணிப் பகுதிகள் அறுதியாக நில அளவை செய்து எல்லைகளை அடையாளமிட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு விடுவித்திருக்கவில்லை. அதன் காரணமாக விடுவிக்கப்பட்டிருந்த காணியின் அளவை விட கூடிய எண்ணிக்கையொன்று அவர்களினால் அனுபவிக்கப்பட்டு வருவதுடன், அதற்காக குத்தகை அறவீடு செய்யப்பட்டும் இருக்கவில்லை. | விடுவிக்கப்பட்டிருந்தது. 2013 ஆண்டின் போது கொய்யா பயிர்ச் செய்கைக்காக 10 ஏக்கர் அளவும் துணைக் குறுக்குவெட்டின் படி விடுவிக்கப்பட்டிருந்தது. 2019 ஆண்டில் ஒருகலயாய குப்பை விடுவித்தல் முகாமைத்துவத்திற்காக 2.0267 ஹெக்டயர்கள் கொண்ட காணிப் பகுதியொன்று நில அளவை செய்யப்பட்டு 2018.07.02 திகதி அ.க.பி. 366 மேலதிக 09 துண்டுகள் இலக்கம் - 153 என வரைபு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கணக்காய்வு அவதானிப்புக்களில் காட்டப்பட்டுள்ளவாறு விடுவிக்கப்பட்டிருந்த காணிகளின் அளவினை விட அனுபவிக்கும் காணிகளின் அளவு அதிகரித்தல் மற்றும் அதற்காக குத்தகை அறவீடு செய்யாமை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | |
| b. | 2005 ஆண்டின் போது திராட்சை பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டிருந்த 12 ஏக்கர் அளவு அந்த விடயத்திற்காக பயன்படுத்தியிருக்காததுடன், உரிய முறையில் குத்தகை தொகை செலுத்தப்படாமையால் 2022 ஆண்டின் போது குத்தகையாளரின் குத்தகை உரிமையை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், இணங்கியிருந்தவாறு காணியை திருப்ப அதிகாரசபைக்கு வழங்கியிருக்கவில்லை. 2023 திசெம்பர் 31 திகதி அளவில் இந்தக் காணிகளுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் குத்தகைகத் தொகை ரூபா 489,625 தொகையாக காணப்பட்டது. | 2005 ஆண்டில் திராட்சை பயிர்ச் செய்கை மேற்கொள்ளாமல் அதற்காக செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை காணி உரிமையாளர் செலுத்தாமையால் குத்தகை உரிமை 2022 ஆண்டில் இரத்துச் செய்யப்பட்ட போதிலும், காணியை மகாவலி அதிகாரசபைக்கு ஒப்படைத்து அதிலிருந்து அகன்று செல்லாத காரணத்தினால் உரித்தினை திருப்பிப் பெற்றுக்கொள்தற்கான சட்டத்தின் கீழ் தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | முதலீட்டாளர்களின் நிலுவை குத்தகைத் தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| c. | கொய்யா பயிர்ச் செய்கைக்காக | கொய்யா பயிர்ச் செய்கைக்காக வழங்கியிருந்த சுமார் 10 ஏக்கர் | முதலீட்டாளர்களின் குத்தகை உரிமையை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியிருந்த சுமார் 10 ஏக்கர் பரப்பளவான காணியை குத்தகையாளரினால் பயிர்ச் செய்யப்படாமல் பின்னர் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 30 இலட்சத்திற்கு சட்ட ரீதியற்ற முறையில் விற்பனை செய்து அந்த 10 ஏக்கருக்கு மேலதிகமாக மேலும் இணைந்து காணப்பட்ட சுமார் 08 ஏக்கர் அளவொன்று தனது கம்பனி அந்தப் பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | தரைப் பகுதிக்கு மேலதிகமாக மேலும் சுமார் 08 ஏக்கர் அங்கீகாரம் இன்றி மிகையாக பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த இந்த ஆட்களினால் காணியை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைத்து அதிலிருந்து அகன்று செல்லாமை காரணமாக உரித்தினை திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கான சட்டத்தின் கீழ் தொடர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இரத்துச் செய்து நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்ய வேண்டும். |
| d. | இந்தக் காப்புப் பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் இரண்டு / மூன்று ஏக்கர் எண்ணிக்கையொன்று நபரொருவரினால் அங்கீகாரம் இன்றி அனுபவித்து வருவதுடன், அதில் மா, தென்னை போன்ற நீண்ட காலப் பயிர்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தபுத்தேகம பிரிவின் முகாமையாளரினால் இது தொடரபாக வதிவிட திட்ட முகாமையாளருக்கு அறிவுறுத்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 25 திகதி வரை அந்த அங்கீகாரமற்ற பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த காப்பின் கிழக்கு எல்லையில் இரண்டு, மூன்று ஏக்கர் அளவொன்று நபரொருவரினால் அங்கீகாரம் இன்றி அனுபவிக்கப்பட்டு வருவதுடன், அதில் மா, தென்னை போன்ற நீண்ட கால பயிர்கள் பயிர்ச் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த அங்கீகாரமற்றவரை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன். | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்கள் மற்றும் வலையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| e. | குறிப்பிட்ட காப்புப் பிரதேசத்தின் மீதிப் பிரதேசத்தில் 20 ஏக்கர் நிலப் பகுதியொன்று சர்வதேச விபஸ்ஸனா தியான நிலைமொன்றுக்கு வழங்குவதற்கு பணிப்பாளர் (காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல்) இனால் 2021 ஆண்டின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட நிலப் பகுதிக்காக முறையான குத்தகை அங்கீகாரம் வழங்குவதற்காக | இந்த அ.ஜ.பி. 366 அதி 29 துண்டு இலக்கம் 156 53.9496 ஹெக்டயர் எண்ணிக்கை ஒருகலயாய, தெல்ஹிரியாவ காட்டு மீதிப் பிரதேசங்கள் என ஒதுக்கப்பட்டிருந்த காணியொன்றாக காணப்பட்டதுடன், அந்த பிரதேசத்தின் காணிகளை பயன்படுத்துவதை கவனத்தில் எடுத்து சர்வதேச விபஸ்ஸனா தியான நிலையத்திற்காக 20 ஏக்கர் நிலப் பகுதியொன்று ஒதுக்குவதற்காக பரிந்துரை வழங்கப்பட்டு | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்கள் மற்றும் வலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பரிந்துரைக்கப்பட்ட 20 ஏக்கர் நிலப் பகுதிக்கு புறம்பாக அதிக எண்ணிக்கையின் குடில்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததென வும், அந்த மொத்த எண்ணிக்கையை நில அளவை செய்யும் போது அங்கு 87 ஏக்கர் காணப்பட்டதெனவும், அதற்கு புறம்பாக மேலும், குடில்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதெனவும் தபுத்தேகம வதிவிட திட்ட முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளிற்கான அறிவுரை பெற்றுத் தரும்படி பணிப்பாளர் நாயகத்தை விழித்த கடிதம் ஒன்றின் மூலம் வேண்டப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 25 வரை அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தப் பரிந்துரை வழங்கும் போது 2020 ஆண்டின் போது இந்த நிலப் பகுதியில் காட்டு யானைத் தாக்கம் ஒன்றின் மூலம் ஏற்பட்ட மனித கொலை காரணமாக அடிமட்டக் காட்டை அகற்றுவதற்காக மாவட்ட இணைப்புக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த கள பரிசோதனையின் அவதானிப்புகள் கவனத்தில் எடுக்கப்பட்டது. அதன்படி, 20 ஏக்கர்களை விட கூடிய எண்ணிக்கையான பிரதேசம் ஒன்று ஆச்சிரமத்திற்கு நகருக்கு அண்டிய பிரதேசம் ஒன்றிலிருந்து ஒதுக்குவதற்கு பரிந்துரைக்க முடியாது என எனது அறிவுரையின் படி கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டது. | |
| (ஊ) | 1995 ஜுலை 17 திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மூ.பி.ம.ஹ.4971 காணியின் துண்டு இலக்கங்கள் 03 மற்றும் 05 காணிப் பகுதிகள் அந்தக் கம்பனியினால் பிஸ்கட் கம்பனி ஒன்றிற்கு முறைசாரா விதமாக பிறர் மயமாக்கப்பட்டிருந்ததுடன், குத்தகை தொகையை செலுத்துவதையும் புறக்கணித்திருந்தது. இதன் காரணமாக 2019 நவம்பர் 06 திகதி பணிப்பாளர் நாயகத்தினால் அந்த தெரிவு பொறுப்பினை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்தக் கம்பனி 2023 நவம்பர் 31 திகதி அளவில் இந்தக் காணியில் 75 சதவீதத்திற்கு மிகையான அதாவது முழுமையான அபிவிருத்தி நிலைமைக்கு அபிவிருத்தி செய்து வருமானம் உழைத்திருந்த போதிலும், காணியின் பெறுமதி மதிப்பீட்டை | முறைசாரா விதமாக அனுபவித்து வரும் தற்போதைய அனுபவிப்பாளரின் பெயரில் அதனை முறைப்படுத்துவதற்காக விசாரணை ஒன்று நடாத்துவதற்கு வதிவிட திட்ட முகாமையாளரின் அங்கீகாரத்தை வேண்டி எனினும், ஜனாதிபதிச் செயலாளரின் 2021.11.11 திகதிய கடிதத்தின் மூலம் புதிய காணிகள் விடுவித்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் தற்போதைய அனுபவிப்போரின் பெயரில் குத்தகை உரிமையை முறைப்படுத்துவற்காக விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. ஜனாதிபதி செயலத்தினால் மேற்கூறிய கடிதத்தின் மூலம் விதித்திருந்த தடையை அகற்றிய பின்னர் தற்போதைய | புதிய குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து நிலுவை குத்தகை அறவீடு செய்தல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொண்டு குத்தகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் அதிகாரசபைக்கு பெற வேண்டிய வருமானத்தை இழந்திருந்தது. | அனுபவிப்பாளரின் பேரின் குத்தகை உரிமையை முறைப்படுத்துவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |
| (எ) | வெனிலா, மிளகு, கருவா மற்றும் இஞ்சி சாரந்த உற்பத்தி தயாரிப்பு நிலையம் ஒன்று நிறுவுவதற்காக கொத்மலே கடதொர குடியிருப்பில் 0.226 ஹெக்டயர் கொண்ட காணியொன்றை தனியார் கம்பனி ஒன்றிற்கு 2021 ஜனவரி 05 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணி அல்லது கட்டிடத்திற்காக பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டு அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த முதலீட்டாளருக்கு ஏற்றுமதி பயிர்கள் தயாரிப்பு கைத்தொழிற்சாலையொன்று நிறுவக்கூடிய வகைகள் காணியின் அனுபவிக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், குத்தகையை அறவீடு செய்வதற்கு முறைப் பிரகாரம் அரச பெறுமதி மதிப்பீடு ஒன்று அல்லது முறையான அங்கீகாரம் ஒன்று கிடைத்திருக்கவில்லை. எனினும், இவர்கள் காணியை அனுபவிப்பதனால் மற்றும் அரசுக்கு கட்டணம் அறவிடப்படாமையால் மொத்த மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யயப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குத்தகை உடன்படிக்கைக்கு அணுகுவதற்கும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | ரம்பகன்ஓயா வலயத்தில் பொல்லேபத்த அக்கரதாஹ பிரதேசத்தின் உள்நாட்டு உணவு உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நிதி வசதிகளின் கீழ் முதலீட்டு சந்தர்ப்பங்களுக்காக காணிகள் வழங்குதலின் கீழ் 04 முதலீட்டாளர்களுக்கு 1,750 ஏக்கர் வழங்கப்பட்டிருந்தது. அங்கு | | |
| | (i) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு 150 ஏக்கர் காணி 2020 ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், காணிகள் உரிய முறையில் நில அளவை செய்து முறையான உடன்படிக்கை ஒன்றின் கீழ் வழங்கியிருக்காததுடன், 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக குத்தகை அல்லது அறவிடப்பட வேண்டிய குத்தகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2021 சிறு போகத்திலிருந்து 2023/24 பெரும் போகம் வரை நிலுவைக் குத்தகைத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 4,050,000 கணிக்கப்பட்டிருந்ததுடன், கணக்கீடு செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ii) பெருந்தோட்ட கம்பனியொன்றிற்கு சோளப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டிருந்த 500 ஏக்கர் அவர்களினால் கைவிடப்பட்டிருந்தது. | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இலக்கம் CA(writ) 70/2021 வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேலதிக சொலிசிடர் ஜனரால் இனால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, முதலீட்டாளர்கள் காணியை விட்டுச் சென்றிருந்தனர். | வழக்கு அலுவல்கள் முடிவடைந்ததுடன், காணியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) விவசாயக் கம்பனி ஒன்றிற்கு ஆரம்பத்தில் விடுவிக்கப்பட்டிருந்த 250 ஏக்கர் காணிக்காக 2024 மே 26 திகதி வரை குத்தகை அங்கீகாரம் ஒன்று வழங்கப்பட்டு அல்லது குத்தகை அறவீடு செய்திருக்காததுடன், இணங்கியவாறு ரூபா 1,125,000 இற்கான செயலாற்றுகை பிணைமுறியொன்று எடுத்திருக்கவில்லை. | • இந்தக் கம்பனியில் இருந்து 2020/2021 பெரும் போகம் தொடர்பாக செயலாற்றுகை பிணைமுறி அறவீடு செய்யப்பட்டுள்ளது.<br>• இந்த முதலீட்டாளர்களுக்கு போக குத்தகை செலுத்தும் படி பணிப்பாளர் (காணியின்) இலக்கம் DL/10/2/7-37 மற்றும் 2023.01.16 திகதிய படிவத்தின் மூலமும் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>• அந்தக் கடிதங்களுக்காகவும் முறையாக பதிலளித்திருக்காமையால் குத்தகை தொகையை செலுத்தாமை மற்றும் பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை மீது இந்தக் காணியையும் இரத்துச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | முதலீட்டாளர்களின் குத்தகை உரிமையை இரத்துச் செய்து நிலுவை குத்தகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | பீ வலையத்தின் தமின்ன பிரிவின் அலுத்வெவ அலகு விவசாய செயற்திட்டத்தின் கீழ் தென்னை பயிர்ச் செய்கைக்காக பெருந்தோட்ட கம்பனி ஒன்றிற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் 100 ஏக்கர்கள் 30 ஆண்டு காலப் பகுதிக்காக வழங்குதல் பொலன்னறுவ மாவட்ட செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், குறிப்பிட்ட ஆரம்ப கோப்பு அந்த அலுவலகத்தில் காணாமல் போயிருந்தமையால் காணிக்குரிய ஆரம்ப பெறுமதி மதிப்பீடு அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1983 திசெம்பர் 13 திகதி முதல் குறிப்பிட்ட நீண்ட கால | இந்தக் காணியின் ஆரம்பக் கட்டத்தில் விடுவித்திருந்தது பொலன்னறுவ மாவட்ட செயலாளரினாலேயாகும். அதற்குரிய ஆரம்ப கோப்பு அந்த அலுவலகத்தில் காணாமல் போன காரணத்தினால் அதிகாரசபைக்கு வழங்கப்படவில்லை. அந்த காணிக்காக 03 துண்டுகளாக நீண்ட கால குத்தகை வழங்கப்பட்டிருந்தது. துண்டு இலக்கம் 488 இற்காக ஆரம்ப குத்தகை ரூபா 202 தொகையும், துண்டு இலக்கம் 487 இற்காக ஆரம்ப குத்தகை ரூபா 203 தொகையும், துண்டு இலக்கம் 485 இற்காக ஆரம்ப குத்தகை ரூபா 396 தொகை என காட்டப்பட்டிருந்தது. இந்தக் | காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து குத்தகையை அறவீடு செய்து குத்தகைக் காலம் முடிவடைந்த காணிகளுக்காக புதிய குத்தகை உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் சுற்றறிக்கைக்கு இணங்க குத்தகை திருத்தங்கள் நாளதுவரை ஆக்கப்பட்டு நிலுவை குத்தகை அறவீடு செய்தல் வேண்டும். |

அனுமதிப்பத்திரம் மேற்கூறிய கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, முதலாவது குத்தகைக் காலம் 2013 திசெம்பர் 14 திகதி முடிவடைந்திருந்தது. பின்னர் காணியின் 100 ஏக்கருக்காகவும் ஒரு ஆண்டிற்கு ரூபா 7,302 வீதம் 2013 முதல் 2017 வரையும் ஆண்டிற்கு ரூபா 8,764 தொகை வீதம் 2018 முதல் 2022 வரையும் கூட்டுத்தொகை ரூபா 80,330 தொகை அதிகாரசபையினால் அந்தக் கம்பனியில் இருந்து அறவீடு செய்திருந்தது. 2013 ஆண்டின் முதலாவது குத்தகைக் காலம் முடிவடைந்து இந்தக் காணி தொடர்பாக வேறொரு நிறுவனத்தினால் நீண்ட கால குத்தகையொன்று பெற்றுத் தரும்படி 2013 ஆண்டு முதல் கோறப்பட்டு வந்ததுடன், அப்போது எடுக்கப்பட்ட அரச பெறுமதி மதிப்பீட்டின் படி இந்த 100 ஏக்கர் தென்னங் காணி பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி 2013 திசெம்பர் 12 திகதி அளவில் ரூபா 1,500,000 தொகை என விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, இந்தக் காணிக்காக 2014 முதல் 2018 வரை ஒரு ஆண்டிற்கு ரூபா 604,000 வீதம் ரூபா 3,020,000 தொகையும், 2019 முதல் 2021 வரை ஒரு வருடத்திற்கு ரூபா 724,800 வீதம் ரூபா 2,899,200 தொகை என கூட்டுத்தொகை ரூபா 5,919,200 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், அதிகாரசபையினால் ரூபா 80,330 தொகையொன்று மாத்திரமே அறவிடப்பட்டது. அதன்படி, இந்த முதலீட்டுச் செயற்திட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,838,870 இற்கான தொகையொன்றினை இழந்திருந்தது.

(ஓ) அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்களை வெளித்தரப்பினருக்கு வழங்குதல்

குத்தகைத் தொகை 05 வருடங்களுக்கு ஒருமுறை 50 சதவீதத்தினால்

திருத்தப்படுவதுடன், 2016/02 சுற்றறிக்கையின் படி இந்தக் குத்தகைத் திருத்தம் 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டது. மேலும், முதல் 30 வருடங்கள் குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் குத்தகைக் காலத்தை நீடிக்கும் போது இறுதியாண்டில் அறவீடு செய்யப்பட்ட குத்தகை தொகைக்கு 20 சதவீத குத்தகைத் தொகையொன்று சேர்க்கப்பட்டு இரண்டாவது குத்தகைக் காலத்தின் முதலாவது குத்தகைத் தொகை கணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்தக் குத்தகையாளரின் ஆரம்ப 30 வருட குத்தகைக் காலம் முடிவடையும் போது காணப்பட்ட குத்தகைத் தொகைக்கு 20 சதவீதம் கூட்டப்பட்டு இரண்டாவது 30 வருட குத்தகைக் காலம் தொடர்பாக குத்தகைத் தொகை கணிக்கப்பட்டுள்ளது. இந்தக் குத்தகையை கணிக்கும் போது உரிய சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட்டிருப்பதுடன், உரிய முறையில் குத்தகை கணித்த காரணத்தினால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (i) | அதிகாரசபைக்கு சொந்தமான 1.7176 ஹெக்டயர்களுக்கான நிலப் பகுதியில் அமைந்துள்ள கொத்மலை விடுமுறைக் களிப்பிடப் பிரதான கட்டிடம், விளையாட்டரங்கு, நீச்சல் தடாதம் மற்றும் 15 வீட்டுக் கட்டிடங்கள் அமைந்து களிப்பிடம் வழமையான முறைக்கு புறம்பாக ரூபா 300,000 இற்கான மாதாந்த முகாமைத்துவக் கட்டணத்திற்கு தனியார் தரப்பினர் ஒருவருக்கு 2013 நவம்பர் மாதம் முதல் 10 வருட காலப் பகுதிக்காக உரித்தாக்கியிருந்தது. இந்த முகாமைத்துவக் கட்டணத்தை தீர்மானிக்கப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அந்த முகாமைத்துவ உடன்படிக்கை நிபந்தனைகளின் படி இணங்கியிருந்த மாதாந்தக் கட்டணம் இரு தர்பபினரதும் இணக்கத்துடன் 05 வருடங்களுக்கு பின்னர் அதிகாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 நவம்பர் 25 திகதியின் பின்னர் அந்தக் கட்டணத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த கட்டிடத்தின் கணப்படும் சிற்றுண்டிச்சாலை, சமையறை, அலுவலகம், மாதுபானசாலை விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம், வடிகட்டும் அறை, வெளி கழிவறை மற்றும் வீடுகளில் (கட்டிட இலக்கம் 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 11, 12, 12ஏ, 12 பீ, 14, 15, 18) கிரயம் அல்லது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி முதலீட்டு ஆதனம் ஒன்று என கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2010 ஒக்தோபர் 06 திகதி நடைபெற்ற 219 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்ட தீர்மான இலக்கம் 2914 மூலம் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வதிவிட திட்ட முகாமையாமையாளரினால் (விக்டோரியா / கொத்மலை) விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து 2023 திசெம்பர் மாதம் முதல் 2028 நவம்பர் மாதம் வரை மாதாந்த வாடகை பெறுமதி செய்து தரும்படி வேண்டப்பட்டிருந்தது. அதன்படி, அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீட்டுத் தொகை ரூபா 440,000 தொகை என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, புதிய மாதாந்த வாடகையை பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு உட்படுத்தி 2024.09.05 திகதி 05 வருட காலப் பகுதிக்காக (2023.11.05 முதல் ஆரம்பிக்குத் 05 வருடங்கள்) முறைப் பிரகாரம் புதிய உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை.<br><br>2024 நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வெளி முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கும் போது அதற்காக வழமையான முறைகள் கடைபிடிக்கப்பட்டு குத்தகை உடன்படிக்கைக்கு அணுக வேண்டியதுடன், அதனை முதலீட்டு ஆதனம் ஒன்றெ‌ன கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ii) | அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட திகன விலேஜ் ரிஸோட் 1993 ஜூன் 01 திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் 07 ஏக்கர் காணி மற்றும் அனைத்து வீட்டுத் தளபாடங்களுடனான பிரதான மண்டபக் கட்டிடம், நீச்சல் தடாகம், விளையாட்டறை, தங்கும் | மகாவலி அதிகாரசபையின் அடிப்படை எதிர்ப்பினை ஏற்றுக்கொண்டு முறைப்பாட்டாளரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் தீர்ப்பின் படி இந்த வளாகத்தின் அனுபவித்தலை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையால் வளாகத்தின் அங்கீகாரமற்ற உத்தியோகபூர்வ | இந்த வளாகத்தை மீண்டும் உரித்தாக்கி மீண்டும் குத்தகைக்கு வழங்க வேண்டும். இந்த வளாகத்திற்கு போதியளவு பாதுகாப்பு வழங்குவதற்கும் நட்டம் தொடர்பாக பொறுப்பான தரப்பினரை இனங்காணல் |

அறைகளுடன் வளாகம் சாட்டப்பட்டிருந்தது. மூதலீட்டுத் தரப்பினரினால் சட்டரீதியாக வழங்கப்பட்டிருந்த அளவிற்கு மேலதிகமாக மேலும், சுமார் 03 ஏக்கர் பிரதேசமொன்றும் அனுபவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. 2005 ஆண்டின் போது கம்பனி மிகையாக அனுபவித்து வரும் காணிப் பகுதியை பகிர்ந்து ஒதுக்குவதற்காக அதிகார சபை நடவடிக்கை எடுத்த போது மேற்கூறிய கம்பனியினால் சட்ட நடவடிக்கை எடுத்திருந்ததுடன், 2022 நவம்பர் 21 திகதிய வழக்குத் தீர்ப்பின் படி 2023 பெப்ரவரி 26 திகதி அல்லது அதற்கு முன்னர் விதிக்கப்பட்டவாறு வளாகத்தினை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முறைப் பிரகாரம் ஆதனங்களை திருப்பி ஒப்படைக்காமல் வளாகத்திலிருந்து அகன்று செல்லப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 திகதி அளவில் குறிப்பிட்ட வளாகத்தின் செயற்பாட்டலுவல்கள் நிறுத்தப்பட்டு வருடாமொன்று கடந்திருந்ததுடன், வளாகத்தினுள் உட்புகுவதற்கு முடியாதளவு காடுகள் வளர்ந்து காணப்பட்டதுடன், வளாகம் உட்பட ஏனைய ஆதனங்களின் பாதுகாப்புக்காக போதியளவு வேலைத் திட்டமொன்று மேற்கொண்டிருக்கவில்லை. முதலீட்டின் மூலம் இணங்கியிருந்த நலன்கள் கிடைத்திருக்காததுடன், முதலீட்டுத் தர்பபினர் 1993 ஆண்டு முதல் 20 வருட காலம் இந்த வளாகத்தில் வெளித்தரப்பினர் மற்றும் நிறுவனங்களுக்கு பல்வேறு களியாட்ட அலுவல்களுக்காக மற்றும் வதிவிட வசதிக்காக வழங்கப்பட்டு வருமானம் உழைத்திருந்த போதிலும், அதிகார சபைக்கு எதுவித தொகையும் செலுத்தப்படாமல் வாசஸ்தளம் மற்றும் கைவிடப்பட்ட உத்தியோகபூர்வ வீடுகளின் உரித்தினை அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்படாத உத்தியோகபூர்வ வீடுகள் மற்றும் விடுமுறை களிப்பிடங்களுக்காக 2023.01.28 திகதி அரசின் காணிகள் (உரித்தினை திருப்பிப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 03 வழக்குரிய உரித்தினை தற்போது எமது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன், 78086 மற்றும் 78087 இலக்க வழக்குகளின் கட்டளைகள் 2024.10.18 திகதி வழங்கப்படவுள்ளது. இந்த வளாகத்தில் திரைக்கூடம் ஒன்று நிறுவுவதற்காக முன்மொழிவொன்று சமர்ப்பிக்கபட்டுள்ளமையால் ஜனாதிபதி அலுவலகத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி விடுவிக்கக்கூடாது என அறிவிக்கப்பட்டு 2023.11.03 திகதிய மீண்டும் அங்கீகாரம் இன்றிய கம்பனிக்கு 30 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், அதிகாரசபைக்கு முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேற்கொள்ள வேண்டும். நிலுவைக் குத்தகைத் தொகை அறவீடு செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | பெற வேண்டிய தொகையென கணிக்கப்பட்ட நிலுவை குத்தகை தொகை ரூபா 4,500,000 தொகையாகும். | | |
| | (iii) நிலகம பிரதேசத்தின் வரைபு இலக்கம் 935 மற்றும் 997 இன் கீழ் 33 நபர்களுக்கு 2005 ஆண்டு விடுவிக்கப்பட்டிருந்த 33 காணித் துண்டுகளுக்காக உரிய முறையில் குத்தகை அறவீடு செய்திருக்கவில்லை. | வரைபு இலக்கம் 935 மற்றும் 997 இன் கீழ் எந்த நபருக்கும் காணி விடுவிக்கப்பட்டிருக்காததுடன், வழக்கு அலுவல்கள் முடிவடையும் வரை காணி விடுவித்தல் மற்றும் குத்தகை அறவீடு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளது. | நிலுவை குத்தகை அறவிடப்பட வேண்டும். |
| (ஓ) | தனியார் தொலைபேசி கம்பனிகளுக்கு தொலைபேசி கோபுரங்கள் நிர்மாணிப்பதற்காக 04 வலயங்களுக்கு காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டு 45 தொலைபேசி கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2024 மே 10 திகதி அளவில் 23 தொலைபேசிக் கோபுரங்களுக்காக காணிகள் விடுவிக்கப்பட்டு 02 வருடங்களுக்கும் 28 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதற்காக அரச பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்ளாமல் மொத்த மதிப்பீடொன்றின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்ததுடன், 07 தொலைபேசிக் கோபுரங்களுக்காக காணிகள் விடுவிக்கப்பட்டு 02 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், காணியை பெறுமதி மதிப்பீடு செய்து குத்தகை அறவீடு செய்திருக்கவில்லை. இங்கு காணிகளை விடுவிக்கும் போது அதிகாரசபை மற்றும் அந்தக் கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாமையால் அதிகாரசபை அங்கீகாரம் இன்றி அந்தக் கோபுரங்களை வேறு தொலைபேசிக் கம்பனிகளுக்கு அனுபவித்தலை மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக குத்தகை செலுத்துவதை புறக்கணித்த போது அவற்றை மீண்டும் அறவீடு செய்தல் சிக்கல் தன்மையுடன் | சீ வலையத்தில் தொலைபேசி செலுத்துகை கோபுரங்கள் வேறு கம்பனிகளின் தொலைபேசி உபகரணங்கள் பொருத்தப்படுவது தொடர்பாக விபரங்கள் பெற்றுத் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. எல் வலையத்தில் நிறுவப்பட்டுள்ள செலுத்துகை கோபுரங்கள் கம்பனியினால் மகாவலி அதிகாரசபையின் இணக்கத்துடன், தேசிய தொலைபேசி கம்பனிகளுக்கு ஒன்றித்த செலுத்துகை அலுவல்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒன்றித்த செலுத்துகை அலுவல்கள் மேற்கொள்ளப்படும் கம்பனிகளிடமும் குத்தகை அறவீடு செய்தல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கைகள் மேற்கொண்டு அரச பெறுமதி மதிப்பீடு மீது காணிகளை குத்தகைக்கு கொடுத்தல், உப குத்தகை தகவல் அழைத்தல் மற்றும் நிலுவைக் குத்தகை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றது. | | |
| (ஔ) | வளவ வலயப் பிரதேசத்தின் கைத்தொழில் பேட்டை நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், புதிய கைத்தொழில் பேட்டையொன்று அந்த வட்டாரத்திலேயே ஹல்மில்லகெடிய அலகில் நிர்மாணித்தல் 2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இந்த கைத்தொழில் பேட்டை ஆரம்பிப்பதற்குரிய சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை அல்லது கருதுகோள் பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2024 ஏப்ரல் 28 திகதி வரை அந்தக் கைத்தொழில் பேட்டையில் கைத்தொழில் சாலைகள் ஏதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப கட்டமைப்புசார் திட்டத்தில் கைத்தொழிலுக்காக ஏவப்பட்டு குறை பயன்பாட்டுடன் காணப்பட்ட காணிப் பகுதியொன்று கைத்தொழிலுக்காக பயன்படுத்துவதற்கு செய்தித்தாள் மூலம் விருப்புகள் அழைக்கப்பட்டு மதிப்பாய்வு செய்த பின்னர் காணிகள் ஒதுக்கப்பட்டது. 2020 ஆண்டில் ஆரம்பத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், முதலீட்டாளர்களை தெரிவு செய்து குத்தகை அங்கீகாரம் வழங்குதல் ஆகிய முறையான செய்முறைகளை செயற்படுத்துவதற்காக 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த பின்னடைவின் காரணமாக கைத்தொழிலாளர்கள் புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்காமையால் தொழிற்சாலைகள் நிறுவுவதில் பின்னடைவொன்று காணப்பட்டது. 2022 ஆண்டு முதல் புதிய காணிகள் விடுவித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையால் புதிய முதலீட்டாளர்களை தெரிவு செய்யும் இயலுமையும் காணப்படவில்லை. | புதிய கைத்தொழில் பேட்டைக்கு ஒதுக்கப்பட்டிருந்த வளங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (க) | வீடமைப்புச் செயற்திட்டங்களுக்காக காணிகள் வழங்குதல் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 19 திகதி அளவிலும் அதிகாரசபையின் வளவ வலையத்தில் 35 வீடமைப்புச் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக நிபந்தனைக்ள அடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று அதிகாரசபை மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இடையே மேற்கொள்ளப்படாமல் அதிகாரசபைக்கு சொந்தமான 69 | இது வரை வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 41 வீடமைப்புச் செயற்திட்டங்களுக்காக 37 காணித் துண்டுகளை விடுவிப்பதற்காக இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 14 காணித் துண்டுகளுக்காக எனது பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 14 செயற்திட்டங்களுக்காக பணிப்பாளர் (கா.உ.கொ) இன் மற்றும் வலைய பௌதீக திட்டக் | வீடமைப்புச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்குரிய நிபந்தனைகள் அடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். காணிக் கட்டளைச் சட்டத்தின் படி காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஹெக்டயர் 2018 மற்றும் 2019 காலப் பகுதியில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 30 திகதி வரை இந்தக் காணிகளை சட்ட ரீதியாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு விடுவித்திருக்கவில்லை. மயுராப்புர பிரிவில் றுஹுனுபுர, கருவலவெவ, பொல்ஹித, கல்வெவ, பெல்லகஸ்வெவ, கடுவெவ மற்றும் திஸ்ஸபுர அலகுகளில் இருந்து 65½ ஏக்கர் இவ்வாறு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வீடமைப்புத் திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு வழங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் (காணிகள் பயன்படுத்தல் திட்டமிடங்கள்) மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. முறையான திட்டமொன்று மற்றும் முறைசார் அங்கீகாரமின்றி இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்த காரணத்தினால் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 19 திகதி வரை இந்தக் காணிகளுக்காக பெற்றுக்கொள்ள வேண்டிய குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கும் முடியாமல் இருந்தது. | குழுவின் பரிந்துரையும் பெறப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தின் அணவல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள காணிகளுக்காக முறையான குத்தகை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக இதுவரை பணிப்பாளர் (கா.உ.கொ) இன் பரிந்துரை பெற்றுக்கொண்டிருக்காத 09 வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பணிப்பாளர் (கா.உ.கொ) பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கும் படி உரிய பிரிவின் முகாமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டது. | |

**3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி பீ மற்றும் எல் வலையங்களில் தீவிர சிறுநீரக நோய்க்கு பரிகாரமொன்றாக தரமான நீர் வழங்கலொன்றை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் ரூபா 80,000,000 தொகை செலவிடப்பட்டு 30 நீர் மின் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்குதல், நிர்மாணித்தல், பொருத்துதல் தொடர்வசதிகள் | எல் வலையத்தில் 12 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது பொருத்தப்பட்டு இவற்றை பராமரிக்கப்படுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. எனினும், 2023 ஆண்டின் முறைப் பிரகாரம் இந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் | செயற்திட்டங்கள் சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டு பொருத்தமான இடங்கள் தெரிவு செய்தல், செயற்படாத இயந்திரங்களை விரைவாக திருத்த வேலைகள் |

வழங்குதல் மற்றும் 10 வருட காலத்திற்கு பராமரிப்பதற்காக 2015 ஆண்டில் அதிகாரசபை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் இடையே உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இயந்திங்கள் பொருத்தும் போது இடப் பரிசோதனை மற்றும் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இடங்கள் தெரிவு செய்யப்படாமையால் 05 சுத்திகரிப்பு இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன், பீ வலையத்தில் 04 இயந்திங்களும் பொருத்தப்பட்டது முதல் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. பீ வலையத்தில் 09 இயந்திரங்கள் மற்றும் எல் வலையத்தில் 05 இயந்திரங்களாக 14 தொகை 2014 மே 10 திகதி அளவில் செயற்படாத நிலையில் காணப்பட்டது. எல் வலையத்தில் செயற்படாத நிலையத்தில் காணப்பட்ட 05 இயந்திரங்களில் 03 தொகை 2024 மே 10 திகதி உடன்படிக்கை மேற்கொண்டு செயற்படாத நிலைமையிலேயே காணப்பட்ட போதிலும், விவசாய அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. நீர் வழங்கல் திணைக்களத்துடன், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 13 ஆவது பிரிவிற்கு இணங்க 10 வருட காலம் நீர் சுத்தீகரிப்பு செயற்திட்டத்தின் அத்தியவசிய பராமரிப்பு அலுவல்கள், சேவை வழங்குதல் மற்றும் உதிரிப் பாகங்கள் வழங்குவதற்கு அந்தத் திணைக்களம் இணங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. அந்தத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் அந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான சிறந்த முகாமைத்துவமொன்று மற்றும் உடன்படிக்கையொன்றுடன் விவசாய அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டிருந்தன.

பீ வலையம் வலையதின் மீள் சார்ந்த நீர் சுத்தீகரிப்பு இயந்திரம், நீர் வடிகட்டல் செயற்படாத மட்டத்தில் காணப்பட்ட 09 இயந்திரங்களும் செயற்படு மட்டத்தில் காணப்படுகின்றது. அலகுகளில் பொருத்தப்பட்டிருந்த நீர் வடிகட்டும் இயந்திரங்களில் இருந்து பயன்பெறுவோர் உச்சமட்ட ஆக்கபூர்வ தன்மையை பெற்றுக்கொள்ளாததுடன், வெளிக்கள ஆய்வொன்றின் பின்னர் மேற்கூறிய 03 இயந்திரங்களும் தேவைப்பாட்டின் படி ஏனைய இடங்களில் பொருத்துவதற்காக திட்டமிடப்பட்டு வருகின்றது. எல் வலையத்தின் 12 இயந்திரங்களில் 05 இயந்திரங்கள் செயற்படாது காணப்படுவதுடன், 07 செயற்படு நிலையில் காணப்படுகின்றன. அவற்றை மீண்டும் திருத்த வேலை மேற்கொள்வதற்காக நிதியமொன்று ஏற்படுத்தியிருக்கவில்லை. எல் வலையத்தில் செயற்படாத நிலையில் காணப்பட்ட 05 இயந்திரங்களும் 2023 ஆண்டில் முறையான உடன்படிக்கை ஒன்றின் மூலம் விவசாய அமைப்புக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அந்த நீர் சுத்தரிப்பு இயந்திரங்களின் திருத்த வேலை மேற்கொண்டிருக்கவில்லை. தேசிய சமூக நீர் திட்டங்கள் திணைக்களத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 10 வருடங்கள் வரை இந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை சேவை செய்தல் மற்றும் பராமரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவர்களினால் அந்த மேற்கொண்டு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்குதல் மற்றும் விளைவற்றுக் காணப்படும் சுத்திகரிப்பு இயந்திரங்கள் தேவையான இடங்களில் மீண்டும் பொருத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | கண்காணிப்பொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மொரனஹகந்த நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் வீடுகள் மற்றும் ஆதனங்களை இழந்த பொது மக்களுக்கு மீள்குடியேற்றும் அலுவல்கள் 2012 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2022 நவம்பர் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.<br><br>இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்களை குடிப்பதற்காக மற்றும் ஏனைய அலுவல்களுக்காக நீர் வழங்குவது தொடர்பாக திட்டங்கள் தயாரிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவிலும் வெல்லேவெல மற்றும் நவகுருவெல ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்ட முறையே 47 குடும்பங்கள் மற்றும் 426 இற்காக குடிப்பதற்கு மற்றும் ஏனைய தேவைப்பபாடுகளுக்கு மாதாந்தம் பவுஸர் வண்டிகளின் மூலம் நீர் வழங்க நேரிட்டிருந்தது. 2023 ஆண்டில் ரூபா 40,733,958 தொகை மற்றும் 2024 ஜனவரி முதல் மார்ச் வரை ரூபா 8,548,473 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.<br>இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்களில் 03 அலகுகள் சேரந்து 161 குடும்பங்களுக்காக கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவிலும் வயற் காணிகள் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களின் வாழ்வாதாரம் இழக்கப்பட்டிருந்த காரணத்தினால் ஆரம்பத்தில் செயற்திட்டம் மூலமும் பின்னர் 2022 ஜூலை மாதத்திலிருந்து கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி வரை அதிகாரசபையினாலும் என 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் மொத்தம் ரூபா 13,882,846 தொகை இந்த மீள்குடியேறியவர்களின் உலர் உணவுப் பங்கீடு என வழங்கப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் | மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டம் காரணமாக இடம் பெயர்ந்த குடியிருப்புவாசிகள் வெல்வேவல மற்றும் குருவெல குடியிருப்புகளில் மீள் குடியேற்றப்பட்டதுடன், குருவெவ பிரிவுக்காக 08 பவுஸர் வண்டிகளும் வெல்வேவல பிரிவுக்காக 04 பவுஸர் வண்டிகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வலையத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு 2024 செப்தம்பர் மாதம் வரை பயன்படுத்தப்பட்டதுடன், ஆண்டின் மீதியான 03 மாதங்களுக்காக நீர்ப்பாசன அமைச்சினால் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நீர் வழங்குவதற்காக குடிநீர் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் அலுவல்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டு வருவதுடன், நீர் வழங்குவதில் மேலும் தாமதம் ஏற்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.<br>புதிய அபிவிருத்தி வலையத்தில் குடியமர்த்தப்பட்ட பொது மக்களுக்காக அவர்கள் குடியமர்த்தப்பட்ட வயற்காணிகளை கரடுமுரடுத் தன்மை மட்டப்படுத்துவதாக தொழல்நுட்ப சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், அந்த மட்டப்படுத்தப்பட்ட அல்லது வயற்ககாணிகளை வழங்கப்பட்டிருக்காத மக்களுக்கு வழங்கி பூர்த்தி செய்ய முடியாமை ஜனாதபதி செயலாளரினால் மகாவலி அதிகார சபைக்கு அனுப்பியிருந்த PS/LSA/00/08/මහවැලි (පොදු) | செயற்திட்ட சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டு சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக்கொள்ளல் மற்றும் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 28 திகதியில் உள்ளவாறு மேலும், 181.5 ஏக்கர் வயற்காணியாக தயாரிப்பதற்கு இனங்கண்டிருந்ததுடன், அவற்றில் 72 ஏக்கர் காட்டு நிலங்களை முழுமையாக துப்புரவு செய்வதற்கும் 87 ஏக்கர்கள் கடடுமுரடானதை மட்டம் செய்வதற்கும் மீதியாக இருந்தது. | இலக்கம் கொண்ட 2022.11.11 திகதிய கடிதத்தின் மூலம வழங்கியிருந்த அறிவுரையின் காரணமாகவே ஆகும் என அறிவிக்கின்றேன். அதனால் நிறுவனம் ஒன்று என்ற வகையில் மகாவலி அதிகாரசபையாகிய எமக்கு இந்த நிலைமைக்காக தீர்வொன்று கிடைக்கும் வரை உலர் உணவு பங்கீடு மாதாந்தம் தற்போது மீதியாக இருக்கும் 65 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நேரிட்டுள்ளது. | |
| (இ) | உத்தியோகபூர்வ வீடுகளின் நிருவாகம் | | |
| | (i) அதிகாரசபையின் சீ வலையத்தின் உத்தியோகபூர்வ வீடுகளின் பௌதீக பரிசோதனையின் போது 07 பிரிவுகளில் 775 உத்தியோகபூர்வ வீடுகளில் 192 பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன், மீதியான உத்தியோகபூர்வ வீடுகளின் திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டிய மட்டத்தில் காணப்பட்டது. உத்தியோகபூர்வ வீடுகளை உரிய முறையில் பராமரிக்காமையால் மிக விரைவில் பாழடையும் நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. நிலுவைக் குத்தகையை அறவீடு செய்தலும், திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | இந்த உத்தியோகபூர்வ வீடுகள் 30 – 40 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவையாக காணப்படுவதனால் ஓரளவு பயன்படுத்த முடியாத மட்டத்தில் காணப்பட்டது. இதை சரி செய்து பயன்படுத்தக்கூடிய மட்டத்திற்கு ஆக்குவதற்கு பாரிய செலவொன்று மேற்கொள்ள நேரிடும். அதனால் எதிர்காலத்தில் வலயத்திற்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாட்டுத் தொகையை கவனத்தில் எடுத்து அடுத்த சில வருடங்களில் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்தக்கூடிய உத்தியோகபூர்வ வீடுகளை மாதாந்த வாடகை அடிப்படையில் அதற்குரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். முழுமையாக சிதைவுற்ற உத்தியோகபூர்வ வீடுகளை பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் உடைத்து அகற்றுவதற்கும் வரிசை நிறுவனங்களின் வேண்டுகோளின் படி விடுவிக்கக்கூடிய உத்தியோகபூர்வ வீடுகளை பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொண்டு விடுவிப்பதற்கு | உத்தியோகபூர்வ வீடுகள் பராமரித்தல் மற்றும் நிலுவை குத்தகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுப்பேன். | |
| (ii) | வெகரகல பிரிவின் 66 உத்தியோகபூர்வ வீடுகள் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்து மீண்டும் மகாவலி அதிகாரசபைக்கு கிடைக்கப் பெற்று உத்தியோகபூர்வ வீடு பட்டியலில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் நிருவாகம் மற்றும் வாடகையை அறவீடு செய்தல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த உத்தியோகபூர்வ வீடுகளை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வீடுகள் எமது நிறுவனத்திற்கு முறைப் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன், சொத்துக்கள் பதிவேட்டிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி எதிர்காலத்தில் முறையான குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு இந்த சிக்கலை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதற்காக முறையான தகவல் முறைமையொன்று நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென அறிவிக்கின்றேன். | உத்தியோகபூர்வ வீடுகளை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவதற்கும் மற்றும் வாடகை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | வாடகை அறவீடு செய்யப்படாமல் விவசாய அமைப்புக்களுக்கு உத்தியோகபூர்வ வீடுகள் வழங்கப்பட்டதுடன், அது தொடர்பாக அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 372,264 இற்கான நிலுவை வீட்டு வாடகைத் தொகையொன்று அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்ட உத்தியோகபூர்வ வீடொன்றுக்கு அண்மையில் அங்கீகாரம் இன்றி வதிவோர் அவரின் வீட்டை நிர்மாணித்திருப்பதுடன், உத்தியோகபூர்வ வீட்டின் கூரையை முழுமையாக கழற்றி அகற்றப்பட்டிருந்தது. | வாடகை அறவிடப்படாமல் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கிய உத்தியோகபூர்வ வீடுகளுக்காக இணக்க உடன்படிக்கை நாளதுவரை ஆக்குவதற்கு மற்றும் உடன்படிக்கைகள் காணப்படாத ஆட்களுக்காக உடன்படிக்கைகள் தயாரித்து அவற்றை முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக அங்கீகாரம் இன்றி தனியார் வீடொன்று நிர்மாணித்தல் தொடர்பாக சட்டச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை உத்தியோகபூர்வ வீட்டு வாடகை செலுத்தாமை தொடர்பாக 38 கோறிக்கைப் பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ வீடுகள் தொடர்பாக உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கொத்மலை பிரதேசத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வீடொன்று கொத்மலை முகாம் வளாகத்தில் காணப்படும் கட்டிடம் | முறையான குத்தகை உடன்படிக்கையொன்று இன்றி வதிவிட திட்ட முகாமையாளரின் கையொப்பத்துடனான | குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டு அரச பெறுமதி மதிப்பீட்டின் மீது அந்தக் |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்று மற்றும் தொரகல தோட்ட பங்களா கட்டிடங்களுடனான சுமார் 1.311 ஹெக்டயர் காணி பல சந்தர்ப்பங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், முறையான குத்தகை உடன்படிக்கையொன்று கட்டிடங்களுக்காக அரசாங்க பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை. கட்டிடங்களை ஒப்படைக்கும் போது அவற்றில் காணப்படும் பண்டங்கள் தொடர்பான பண்டப் பதிவுப் புத்தகம் ஏதும் நாளதுவரை ஆக்கப்பட்டு கோப்பில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த அனைத்துக் கட்டிடங்களிலும் 57 பீ இலக்கம் கொண்ட உத்தியோகபூர்வ வீட்டிலிருந்து மாத்திரம் ரூபா 3,000 தொகை மாதாந்த வாடகை அறவிடப்படுவதுடன், ஏனைய கட்டிடங்களிலிருந்து அதிகாரசபைக்கு வாடகைத் தொகை ஏதும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த ஆதனங்கள் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்கள் எனவும், பெற வேண்டிய குத்தகைத் தொகை நிலுவை வருமானம் எனவும் இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிபந்தனைகளுடனான காணிகள் ஒப்படைக்கப்பட்டுளளன. இந்த கட்டிடங்களை ஒப்படைக்கும் போது கட்டிடங்களின் விபரம் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் பண்டப் பதிவேடொன்று காணப்படவில்லை. எதிர் காலத்தில் இந்தக் கட்டிடத்தில் காணப்படுகின்ற பண்டங்களை பதவு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். இலக்கம் 57 பீ கொண்ட உத்தியோகபூர்வ வீட்டுக்காக மாதாந்தம் ரூபா 3,000 தொகை வீதமும், பழைய தோட்ட பங்களாவிற்காக மாதாந்தம் ரூபா 10,000 தொகை வீதம் அறவீடு செய்வதற்கும் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | கட்டிடங்களை வாடகைக்கு கொடுத்து பண்டப் பதிவேடு தயாரிக்கப்பட்டு நிலுவைக் குத்தகை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |
| (உ) | அதிகாரசபையின் திகன சுற்றுலா பங்களாவிற்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வீடு பொலன்னறுவை பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவருக்கு 2023 ஆகஸ்ட் 08 திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 வரை முறையான குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு அல்லது வீட்டுக் குழுவின் அங்கீகாரம் ஒன்றை | திகன மகாவலி முகாமையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வீடு வீர இடம் 121/4 இலக்க முகவரியில் திருமதி ரனவக முதியன்ஸேலாகே மல்லிகா குமாரிக்கு முறைப் பிரகாரம் 2023.08.08 முதல் 2024.08.07 வரை குத்தகை உடன்படிக்கையொன்றென மாதாந்த வாடகை ரூபா 4,800 தொகையாக 2023.08.08 திகதி உடன்படிக்கையொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன், அப்போதும், நீர் மற்றும் | அங்கீகாரம் இன்றி அதிகாரசபைக்கு சொந்தமான ஆதனங்களை பயன்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும், இந்த வீட்டின் கூரை முழுமையாக திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக அதிகாரசபையின் பூர்வாங்க எழுத்துமூல அங்கீகாரம் அல்லது அது தொடர்பான செலவு அறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் அந்தச் செலவுகள் அதிகாரசபையினால் மீளாளிப்புச் செய்யப்படமாட்டாது என உறுதிப்படுத்தி முறையான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை அணுகுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தமையாலும் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமையாலும் மாதாந்த வாடகையும் அறவீடு செய்ய முடியாமல் காணப்பட்டமையால் குத்தகை உடன்படிக்கையும் முடிவடைந்திருந்தது. அதன்படி, இதன் திருத்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 50 சதவீத அளவொன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட குத்தகை உடன்படிக்கையின் வரைபு தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக வழங்கியிருந்த பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி தற்போது சட்டப் பிரிவின் அறிவுரையின் படி தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | மனம்பிடிய, அரலகங்வில பிரதான பாதைக்கு முன்னோக்கி 1.5 ஏக்கர் காணிப் பகுதியொன்றில் சவுதி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 48,000,000 தொகை செலவிடப்பட்டு 1999 ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 48 இரண்டு மாடி கடையறைகளைக் கொண்ட ரியாத் வர்த்தக தொடர் கட்டிடத்தின் 23 கடையறைகள் 2000 ஆண்டின் போது மாதாந்த வாடகை அடிப்படையில் வியாபாரிகளுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் 11 கடையறைகள் மீண்டும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. 2024 நவம்பர் 13 திகதி அளவில் 12 கடையறைகள் மாத்திரம் வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டிருந்தது. மூடப்பட்டிருந்த கடையறைகளுக்காக நீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் கழிவறை முறைமை, | இந்த வர்த்தகத் தொடர் கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக குழுவொன்றின் மூலம் கள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பணிப்பாளர் (காணிப் பயன்படுத்தல் மற்றும் திட்டமிடல்) இன் LUP/SYS-B/01 VOL.VI-2021 இலக்கம் கொண்ட 2021.08.02 திகதிய கடிடத்தின் மூலம் பிரதிப் பணிப்பாளரம் நாயகம் (தொழில்நுட்ப சேவை) இற்கு குறிப்பிட்ட கட்டிடத்தை மறுசீரமைப்பதற்குரிய மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கின்றேன். அவ்வாறிருக்கும் போது 2023.12.28 திகதி திம்புலாகல பிரதேச ஒருங்கிணைப்புக் | செயற்திட்ட சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்வதற்கும் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூறை மற்றும் சிவிலின் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. இந்த வர்த்தக கடைத்தொகுதியை பொதுமக்களை கவரக்கூடிய விதமாக மறுசீரமைப்பதற்கு ரூபா 30.7 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட நேரிடும் என அதிகாரசபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு தயாரித்திருந்த மதிப்பீட்டின் மூலம் கண்டறிப்பட்டது. இவ்வாறான வர்த்தகத் தொடர் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு முன்னர் எல்லாத் தகவல்களும் அடங்கக் கூடியவாறு சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் 48 கடையறைகளில் 30 இற்கு மிகையான எண்ணிக்கையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த நாள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. இதன் காரணமாக இந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 48 மில்லியன் தொகை சிக்கனமற்ற செலவொன்றாகும். | கூட்டத்தில் திம்புலாகல பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக அதிகாரசபையினால் தீர்மானம் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (எ) அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிடங்கள் வெளி நிறுவனங்களுக்கு வழங்குதல் | | |
| (i) மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் அலுவலக மாடிகளின் மூலம் வருமானம் உழைப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. தலைமை அலுவலகக் கட்டிடம் 01 மாடி, 11 மாடி மற்றும் 12 மாடிகள் முறையே நீர்ப்பாசன அமைச்சு – மகாவலிப் பிரிவு, நீர்ப்பாசன அமைச்சு அலுவலகம் மற்றும் வெவ்கம் புபுதுவ செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஜாவத்தையில் அமைந்துள்ள மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிடங்கள் 06 நிறுவனங்களுக்கு வாடகைத் | ஏற்றுக்கொள்கின்றேன். தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொண்டேன். | கட்டிடங்களை வெளி நிறுவனங்களுக்கு வழங்குவது புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு பொருத்தமான வாடகையொன்று அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ஏதும் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | கட்டிடங்கள் மற்றும் தலைமை அலுவலக மாடிகள் தொடர்பாக நீர் மின்சாரம் மற்றும் சுத்திகரிப்பு பில்பத்திரம் இலங்கை மகாவலி அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 திகதி அளவு மேற்கூறிய நிறுவனத்தினால் மீளளிப்பு செய்யப்படாத நிலுவை நீர், மின்சார மற்றும் சுத்திகரிப்பு பில்பத்திரங்களின் பெறுமதி முறையே ரூபா 1,131,891 தொகை, ரூபா 7,220,815 தொகை மற்றும் ரூபா 3,711,119 தொகையாக காணப்பட்டதுடன், அந்தத் தொகைகளை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த நிறுவனங்களிலிருந்து இந்த அதிகாரசபைக்கு 2023.12.31 திகதி அளவில் நீர், மின்சாரம் மற்றும் சுத்திகாரிப்பு சேவை வழங்குவதற்காக அறவீடு செய்யப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 11,056,377 தொகையாக காணப்பட்டதுடன், அந்தத் தொகையில் ரூபா 3,863,186 இற்கான தொகையொன்று 2024 ஆண்டில் கிடைத்திருந்தது. அதன்படி, மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 7,193,191 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | மீளளிப்புச் செய்யப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை நீர், மின்சாரம் மற்றும் சுத்திகரிப்புக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பகமூன பஸ் தரிப்பிடம் நிர்மாணித்தல் ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் படி 2022 ஏப்ரல் 04 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 ஏப்ரல் 28 திகதி வரை அந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருக்காததுடன், நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. | நிர்மாண வேலை மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்டிருந்த தீவிர அதிகரிப்பு மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பண ஏற்பாடுகள் இன்மையால் இரு தரப்பினரின் இணக்கத்துடன், 2023.05.12 திகதி இரத்துச் செய்யப்பட்டது. மீதியான வேலைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதுடன், பண ஏற்பாடுகள் 2025 ஆண்டில் பெற்றுக்கொள்ள முடியுமாயின் மீதியான வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட கருமங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மகாஓயா வளயத்தில் உத்தியோகபூர்வ வீடுகள் நிர்மாணிப்பதற்காக 2017 நவம்பர் 14 திகதி ரூபா 4,843,183 இற்கான ஒப்பந்த வேலையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் படி 2018 மே 06 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட | வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என செலுத்தியிருந்த ரூபா 758,678 இற்கான தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அதற்கான பிணைமுறியை வழங்கியிருந்த நிர்மாண வேலை பாதுகாப்பு நிதியம் (CGF) மூலம் | நிர்மாண வேலைகள் கைவிடப்பட்ட ஒப்பந்த வேலைகள் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்பட்டிருந்த நட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவிலும் ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்படாமல் குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. அங்கு வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 1,422,931 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கும் ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024.07.30 திகதி அறவீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், செயலாற்றுகை பிணைமுறியாகிய ரூபா 484,319 தொகையும் நிர்மாண வேலை பாதுகாப்பு நிதியத்தின் மூலம் (CGF) அறவீடு செய்யப்பட்டது. இங்கு மீதியான வேலையை பூர்த்தி செய்வதற்கான மதிப்பீடு (ரூபா 3,867,407 மில்லியன்) செய்யப்பட்ட போதும் நாட்டில் நிலவிய நிதிக்கட்டுப்பாடு காரணமாக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக பணம் ஒதுக்கப்படாமையால் அதன் நிர்மாண வேலை அலுவல்களை முன்கொண்டு செல்ல முடியாமல் இருந்தது. | அறவீடு செய்வதற்கும் உத்தியோகத்தர்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் பூர்த்தி செய்யப்படாத வேலைப் பகுதிகளை பரிசோதனை செய்து பூர்த்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரத்கித சுற்றுலா பங்களா திருத்த வேலை தொடர்பான ஒப்பந்த வேலை 2018 திசெம்பர் 24 திகதி ரூபா 12,107,000 இற்கான ஒப்பந்தத் தொகைக்கு மேற்கூறிய ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2019 ஜூலை 19 திகதி அளவில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவில் ஒப்பந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 3,447,508 இற்கான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத் தொகையை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் வழங்கும் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்டிருந்த வங்கிப் பிணைமுறியில் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் நிர்மாண வேலை பாதுகாப்பு நிதியத்தின் கணக்கொன்றில் வைப்புச் செய்யும் படி நிபந்தனை ஒன்று காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக அனைத்து கொடுப்பனவுகளும் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருத்தல் மற்றும் அச் | இந்த ஒப்பந்த வேலையை இரத்துச் செய்த பின்னர் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத் தொகை மற்றும் செயலாற்றுகை பிணை முறித் தொகை பிணைமுறி வழங்கப்பட்ட நிர்மாண வேலை பாதுகாப்பு நிதியத்தின் (CGF) மூலம் அறவீடு செய்ய வேண்டி இருந்தது. இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் இந்த நிதியம் (CGF) உடன் கலந்துரையாடிய பின்னர் அந்தத் தொகையினை செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன், வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்ட மீதித் தொகை ரூபா 1,536,926 தொகை செயலாற்றுகை பிணைமுறி ரூபா 605,390 தொகை 2024.09.12 திகதி அறவீடு செய்யப்பட்டது. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது புதிய நிர்மாண வேலைகளுக்காக பண ஏற்பாடு ஒதுக்கப்படாததுடன், எதிர்காலத்தில் இது தொடர்பாக தேவையான ஏற்பாடுகளை | சுற்றுலா பங்களா திருத்த வேலைகள் கைவிடப்பட்ட ஒப்பந்த வேலைகள் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கும் உத்தியோகத்தர்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் பூர்த்தி செய்யப்படாத வேலைப் பகுதிகளை பரிசோதனை செய்து பூர்த்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பத்தில் வங்கி பிணைமுறியின் கால எல்லை முடிவடைந்திருந்த காரணத்தினால் இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. இந்த ஒப்பந்த வேலைகள் தொடர்பாக வேலை ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மேற்கொள்ளப்பட வேண்டிய மீதி வேலையை இனங்கண்டு புதிய ஒப்பந்த வேலையொன்று வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் கூரை அகற்றப்பட்டிருந்தமையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதி நாளுக்கு நாள் சேதமடைந்து கொண்டிருந்தது. | ஒதுக்கி இந்த விடயத்தை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தம்மன்னாவ குளத்தை அண்டி பொருளாதார நிலைமையொன்று நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2021 ஒக்தோபர் 12 திகதி ரூபா 6,514,819 தொகைக்கு மத்திய பொறியியல் உசாத்துணை பணியத்திற்கு சாட்டப்பட்டு 2021 ஆகஸ்ட் 23 திகதி ரூபா 2,062,201 இற்கான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் ஒன்று விடுவிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட நிர்மாண வேலை அலுவல்கள் 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஏப்ரல் 28 திகதி அளவில் குறிப்பிட்ட ஒப்பந்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பதற்காக கொடுக்கப்பட்டிருந்த முற்பணத்திற்கு 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் 2024 மார்ச் 25 திகதி அளவில் அதனை திருப்பி அறவீடு செய்வதற்கு அல்லது ஒப்பந்த வேலை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த வேலை மேற்கொள்ளவதற்கு உரிய காணி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காப்பு எல்லையில் அமைந்துள்ளதால் நிர்மாண வேலைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காமையால், 2023.04.28 திகதி அண்யோண்ய இணக்கப்பாட்டுடன், முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், இந்த நிர்மாண வேலைக் குரிய ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் ஆகிய ரூபா 2,062,201 இற்கான தொகை அந்த ஒப்பந்தக் கம்பனிக்கு மகாவலி அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய கலாவெவ சுற்றுலா பங்களா நவீனமயப்படுத்தும் பில் பத்திரத்தில் இருந்து கழித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை உறுதிப்படுத்துவதும், வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை அறவீடு செய்ய வேண்டியதுடன், உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் முற்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மத்திய மாகாண அலுவலகமாக | அமைச்சரவை தீர்மானத்தின் படி உத்தேச புதிய கட்டிடத்தின் | முறையான திட்டமிடல் மற்றும் வேலை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்ற பொல்கொல்ல அணைக்கரைக்கு அருகில் அமைந்துள்ள மகாவலி அதிகாரசபைக்கு உரித்தாக்கி மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குரிய குண்டசாலை வராபிடிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றில் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணித்துக் கொடுப்பதற்காக இலங்கை மகாவலி அதிகாரசபையினால் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு ரூபா 32,096,839 இற்கான ஒப்பந்த வேலையொன்று கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் கணக்காய்வு திகதியாகிய 2024 மே 10 திகதி அளவில் இணங்கியவாறு 04 மாடிகளை கொண்ட கட்டிடத்தை நிர்மாணிக்காமல் தரை மாடி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்ருந்ததுடன், அதுவும் முறையாக பூர்த்தி செய்யாமல் பாதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் குறிப்பிட்ட கட்டிடம் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி வரை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. | முதலாம் கட்டம் திட்டமிடப்பட்டு நிர்மாணித்து ஒப்படைக்கும் (Trunkey) அடிப்படையின் மீது வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 32,096,839 தொகையாகும். பணம் முதலாம் கட்டமாக தரை மாடியின் சிலப் (Slab level) வரை நிர்மாணிப்பதற்கு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த கட்டிட அலுவலகம் நிர்மாணித்தலின் மீதி வேலைகளுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் எதிர் காலத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் நிர்மாண வேலைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கும் அலுவலக வேலைகளை ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றதென அந்த அதிகாரசபை அறிவித்திருந்தது. | கண்காணிப்பு மேற்கொண்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெறுகை வழிகாட்டலை கடைபிடித்து கட்டிடத்தின் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து சுற்றாடல் அதிகாரசபைக்கு ஒப்படைக்க வேண்டும்.. |
| (ஊ) | கலவல யாய பிரதேசத்தில் மகாவலி கிராமத்தில் பாதைகள் தயாரித்தல் மற்றும் வயற் காணிகளில் கரடு முரடான பகுதியை மிருதுவாக்குவதற்காக ரம்பகென்ஓய வதிவிட திட்ட முகாமையாலர் அலுவலகத்தினால் அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளருக்கு 2013 – 2014 காலப் பகுதியில் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 11 மில்லியன் தொகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணத் தொகையில் ரூபா 2.88 மில்லியன் தொகை 2024 ஏப்ரல் 28 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | முற்பணம் தீர்க்காமை தொடர்பாக அவ்வப்போது கடிதங்கள் மூலம் நீர்ப்பாசன திணைக்களத்தினை அறிவுறுத்தப்பட்டு அந்தக் காலப் பகுதியில் கரடு முரடான பகுதியை மிருதுவாக்கப்பட்ட நிலப்பரப்பு 01 மற்றும் பொரு நிலப்பரப்பு 05 என்பனவற்றின் தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் தீர்த்தல் மேறகொள்ள முடியும் என அறிவிக்கின்றேன். | முற்பணத் தொகைகள் விரைவாக தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | எல் வலையத்தில் 02 மின் வேலிகள் நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 20.8 மில்லியனை விட கூடிய தொகையொன்று செலுத்தப்பட்டு 08 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்க்கப்படாத மீதியொன்றென கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ரூபா 11,074,476 இற்கான தொகையொன்று மீதியாக காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர் அனைத்துத் தகைமைகளும் (சாத்தியக்கூறு) பூரத்தி செய்திருந்தது. அவரை தெரிவு செய்யும் போது பெறுகை கோவையின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரரினால் இந்த இரண்டு ஒப்பந்த வேலைகளுக்குமாக ஒப்பந்த முகாமையாளர் என பொதுவான நபரொருவர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட ஒப்பந்த முகாமையாளர் களத்தில் இருக்க வேண்டிய நபரொருவராக காணப்படாமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு மூலம் அந்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஒப்பந்தக்காரின் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்த முகாமைத்துவ சேவைக்காக செலுத்த வேண்டிய தொகையில் 30 சதவீதம் கழித்து ஒப்பந்த வேலை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. | முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | வெளிஓய கஜபாபுரவிலிருந்து நெடுங்கேணி சந்தி வரையான பாதையை நிர்மாணிப்பத்றகாக ரூபா 390,085,714 தொகை 2018 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து கொடுப்பனவினை, தீர்க்கும் போது ரூபா 43,363,909 இற்கான மிகைக் கொடுப்பனவை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 18 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளிஓய கஜபாபுரவிலிருந்து நெடுங்கேணி சந்தி வரையான பாதையை நவீனமயப்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 346,721,805 தொகையாக காணப்பட்டதுடன், மீதித் தொகையாகிய ரூபா 43,363,909 இற்கான தொகைக்காக வெளிஓய சம்பத் நுவரவில் இருந்து கஜபாபுர வரை பாதையினை 1.95KM இற்கான தூரம் காபட் பரப்பி அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது இடை நிறுத்தப்பட்டிருந்தது. மகாவலி அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய மீதித் தொகை இதுவரை கிடைத்திருக்கவில்லை. | முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | கந்தளாய் சூரியபுர மகாவலி கங்கையின் பாதுகாப்பு அணைக்கட்டுக்கு சவால் ஒன்றாக படிந்திருந்த மணல் படிவு காரணமாக வெள்ள பாதுகாப்பு அணை அரிப்படைந்திருந்தது. அணைக்கட்டுக்கு எதிர்ப்பக்கமான தரையில் படிந்திருந்த மண் படிவினை அகழ்வு செய்து விற்பனை உழைக்கக்கூடிய இலாபத்திலிருந்து வெள்ள பாதுகாப்பு அணைக்கட்டை மறுசீரமைப்பதற்கான செயற்திட்டம் 2019 ஆகஸ்ட் 06 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி படிந்திருந்த 103,128 கியுப் மணலை அகற்றுதல் மற்றும் அதற்கு ஒத்த நிகழ்வாக வெள்ள பாதுகாப்பு சுவரினை மறுசீரமைத்தல் 06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு இணங்கி 2022 ஜூலை 19 திகதி வரை பல சந்தர்ப்பங்களில் இந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது. முக்கியமான கருமம் ஒன்றென 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 04 வருடங்களும் 07 மாதங்களும் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 07 திகதி வரை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கையின் படி 06 மாத கால வரையறையுள் 103,128 கியுப் மணல் எண்ணிக்கையொன்று அகற்றுவதற்கு மற்றும் 03 அணைக்கட்டு பாதுகாப்புச் சுவர் நிர்மாணிப்பதற்காக இணங்கியிருந்தது. அவ்வாறாயினும், 2022 ஜூலை 19 திகதி அளவில் பல சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2020, 2021 ஆண்டுகளின் போது ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் மற்றும் எரிபொருள் நெருக்கடி எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு முடியாமல் போனது என குறிப்பிட்ட கம்பனியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் படி குறிப்பிட்ட கருமங்களுக்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எண்ணிக்கைகள் சார் முரண்பாடுகளுக்காக அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (ஒ) | கலாவெவ சுற்றுலா பங்களா நவீனமயப்படுத்துதல் மற்றும் பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 12 திகதி ரூபா 40,490,644 இற்கான ஒப்பந்த வேலையொன்று கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் அதன் ஒப்பந்த வேலைப் பெறுமதி ரூபா 57,586,734 தொகை என திருத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 25 அளவில் அவற்றில் ரூபா 41,050,169 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட கட்டிடத்தை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது அனேகமான இடங்களில் சுவர்கள் வெடிப்படைந்து தரையோடுகள் பதரடைதல் மற்றும் வெடிப்படைதல் பளலுவெவ பக்கத்தில் இருக்கும் | குறிப்பிட்ட ஒப்பந்த வேலையின் கட்டிடங்கள் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் காணப்படாத குறைபாடுகள் பராமரிப்புக் காலப் பகுதியில் இனங்காணப்பட்டதுடன், அந்த நிர்மாண வேலை குறைபாடுகளை சரி செய்யும் படி ஒப்பந்தக்காரருக்கு அந்தந்த சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டு சில குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருந்ததுடன், அவ்வாறு சரி செய்யப்படாத குறைபாடுகள் மகாவலி அதிகாரசபையினால் சரி செய்யப்பட்டு அதற்குரிய செலவு ஒப்பந்தக்காரரின் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து அறவீடு | நீர்த்தேக்கம் சார்ந்த நிர்மாண வேலைகள் முறையான கட்டமைப்புத் திட்டமொன்றுடன் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதியின் கூரை பிரதான சுவரிலிருந்து அகழக்கூடிய நிலைமையில் பளலுவெவ பக்கத்தில் காணப்படும் குளக்கட்டு மற்றும் இன்டலொக் கற்கள் பரப்பப்பட்டிருந்த பகுதியில் குளக்கட்டை சார்ந்து இடைவெளி ஒன்று ஏற்பட்டிருத்தல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | செய்தல் மகாவலி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டது.<br><br>மேலும், பராமரிப்புக் காலப் பகுதியில் சரி செய்யப்பட்ட குறைபாடுகள் பராமரிப்புக் காலப் பகுதியின் பின்னர் மீண்டும் அவதானிக்கப்பட்டது.<br><br>அதாவது கட்டிடங்களின் சுவர்கள் வெடிப்படைதல், தரையோடு பதரடைதல் மற்றும் வெடிப்படையதல், பளலுவெவ பக்கத்தில் அமைந்துள்ள பகுதியின் கூரை பிரதான சுவரிலிருந்து விளகியிருத்தல், குளச் சுவர் மற்றும் இன்டலொக் பரப்பிய குளச் சுவருக்கு அண்மையில் இடைவெளியொன்று ஆக்கப்பட்டிருத்தல். | |
| (ஓ) | மகாவலி வலையத்தினுள் காட்டு யானைகள் மற்றும் மனித மோதல்களை குறைப்பதற்காக மின் கம்பிகள் தொங்கக்கூடிய விதமாக மின்வேலி நிர்மாணிப்பதற்காக மகாவலி அதிகரசபை மற்றும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் இணைந்து ஆரம்பத்தில் பீ வலையத்தில் அரலகம்வில, கந்தகாடு, சிங்கபுர இடையே மற்றும் சீ வலையத்தில் மகாவலி பயற்சி நிலையத்தை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதற்காக முறையே ரூபா 4,844,272 தொகை, ரூபா 9,234,319 தொகை மற்றும் ரூபா 8,000,000 தொகையாக முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், இவ்வாறு ஒரு நிறுவனத்திற்கு ஒப்பந்த வேலை சாட்டுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையில் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கூறியவாறு ஒப்பந்த வேலைகள் வழங்குதல் மற்றும் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னர் | பண்ணைகளை சுற்றி மின்வேலி நிர்மாணிப்பதற்காக அரச நிறுவனம் ஒன்றான ''இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு'' மகாவலி அதிகாரசபையின் பெறுகை வழிகாட்டல் கோவையின் மேல் ஒப்பந்த வேலை செய்முறை (Direact Contracting) கீழ் காணப்படும் பிரிவு 3.7.1 இற்கு இணங்க அந்த ஆணைக்குழுவிற்கு இலக்கம் 2021/04, 2021/04-16 கொண்ட 2021.04.23 திகதிய அங்கீகாரங்களின் கீழ் குறிப்பிட்ட முற்பணத் தொகைகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி அதன் மேற்பார்வை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த நிர்மாண வேலை அலுவல்களை பூர்த்தி செய்ய வேண்டும். |

முற்பணம் என கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த யானை வேலிகள் உரிய முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என அதிகாரசபையின் தொழில்நுட்ப குழு அல்லது வேறு தரப்பினரால் உறுதிப்படுத்தியிருக்காமை மற்றும் உரிய முறையில் பில் பத்திரம் சமர்ப்பிக்கப்படாமையினால் முற்பணங்களை தீர்க்க முடியாதிருந்தது. மேலும், கணக்காய்வினால் பௌதீக ரீதியாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் இந்த யானை வேலிகள் அழிவடைந்திருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2023 ஆண்டில் சீ வலையத்தில் குளங்கள் மற்றும் பிரதான கால்வாய்கள் 02 அலகுகளின் பராமரிப்பு அலுவல்கள் தேகாரோக்கிய அலுவல்கள் உத்தியோகபூர்வ வீட்டு முகாம்கள் மற்றும் மகாவலி விளையாட்டுத் திடலின் நாளாந்த பராமரிப்பு அலுவல்கள் மற்றும் சுத்திகரிப்பு அலுவல்கள் வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்தின் வீட்டுத் தோட்டம் விவசாயப் பிரிவின் நாட்டுமேடை நாளாந்த பராமரிப்பு அலுவல்கள், தொழில்நுட்ப சேவைப் பிரிவு, இயந்திர வேலைத்தளத்தின் களஞ்சியம் மற்றும் அலுவலக நாளாந்த பராமரிப்பு அலுவல்கள் மற்றும் 07 பிரிவுகளில் நீர்க் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்காக விவசாய அமைப்பு மட்டத்தில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பதற்கு பதிலாக ரூபா 18,905,600 தொகை பெறுமதியான சிறு அளவிலான ஒப்பந்த வேலைகள், சிறு அளவிலான 35 ஒப்பந்த வேலைகள்(உழைப்பு ஒப்பந்த வேலை) தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | வருடாந்தம் வலையத்தில் காணப்படும் நிர்மாண வேலை அலுவல்கள் மற்றும் பராமரிப்பு அலுவல்களுக்கு மேலதிகமாக வலையத்தின் நீர் கட்டுப்பாட்டு அலுவல்கள், தேகாரோக்கிய அலுவல்கள், சுத்தப்படுத்தும் மற்றும் பல்வேறு கருமங்களுக்காக உழைப்பாளிகள் மாத்திரம் தேவைப்படுகின்ற உழைப்பு ஒப்பந்த வேலை வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றிக்கொள்ளப்பட்டிருந் தது. இந்தக் கருங்களை மேற்கொள்ளும் போது உழைப்பாளிகள் பெற்றுக்கொள்ளத் தேவைப்படுகின்றது. மேலும், தொழிலாளர்கள் நிறுவனத்திற்கு சேர்த்துக்கொள்ள முடியாமையால் மேற்கொள்ளப்பட வேண்டிய இந்தக் கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒப்பந்த வேலைகள் கையளிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுதல் அத்தியவசியமாகும். | தகைமையுடைய விவசாய அமைப்புக்கள் மூலம் ஒப்பந்த வேலை மேற்கொள்ள வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பதவியணி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை மகாவலி அதிகாரசபையின் 145 பதவிகளுக்காக நாளாந்த 4,859 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு 118 பதவிகளுக்களில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,390 ஆகும். | ஏற்றுக்கொள்கின்றேன். தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 05/2022 மற்றும் அறிவுரையின் படி அனைத்து தரப்படுத்தப்பட்ட பதவியுயர்வுகள் மற்றும் பதவியுயர்வுகள் வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட போதும், 2023.05.23 திகதி நடைபெற்ற அரச தொழில்முயற்சிக் குழுக் கூட்டத்தில் (COPE) 2023.03.31 திகதியிலுள்ளவாறு காணப்பட்ட வெற்றிட எண்ணிக்கையை உள்ளக ரீதியாக மற்றும் வெளிரீதியாக ஆட்சேர்க்கக்கூடிய 326 பதவி வெற்றிடங்கள் ஐ நிரப்பிக்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்புக் குழுவினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி ஆரம்ப சேவை வகையான பதவி வெற்றிடங்களுக்காக 97 பல்கரும அபிவிருத்தி உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிலவுகின்ற வெற்றிடங்களை மீளாய்வு செய்து தேவையான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 04 அங்கீகாரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் 08 அங்கீகரிக்கப்படாத பதவிகள் தொடர்பாக காணப்பட்ட மிகை ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 50 தொகை மற்றும் 11 தொகையாக என மொத்தம் 61 ஆக காணப்பட்டது. | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 மற்றும் 25/2014(I) படி இலங்கை மகாவலி அதிகாரசபை முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் அல்லாத) சேவை வகையில் (MA 1 – 2) இலிருந்து ஆரம்ப தொழில்நுட்பம் அல்லாத சேவை வகை (PL 1) வரை தொடர்ச்சியாக 180 நாட்களுக்கான திருப்திகரமான | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக உத்தியோத்தர்கள் சேர்க்கப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு கடிதம் மாத்திரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி, 04 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் தொடர்பாக மிகை ஊழியர் எண்ணிக்கை காட்டப்படுகின்றது. அதேபோல் பழைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் அவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் வைக்கப்பட்டதனால் ஊழியர் மிகையொன்று காட்டப்படுகின்றது. | |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சிரேஷ்ட துறைகளில் காணப்பட்ட 34 பதவிகளில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 65 சதவீதமான உயர்ந்த பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிலவுகின்ற வெற்றிடங்களை மீளாய்வு செய்து தேவையான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | அதிகாரசபையின் 120 உத்தியோகத்தர்கள் கடமை அணவல் செய்வதற்காகவும், 04 உத்தியோகத்தர்கள் கடமை நிறைவேற்றுவதற்காகவும், மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் பதில் கடமையாற்றுவதற்காகவும், நியமனம் செய்யப்பட்டுள்ளதெனவும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் 2023 ஒப்தோபர் 05 திகதி அறிவித்திருந்த போதிலும், 2024 ஏப்ரல் 04 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 37 பதவிகளுக்குரிய பதில் கடமை, கடமை நிறைவேற்றுதல் மற்றும் கடமை அணவல் செய்தலின் கீழ் வழங்கியிருந்த | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 05/2022 மற்றும் 2022.09.02 திகதிய கடிதத்தின் மூலம் அரச செலவுகள் கடுமையாக கட்டுப்படுத்தல் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த அறிவுரையின் படி அனைத்து தரப்படுத்தப்பட்டுள்ள பதவியுயர்வுகள் மற்றும் பதிவுயர்வுகள் வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டு இறுதியளவில் 96 பதவிகளில் மாத்திரம் சேவையாற்றப்பட்டுள்ளது. கடமைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக இந்த நியமனங்கள் சேவையின் தேவைப்பாட்டின் மீது நிறைவேற்றப்படுவதனால் | நிலவுகின்ற வெற்றிடங்களை மீளாய்வு செய்து தேவையான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமனங்களின் எண்ணிக்கை 96 ஆகும். | மற்றும் நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்வதற்கு இது தகைமையொன்றாக காணப்படாமையால் மற்றும் வெளி ஆட்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நியமனம் ஒன்றாக காணப்படாமையால் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் படி இந்த நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (v) | அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளின் படி அந்த அனைத்து பதவிகளுக்குமான நியமன அதிகாரி பணிப்பாளர் சபையாக காணப்பட்ட போதிலும், கடமை அணவல், கடமை நிறைவேற்றுதல் மற்றும் பதில் கடமைக்காக 2018 ஆண்டு முதல் பணிப்பாளர் நாயகத்திற்கு மேலதிகமாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம் மற்றும் நிதி) இனால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. | மேல்கூறிய பதில் பொருத்தமானது. | பதவி ஒன்றின் பதில் கடமைக்காக அல்லது கடமை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (vi) | அதிகாரசபையினால் 2018, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளின் போது கடமை அணவல் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்த பதவிகளில் கடமை அணவல் செய்யப்பட்ட காணப்பட்டது. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக வேறொறு பதவியில் நீண்ட காலம் தொடர்ச்சியாக கடமை நிறைவேற்றுவதற்காக வெற்றிட பதவிக்காக உள்ளக ரீதியாக அல்லது விண்ணப்பங்கள் கோறப்பட்டு தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் கடமை அணவல் செய்யும் அடிப்படையில் நியமனம் | மேற்கூறிய பதில் பொருத்தமானது. | வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்ய வேண்டும். |

வழங்கப்பட்டது.

### 3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெகியத்தகண்டிய வதிவிட முகாமையாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த இலக்கம் PF-0845 வாகனம் 2019 திசெம்பர் 22 திகதி விபத்துக்கு உள்ளாகியது. நிதிப் பிரமாணம் 104(4) இன் படி நட்டம் ஏற்பட்ட நாளில் இருந்து 03 மாதங்களுக்குள் சேதம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 மே 22 அதாவது விபத்து ஏற்பட்டு 03 வருடங்களும் 05 மாதங்களும் பின்னரேயாகும். வாகனம் 2023 மார்ச் 23 திகதி ரூபா 9,991,909 இற்கான மதிப்பீட்டொன்றின் மீது யுனைடட் மோட்டர்ஸ் நிறுவனத்தின் அனுராதபுர கிளைக்கு திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், காப்புறுதி நட்டஈடு ரூபா 3,700,000 தொகை மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவிலும் திருத்த வேலை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், காப்புறுதி இழப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாத திருத்த வேலைச் செலவுகளாகிய ரூபா 6,291,909 இற்கான தொகை குறிப்பிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர் வேலை இடைநிறுத்தப்பட்ட காலத்திற்காக கணிக்கப்பட்ட நிலுவை இறுதி மாதச் சம்பளத்தின் படி செலுத்த வேண்டிய தொகை ரூபா 3,493,376 தொகையாகும். நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட தொகை ரூபா 6,217,909 தொகையாகும். அதன்படி, தற்போது நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகையாவது ரூபா 2,724,532 என எனது 2024.07.22 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்தும் படி அவருக்கு 2024.09.09 திகதி கோறிக்கைப் பத்திரம் அனுப்பப்பட்டது. அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. அதன்படி, ரூபா 2,724,532 தொகை சட்டத்தின் மூலம் அறவீடு செய்வதற்காக அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட மேற்கூறிய வாகன திருத்த வேலை மேற்கொண்டு ஓட்டத்திற்காக பயன்படுத்தும் படி 2024.05.14 திகதி நடைபெற்ற 359 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கபட்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வாகனத்தை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கும் பொறுப்புச் சொல்ல வேண்டி தரப்பினரிடம் அறவீடு செய்தற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான வளவ வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த WP JF – 3105 இலக்கம் கொண்ட மோட்டார் வாகனம் 2004 – 2005 காலப் | இந்த கப் வண்டி காணாமல் போதல் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1) பிரகாரம நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சுச் செயலாளரினால் அது தொடர்பான நிதிப் | வெளித்தரப்பினர்களுக்கு வாகனங்கள் விடுவிக்கும் போது முறையான அங்கீகாரத்துடன் செயற்பட வேண்டும். |

பகுதியில் அங்கீகாரம் இன்றி வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததென முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அதற்காக 2024 ஏப்ரல் 28 திகதி வரை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

பிரமாணம் 104 விசாரணை அலுவல்களுக்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு குறிப்பிட்ட விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆரம்ப விசாரணை அறிக்கையின் படி மகாவலி மற்றும் ஆற்றுப் படுக்கை அபிவிருத்தி மற்றும் ரஜரட அபிவிருத்தி அமைச்சரின் அந்தரங்கச் செயலாளராகிய திரு. எஸ்.பீ. விஜேகோனினால் பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்கொண்டிருந்த கோரிக்கைக்கு அமைச்சுப் பதவியணிக்கு வழங்கப்பட்டிருந்தது. அப்போது வளவ வலையத்தின் போக்குவரத்து உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. கே.ஜி, சுமனதாச அவர்களினால் 2005.05.11 திகதிய பிரதி வதிவிட திட்ட முகாமையாளர் (தொழில்நுட்ப சேவை) இற்கு கடிதம் ஒன்று சமர்ப்பித்து அப்போதைய வதிவிட திட்ட முகாமையாளரிடம் வாய்மொழி மூல அறிவுரையின் படி கப் வண்டி அவரினால் எடுத்துச் செல்லப்பட்டு கௌரவ அமைச்சரின் அந்தரங்க செயலாளரின் அறிவுரையின் படி பணிப்பாளர் (போக்குவரத்து மற்றும் பராமரிப்பு) அவர்களின் தீர்மானத்தின் மீது பாதுகாப்பு வழிகாட்டி திரு. டப்ளியூ.பீ. எதிரிவீர ஜயவர்தன அவர்களினால் முறைப் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வடிவிட திட்ட முகாமையாளர் (வளவ) இனால் பிரதான போக்குவரத்து உத்தியோகத்தருக்க அனுப்பப்பட்டிருந்த 2011.03.08 திகதிய கடிதத்தின் படி கப் வண்டி கௌரவ மைதிரிபால சிரிசேன அமைச்சரின்

| | | | |
|---|---|---|---|
| | | பதவியணினருக்கு வழங்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (இ) | வாகனங்களை அப்புறப்படுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி 2019 ஆண்டு 45 வாகனங்கள் வாகனங்களாக அப்புறப்படுத்துவதற்கும் 63 வாகனங்கள் சிதைவடைந்த இரும்பு என அப்புறப்படுத்துவதற்கும் 31 வாகனங்கள் மீண்டும் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. சேதமடைந்து இரும்பு என அப்புறப்படுத்தப்பட்ட 63 வாகனங்களின் செஸி இலக்கங்கள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களில் 25 இன் உரிமை அதிகாரசபைக்கு காணப்படவில்லை. | உரித்தினை உறுதிப்படுத்தாத ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த திருத்த வேலை மேற்கொள்ளல் பயனற்றதென காணப்படின் பெறுமதி மாத்திரம் காணப்பட்ட வாகனங்கள் பாரிய எண்ணிக்கையொன்று வளாகம் முழுவதும் முறைசாரா விதமாக குவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சுற்றாடல் சிக்கலகள் விடுவிக்கப்படாமை தொடர்பாக ஊடகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிறுவனத்தை அகௌரவப்படுத்தும் செய்திகள் பாரிய சிக்கல்கள் கடந்த காலங்களில் இனங்காணப்படாத சிதைவடைந்த வாகனங்களினால் ஏற்பட்டிருந்தது. தொடர்ந்தும் வளாகத்தில் தக்கவைப்பதனால் பொருளாதார ரீதியாக நிறுவனத்திற்கு அனுகூலம் ஏதும் கிடைக்காமையால் இவ்வாறு இனங்காணப்பட்ட சிதைவடைந்த வாகனங்கள் 2023 ஆண்டில் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலம் ரூபா 6.4 மில்லியனிற்கான வருமானம் ஒன்று உழைக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னர் வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2014 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்ட கொத்மலை அணைக்கட்டின் பராமரிப்பு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த பாரம்தூக்கி இயந்திரம் 2017 திசெம்பர் 29 திகதி திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு ரூபா 9.8 மில்லியன் தொகை ஒன்று குறிப்பிட்ட திருத்த வேலை மேற்கொண்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த திருத்த வேலையின் பின்னர் இயந்திரத்தின் ஹைட்ரோலிக் ஹோஸ் | கொத்மலை வேலைத் தளத்திற்கு 1985 ஆண்டு பாரம் தூக்கிப் பொறி பெற்றிருந்ததுடன், அதன் என்ஜினில் பிரதான திருத்த வேலையொன்று 2017 திசெம்பர் 29 திகதி ரூபா 9.8 மில்லியன் செலவிடப்பட்டு திருத்த வேலையொன்று மேற்கொள்ளப்பட்டு அந்த திருத்த வேலையின் பின்னர் செயற்படுத்தும் போது அதன் **Hydraulic** முறைமையின் திருத்த வேலை மேற்கொள்ள நேரிட்டிருந்தது. இயந்திரம் 32 | இயந்திரத்தின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையில் குழாய் வெடிப்படைந்திருந்தால் இயந்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கருமங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்று வைக்கப்பட்டு காணப்பட்டது. | வருடங்கள் பழமையாக இருந்தமை அதற்கான காரணமாகும். தற்போது இந்த பொறியின் **Hydraulic** முறைமை போலவே அனைத்து டயர்களிலும் பாரியளவில் சேதமடைந்திருந்ததனால் இந்த இடரினை சரி செய்வதற்காக ரூபா 10 மில்லியனிற்கு அண்மித்த தொகையொன்று செலவிட நேரிடும் என பணிப்பொறுப்பு பொறியியலாளரினால் 2024.10.11 திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த திருத்த வேலை அலுவல்கள் மேற்கொண்ட பின்னரும் இயந்திரம் பழமையானதால் மீண்டும் ஏற்படக்கூடிய திருத்த வேலைகள் மற்றும் தேவையான உதிரிப் பாகங்களை சந்தையில் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருப்பதால் இந்த இயந்திரத்தை திருத்த வேலை செய்வது ஆக்கபூர்வமானது அல்ல. | |
| (உ) | நீர்ப்பாசன அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவனத்தின் படி அமைச்சுக்கு சொந்தமான 241 வாகனங்கள் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை அதிகாரசபைக்கு உரித்தாக்கிக்கொள்வதற்காக 2024 மே 29 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 46 வாகனங்கள் தொடர்பாக தகவல்கள் காணப்படாமையால் போக்குவரத்துப் பிரிவின் ஆவணங்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல், அந்த வாகனங்களில் இலக்கம் 56 – 8184 கொண்ட வாகனம் 2023 ஆண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பேன். | வாகனப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியதுடன், உரிமையை உறுதிப்படுத்தி அப்புறப்படுத்த வேண்டும். |